பாகிஸ்தான்



பக்கம் 18



# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 263 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 31, சனி 16.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுக்கம்: 1008 hPa
வெளிச்சத்தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

## சிறப்பாக நடந்துமுடிந்த மடு ஆவணித் திருவிழா

மன்னார், ஓக.16

மடு அன்னையின் ஆவணித் திருவிழா நேற்று சிறப்பாக நடந்து முடிந்தது. சுமார் 6 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தனர்.

கொழும்பு மாவட்ட பேராயர் வணக்கத்துக்குரிய கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தலைமையில் ஆயர்கள் ஐவரது பிரசன்னத்தில் நேற்றுக் காலை 6.15 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்தாலியில் இருந்து வந்திருந்த இரண்டு குருக்கள் உட்பட, ஆயர்கள் மற்றும் 200க்கும் அதிகமான குருக்கள் திருவிழாவில் பங்கு கொண்டிருந்தனர்.

மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்

தமிழ், சிங்களம், இலத்தீன் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆசியுரை நடத்தப்பட்டதைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனி இடம்பெற்றது. திருவிழாவில் 6 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை, காலி மறை மாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க, அநுராதபுரம் மறை மாவட்ட ஆயர் மேதகு நோபேட் அந்திராடி

22 ஆம் பக்கம் பார்க்க



# மிரட்டலுக்கு அஞ்சாது நவிப்பிள்ளை செயற்பட்டதாலேயே அரசுக்கு சீற்றம்

## கொழும்பு அரசின் விமர்சனத்துக்கு இரா. சம்பந்தன் பதிலடி



"ஏனையோர் மீது குற்றஞ்சாட்டுவதை விட்டுவிட்டு, தாம் விட்ட தவறுகளைத் திருத்திக் கொள்ள அரசு முன்வர வேண்டும்."

கொழும்பு, ஓகஸ்ட் 16

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை அரசின் அச்சுறுத்தல்கள்,மிரட்டல்களுக்கு அடிபணியாது - பக்கச்சார்பின்றி- நேர்மையாக - நீதியாகச் செயற்பட்டு வருகின்றார். அதனால் ஆத்திரம் கொண்டுள்ள இலங்கை அரசு அவர் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கி விமர்சித்து வருகின்றது - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

அரசு இவ்வாறு ஏனையோர் மீது குற்றஞ்சாட்டுவதை விட்டு விட்டு, தாம் விட்ட தவறுகளைத் திருத்திக் கொள்வதுடன் - தன்னால் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதே நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லது - என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்த அறிக்கையொன்றில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் செயற்பாடுகளாலேயே இலங்கை விவகாரம் சர்வதேசமயமாக்கப்பட்டது என்றும்- நவநீதம்பிள்ளை பக்கச்சார்பாக செயற்படுகின்றார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டி

22 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக மீனவர் பிரச்சினை; சென்னையில் இன்று பேச்சு

சென்னை, ஓக.16

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் இன்று சென்னையில் தமிழக மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன், இந்திய மத்திய அரசைச் சார்ந்த குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர்.

கச்சதீவுப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும்போது இலங்கைக் கடற்படையினர் கைது செய்வது தொடர்பில் உரிய தீர்வைப் பெற்றுத்தரக் கோரியும், இலங்கைக் கடற்படையினரால் பறிக்கப்பட்ட படகுகளை மீளப் பெற்றுத்தரக் கோரியும், இழுவைப் படகுகளுக்குப் பதிலாக மாற்றுப் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்க அனுமதிக்கக் கோரியும் பேச்சு நடத்தவுள்ளோம் என்று மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். அத்துடன் இந்தப் பேச்சின்போது, அடுத்த வாரம் கொழும்பு சென்று பேச்சு நடத்துவது குறித்தும் ஆராயப்படவுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இன்றைய சந்திப்பின்போது இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் தொடர்பிலும், கொழும்பில் நடைபெறவுள்ள பேச்சுத் தொடர்பிலும் முக்கிய முடிவுகள் எட்டப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

22 ஆம் பக்கம் பார்க்க

## போரால் பாதிப்புற்ற தமிழ் மக்களை மடுப் பதியில் சந்திக்கிறார் பாப்பரசர்

### தைப்பொங்கல் தினத்தன்று விசேட ஆராதனை



யாழ்ப்பாணம், ஓக. 16

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் பாப்பரசர் பிரான்சிஸ், போரினால் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்த தமிழ் மக்களையும், அங்கவீனர்களையும் மடுத் திருத்தலத்தில் சந்தித்து அவர்களின் துன்ப துயரங்களைக் கேட்டறிவதுடன், அவர்களுக்கு விசேட ஆசீர்வாதமும்

22 ஆம் பக்கம் பார்க்க

## போர்க் குற்றங்கள் நடந்திருக்க கூடும்



கரணமடிக்கிறார் ரம்புக்வெல

பக். 3

## மஹிந்த மண் கவ்வினால் குடும்பமே அல்லாடும்

பக்கம் 14

## இராணுவம் எனில் இலவசம் மக்களுக்கு மட்டும் கட்டணம்

### வீடமைப்பு அதிகார சபையின் நடவடிக்கை குறித்து விசனம்

யாழ்ப்பாணம், ஓக.16

14 ஆண்டுகளால் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் காணி இருந்தபோது, அதற்குரிய கட்டணம் எதனையும் கோராத தேசிய வீடமைப்பு அதிகார சபை தற்போது அங்கு மக்கள் குடியமர முற்படும் போது மட்டும் கட்டணங்களைக் கோருகின்றது என்று விசனம் தெரிவிக்கிக்கப்படுகின்றது.

வரணி இடைக்குறிச்சியில் 10 வீட்டுத்திட்டத்துக்குரிய, தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் பொது மக்கள் வாழ்ந்து வந்தனர். 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது மேற்படி 10 வீட்டுத்

22 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாநகர சபைக் கடைகள் தில்லுமுல்லு குறித்து ஆரம்பமாகின்றன விசாரணைகள்



யாழ்ப்பாணம், ஓக.16

யாழ்ப்பாணம் மாநகர சபையால் நகர்ப்பகுதியில் குத்தகைக்கு விடப்பட்ட கடைகள் உபகுத்தகைக்கு விடப்பட்ட விவகாரம் தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும், முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று தெரியவருகின்றது.

யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் இரு தடவைகள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்

22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கை - இந்திய உயர்மட்ட பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

## இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சின்ஹா தெரிவிப்பு

கொழும்பு, ஓக.16

இலங்கை ஜனாதிபதி மற்றும் வெளி விவகார அமைச்சரின் அண்மைய இந்தியப் பயணங்களைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உயர்மட்டப் பேச்சு மீண்டும் ஆரம்பமாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார் இலங்கைக்கான இந்தியத்தூதுவர்சின்ஹா.



கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்று நடைபெற்ற இந்தியாவின் 68 ஆவது சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இலங்கைக்கு இந்தியாவின் இதயங்களில் என்றும் சிறப்பான இடமுள்ளது. நூற்றாண்டு கால கலாசார, நாகரிக, மொழித் தொடர்புகள் தற்போது தற்காலத்துக்கு அவசியமான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாக மலர்ந்து வருகின்றன.

இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை வர்த்தக மற்றும் முதலீட்டு அதிகரிப்புக்கு வழிகோலியுள்ளது. அதுவே இரு தரப்பு பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளில் அடித்தளமாக விளங்குகிறது.

இந்தியாவின் புதிய பிரதமரின் கொள்கைகள் காரணமாக மக்களுக்கு இடையிலான உறவுகளும், கலாசார உறவுகளும் மேலும் வலுப்படும். இந்தியா பெருமளவு இலங்கை மாணவர்களுக்கு இடைநிலைக் கல்விக்கான சந்தர்ப்பங்களை வழங்கி வருகிறது. இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் சகாவாக இருப்பதை இந்தியா பெருமையாகக் கருதுகிறது."- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# கத்தியுடன் நடமாடியவரை மடக்கினர் பொதுமக்கள்

யாழ்ப்பாணம், ஓக.16

நள்ளிரவுவேளை இடுப்பில் கத்தியை மறைத்துக் கொண்டு சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் சுன்னாகம் பொலிஸ் பிரிவில் நேற்றுமுன் தினம் இரவு 11 மணியளவில் நடந்துள்ளது.

சுமார் 22 வயது மதிக்கத்தக்க குறித்த நபர் புன்னாலைக் கட்டுவன் பகுதியைச் சேர்ந்தவர். அவரின் நடமாட்டம் தொடர்பில் சந்தேகம் கொண்ட பொதுமக்கள் அவரை மடக்கிப் பிடித்து சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த நபர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-4)

# வெளிநாட்டவர்களுக்கு காணி விற்க முடியாது

## விரைவில் வரவிருக்கிறதாம் சட்டம்

கொழும்பு, ஓக.16

வெளிநாட்டுப் பிரசைகளுக்குக் காணிகளை விற்பனை செய்வதைத் தடுக்கும் சட்ட மூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இந்தச் சட்டம் குறித்த யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

வெளிநாட்டுப் பிரசைகள் இலங்கையில் காணிகள் கொள்வனவு செய்வதைத் தடை செய்யும் வகையில் இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்படவுள்ளது. அரச அல்லது தனியார் காணிகளை விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கும் வகையிலேயே இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

**அரச அல்லது தனியார் காணிகளை விற்பனை செய்வதற்குத் தடைவிதிக்கும் வகையிலேயே இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.**

குறித்த சட்டத்துக்கு சட்டமா அதிபர் அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், அரசின் அபிவிருத்திப் பணிகளுக்கான காணிகளின் தேவைப்பாடு அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். ஆயினும் இராஜதந்திர அலுவலகங்களுக்கு இந்தத் தடை பொருந்தாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# நிலக்கடலை தொண்டையில் சிக்கியதால் குழந்தை சாவு

கொழும்பு, ஓக.16

நிலக்கடலை தொண்டையில் சிக்கியதில் ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் கம்பஹா, உடகம்பல பிரதேசத்தில் நடந்துள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று கம்பஹா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ற)

# மடுத் திருவிழாவைப் படம்பிடித்த சிறிய வகை தன்னியக்க விமானம்

மன்னார், ஓக.16

மன்னார் மடு திருத்தலத்தில் ஆவணி மாத திருவிழா நேற்று விமரிசையாக நடந்துகொண்டிருந்த சமயம் கமரா பொருத்திய ஆளில்லா தன்னியக்க சிறிய ரக விமானம் அங்கு பறப்பில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

குறித்த வகை தன்னியக்க விமானம் படப்பிடிப்புகளுக்காகப் பயன்படுத்தப்படும் சிறிய ரக விமானமாகும். அது தரையிலிருந்து தன்னியக்கக் கருவி மூலம் இயக்கப்படக் கூடியது.



அந்த வகை விமானம் ஒன்றே நேற்றையதினம் திருத்தலத் திருவிழாவின்போது பறப்பில் ஈடுபட்டு படம் பிடித்ததை அவதானிக்க முடிந்துள்ளது. அதை மக்கள்ஆச்சரியத்துடன்வேடிக்கை பார்த்ததையும் காண முடிந்தது.

திருவிழா முடிவுறும் வரை அந்தச் சிறிய விமானம் பறப்பில் ஈடுபட்டிருந்தது என்று அங்கிருந்த மக்கள் தெரிவித்தனர். ஆயினும் அது யாரால் இயக்கப்பட்டது என்பது குறித்து தகவலேதும் இல்லை. (ற-56)

















வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆவணித் திருவிழா நேற்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் திருவிழாவில் கலந்துகொண்டிருந்தனர். நேற்று நடைபெற்ற திருவிழாக் காட்சிகளின் தொகுப்பு.

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 31 சனிக்கிழமை (16.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 263

# போரின்போது குற்றங்கள் இடம்பெற்றிருக்கக் கூடும்

## கரணமடிக்கிறார் அமைச்சர் ரம்புக்வெல

கொழும்பு ஓகஸ்ட் 16

**போரின்போது எல்லாம் நூறு சதவீதம் சரியாக நடந்தது என்று கூறமுடியாது. மக்கள் மீட்கின்ற நடவடிக்கை மனிதாபிமானத்துடன் நேர்மையாக நடத்தப்பட்டது. ஆனால் நடைமுறையில் குற்றங்கள் இடம்பெற்றிருக்கக் கூடும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவையின் முடிவை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஐ.நா விசாரணைக் குழு முன் எவரும் சாட்சியம் வழங்கலாம். அதற்கு உரிமை உள்ளது. ஆனால், அவர்கள் வழங்கும் சாட்சியத்தை ஆராய வேண்டும். வழங்கப்படும் சாட்சியத்தின் அடிப்படையிலேயே அவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவு செய்ய முடியும். அதன் பின்னரே அந்த சாட்சியம் அரசமைப்புக்கு முரணானதா? இல்லையா? என்று முடிவு செய்ய முடியும்" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"மேலும், வடக்கில் 3 தொடக்கம் 4 லட்சம் வரையான மக்களை மீட்கின்ற அந்தக் கடினமான நடவடிக்கையின்போது குற்றங்கள் நடந்திருக்க வாய்ப்புகள் உள்ளன. அந்த மனிதாபிமான நடவடிக்கை முன்னெப்போதுமில்லாத வகையில் மிகவும் மனிதாபிமானத்துடன் நடத்தப்பட்டது. அதற்கு நேர்மையான நோக்கம் இருந்தது. ஆனால் நடைமுறையில் குற்றங்கள் இடம்பெற்றிருக்கக்கூடும். சிலர் தமது மக்களை இலங்கை கொன்று குவித்ததாகக் காண்பிக்க முனைகின்றார்கள். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பெற்ற வெற்றி இனிமையானதொரு பயணமல்ல. எல்லாமே நூறு சதவீதம் சரியாக நடந்தது என்று கூறமாட்டேன்" என்றும் அவர் கூறினார். (த-5)

## பாடசாலை கல்விக் காலத்தை செப். - ஓகஸ்ட் வரையாக்குக

### வடக்கு மாகாண கல்வி முறைமை மீளாய்வு மாநாட்டில் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக 16

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் ஜனவரி மாதத்தில் தொடங்கி டிசெம்பரில் நிறைவடையும் பாடசாலைக் கல்விக் காலத்தைச் செப்ரெம்பரில் தொடங்கி ஓகஸ்ட்டில் நிறைவடையும் வகையில் மாற்றியமைத்து, ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளை முறையே ஜூன், ஜூலை மாதங்களில் நடத்துவதற்கு கல்வி அமைச்சுக்கு விண்ணப்பிக்கவேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்வி முறைமை மீளாய்வு மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரலில் நடந்த இந்த மாநாட்டில் இந்த விடயம் முன்வைக்கப்பட்டது. இது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மாநாட்டில் எடுக்கப்பட்ட பல தீர்மானங்கள் அண்மையில் புத்தகமாக வெளியிடப்பட்டன. அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முதல் 10 தீர்மானங்களில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அந்த 10 தீர்மானங்களும் வருமாறு:-

1. தற்பொழுது முன்னிலைப்படுத்தப்படும் எழுத்து மூலமான விடையளிக்கும் பரீட்சை முறைக்குப் பதிலாக மாணவர்களின் எண்ணக் கருவைஅடிப்படையாகக்கொண்ட

(22 ஆம் பக்கம் பார்க்க)



முல்லைத்தீவு - மாங்குளம் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பிக்கப் வாகனம் ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இதன்போது சாரதி சிறு காயங்களுடன் உயிர் தப்பினார்.(த)

## ஒக்ரோபரில் யாழ்தேவி வருகிறது யாழ்ப்பாணம்

யாழ்ப்பானம், ஒக.16

யாழ்தேவி ரயில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தை வந்தடையுமென இலங்கைக்கான இந்தியப் துணைத் தூதுவர் டி.எஸ். மூர்த்தி நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இந்தியாவின் 68ஆவது சுதந்திரதினம் நேற்று யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் கொண்டாடப்பட்டது. இதில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்தேவி ரயில் ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தை வந்தடையும். அதே நேரம். மடு - தலைமன்னார் சேவை டிசெம்பர் மாதத்தில் ஆரம்பமாகும். அத்துடன் 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டம் பெரும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இன்று வரை 14 ஆயிரத்து 514 வீடுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. 19 ஆயிரத்து 703 வீடுகள் கட்டுமானத்தின் பல்வேறு கட்டங்களில் உள்ளன.

கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வுக்குச் செல்லும் போதெல்லாம் வன்னிப் பயனாளிகள் இந்திய அரசு மனிதாபிமான உதவிக்கான தமது மனப்பூர்வமான

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் 20 பேர் மடுவில் வைத்து விடுதலை



மன்னார், ஒக. 16

கடந்த மாதம் மன்னார் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 20 இந்திய மீனவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை மடுவில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவனைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஒக 16

நெல்லியடியைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவன் முல்லைத்தீவுக்குச் சென்ற நிலையில் காணாமற்போயுள்ளதாக புதுக்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கைக்குண்டுகள் மீட்பு



வவுனியா, ஒக 14

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டன என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் உள்ள அலகல்ல, சீர்வேகம குளத்தை சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வர்கள் பையில் சுற்றப்பட்டிருந்த இரண்டு கைக்குண்டுகளை அவதானித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குப் பொலிஸாருடன் வந்த விசேட அதிரடிப்படையினர் நீதிமன்றின் உத்தரவுக்கமைய இரு கைக்குண்டுகளையும் மீட்டுச் செயலிழக்கச் செய்தனர். (த-402)

## கச்சதீவில் கொடியேற்றச் சென்றோர் இராமேஸ்வரம் பொலிஸாரால் கைது

இராமேஸ்வரம், ஒக. 16

இந்தியச் சுதந்திர தினத்தில் கச்சதீவுக்கான உரிமையை வலியுறுத்தி அங்கு தேசியக் கொடியேற்றுவதற்குப் பேரணியாகச் சென்ற பாரத் மக்கள் கட்சியைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்டோர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தமிழர்களுக்குக் கச்சதீவு பகுதியில் உள்ள பாரம்பரிய உரிமையை நிலைநாட்டும் விதமாக 68 ஆவது சுதந்திர தினமான நேற்று அங்கு சென்று இந்தியத் தேசியக் கொடி ஏற்றக் கோவையில் இருந்து பாரத் மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் அண்ணாத்துரை தலைமையில் 30 இக்கும் மேற்பட்டவர்கள் வாகனத்தில் இராமேஸ்வரத்துக்குச் சென்றுள்ளனர்.



இராமேஸ்வரம் ரயில் நிலையத்திலிருந்து இந்தியத் தேசிய கொடியுடன் பேரணியாகக் கடற்கரைக்குச் சென்று படகு மூலம் கச்சதீவு செல்ல இந்தக் குழுவினர் திட்டமிட்டனர். இவர்கள் ரயில் நிலையத்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இயங்க மறுத்த மோ.சைக்கிளை தீ வைத்து எரித்தார் மருத்துவர்

வலி.வடக்கு ஒக. 16

ஓட மறுத்த மோட்டார் சைக்கிளை வீதியில் வைத்துத் தீயிட்டுக் கொளுத்தினார் மருத்துவர் ஒருவர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் மல்லாகத்தில் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் மல்லாகம் சந்திக்கு வந்துள்ளார். அந்த வேளையில் மோட்டார் சைக்கிள் வீதியில் இயங்க மறுத்து நின்றுவிட்டது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழ் முற்றம் சஞ்சிகை வெளியீடு

கொழும்புத்துறை, ஓக.16
கலை இலக்கிய கலாசார, பண்பாட்டு விடயங்களை உள்ளடக்கி வெளியிடப்படவுள்ள 'தமிழ் முற்றம்' சஞ்சிகை வெளியீட்டு விழா நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
காவலூர் இ.விஜேந்திரனை ஆசிரியராகக் கொண்ட இந்தச் சஞ்சிகை வெளியீடு எழுத்தாளர் எஸ்.ஜோசப் பாலா தலைமையில் இடம்பெறும்.
சஞ்சிகையின் முதற் பிரதியை றோசம்மா இராயப்பு வெளியிட்டு வைக்க, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பெற்றுக்கொள்வார். மதிப்புரையை கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார்.
'அறிகை முறைமைகள் ஊடு உள ஆரோக்கியம்' என்னும் பொருளில் திருமதி கோகிலா மகேந்திரனும், 'தமிழ்த் தேசியமும் ஊடகங்களும்' என்னும் தலைப்பில் நிலாந்தனும் சிறப்புரைகளை வழங்கவுள்ளனர். (ஓ-135)

## சத்தியக்காட்டு சந்தைக்கு தாராளமாக மரக்கறிகள்

சுழிபுரம், ஓக.16
சுழிபுரம் மேற்குப் பிரிவில் மீள்குடியமர்ந்த மக்களால் மேற்கொள்ளப்பட்ட தோட்டச் செய்கை மூலம் பெறப்படும் கீரை, வெண்டி, பாவற்காய் போன்றவை தினமும் சுழிபுரம் சத்தியக்காட்டுச் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இதனால் குறித்த சந்தையில் காய்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு இல்லாமல் பெற்றுக்கொள்ள முடிகின்றது.
அதேசமயம் சுழிபுரம் பறாளாயை அண்டிய காட்டு வயல்களில் உள்ள மேட்டு நிலங்களில் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது. கிணற்று நீரைக் கொண்டே தண்ணீர் பாய்ச்சுதல் நடைபெற்று வருகின்றது. (ஓ-28)

## பயனாளிகளுக்கு மரக்கறி விதைகள் வழங்க ஏற்பாடு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சி(திவிநெகும) திட்டத்தின் கீழ் ஆறாம் கட்ட மரக்கறி விதைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
அரச உத்தியோகத்தர்கள் வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்வதற்கும், அரச அலுவலகங்களில் சிறு தோட்டங்கள் அமைப்பதற்கும் தேவையான மரக்கறி விதைகளின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தால் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வலயத்தில் பயிரிடக்கூடிய பீர்க்கு, வெண்டி, அவரை (போஞ்சி), பசளி, முளைக் கீரை, முள்ளங்கி, சிறகு அவரை, பயிற்றை போன்ற மரக்கறிகளின் விதைகள் தேவைப்படுவோரின் விவரங்களை அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## கோயில் மரங்களை வெட்டிய விசமிகள்

யாழ்ப்பாணம், ஓக. 16
சுதுமலை அம்மன் கோயில் வீதியில் கிணற்றடியை அண்டி வளர்ந்திருந்த ஜாம் மரங்களை விசமிகள் சிலர் வெட்டிச் சாய்த்துள்ளதாக அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.
புதன்கிழமை பிற்பகல் குறித்த கோயிலடிக்கு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் மது போதையில் சென்ற விசமிகள் குறித்த மரங்களை வெட்டிச் சாய்த்துள்ளனர். சில மாதங்களுக்கு முன்னரும் அந்தக் கோயிலடியை அண்மித்துள்ள கிணற்றுக் கட்டில் அவர்கள் கழிவு ஒயில் ஊற்றிவிட்டுச் சென்றிருந்த நிலையில் தற்போது மரங்களையும் வெட்டியுள்ளனர் என்றும் அங்குள்ளவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-4)

## ஆறாத்துயரின் ஆறாம் ஆண்டு



செல்வன் வீரசிங்கம் செந்துஷன்
(மாசார், பளை )
மண்மகிழ் 11.12.1987
கண் நெகிழ 16.08.2008

எங்கள் அன்புச் செல்வமே! துஷாவே!
நீ எங்கே சென்றாய் என் கடைக்குட்டியே!
உன் பிரிவின் துயரம்
சுமக்க முடியாமலுள்ளது.
எங்கள் வாழ்க்கை கண்ணீராவதோ ஐயா!
இனி யார் பிறப்பார் உன்னைப் போல் ஒருவன்
என் செல்வமே!
எப்படித் தாங்குவது உன் பிரிவை?
சகோதர பாசத்துடன் கூடி வாழ்ந்த
கூட்டை விட்டு
எங்கே பறந்தாய் என் கடைக்குட்டியே!
உன்னைக் காண்பது எப்போது
என்று தெரியவில்லை
என் செல்வமே உன் நினைவுகளால் ஆறாத்
துயரில் மூழ்கியுள்ளோம் எம்மைத் தேற்ற
வாரீரோ?
உன் வரவை எதிர் பார்த்து நிற்கும்:

அப்பா, அம்மா,
அண்ணன்மார், அண்ணிமார்,
பெறாமக்கள்: துஷன்,
அபிஷன், லக்ஷி.
மாசார், பளை.

## மழை வேண்டி ஆலயங்களில் விவசாயிகள் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.16
பெரும்போக நெற்செய்கைக்காக மழை வேண்டி விவசாயிகள் ஆலய வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
வயல்களை உழுது பண்படுத்திப் பசளை போடுவதற்காக விவசாயிகள் தற்போது மழையை எதிர்பார்த்துத் தவம் கிடந்து வருகின்றனர்.
அதிகமான விவசாயிகள் இதற்காக ஆலய வழிபாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.
தற்போது ஆவணி மாதம் பிறந்துள்ளதால் இது வயல்களை உழுது பசளை போட்டு நெற் செய்கைக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய காலமாகும்.
இந்த நிலையில் வயல்கள் மழை இன்றி கடும் வறட்சியால் வறண்டு காணப்படுகின்றன. (வ-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

நடேசன்
விக்கினேஸ்வரன் (விக்கி)
தோற்றம் 01.11.1961
மறைவு 18.07.2014



கடந்த 18.07.2014 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எனது அன்புப் புதல்வனின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

பி.நடேசன் (தந்தை)
மணியர்பதி லேன், கொக்குவில் மேற்கு.

## ஈர விழிகளுடன் 4ஆவது ஆண்டில்




அமரர்
தர்மலிங்கம் தர்மராஜா
(ஓய்வுபெற்ற உதவித் தொழில் ஆணையாளர், வவுனியா)
மலர்வு 17.07.1940
உதிர்வு 16.08.2010
திதி: 03.08.2014

எம் வாழ்வில் வசந்தத்தினை ஏற்படுத்த
வருடங்களைத் தொலைத்தவரே - அப்பா
விநாயகர் சரண் பற்றி நான்காண்டுகள் சென்றதுவே
மறைவு தந்த வலிகள் மாறாத ரணங்களாய் - எம்முள்ளே
உங்கள் ஆத்ம சாந்திக்காக விநாயகரைத் துதிக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"தேவி மஹால்"
கோப்பாய் மத்தி.
(50863)(4.5.6.3)
குடும்பத்தினர்.

## விழி நீரால் விளக்கேற்றி அஞ்சலித்து நிற்கும் 13ஆவது ஆண்டு நினைவஞ்சலி



உதயம் 01.07.1938
அஸ்தமனம் 11.08.2001

அமரர் உயர்திரு. பொ. சங்கரப்பிள்ளை
அதிபர் சேவை தரம் - I
(முன்னாள் அதிபர், யா/உடுத்துறை மகாவித்தியாலயம்,
அகில இலங்கை சமாதான நீதிவான்)
திதி: அபரபக்க ஸப்தமி (16.08.2014)

எங்கள் சத்தியத்தின் திருவுருவை கண்ணியத்தின் நாயகரை
எளியோரை அரவணைத்து வழி சொல்லும் வல்லவரை
புன்னகையால் அரசாண்ட செங்கோலின் மன்னவரை
தந்தையாய் தோழனாய் எமை சுமந்து வளர்த்தவரை
அனைவரையும் அரவணைத்த ஆளுமையின் திருவொளியை
எங்கள் குடும்ப பரிமாணத்தின் தளபதியாய் திகழ்ந்தவரை
விழிநீரால் விளக்கேற்றி கரம்கூப்பி வணங்குகின்றோம்.

தங்களின் ஆசிவேண்டி அஞ்சலித்து நிற்கும்
அன்பு மனைவி, பாசமிகு மகன்மார்,
ஆசை மகள், மருமகன், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள், குடும்ப உறவுகள்.

உடுத்துறை தெற்கு,
தாளையடி.
T.P: 077 8084 475

(50784)(10.6.3)

## சுதேச மருத்துவர்களின் விவரங்களை கோரும் மாகாணத் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஒக. 16

சுதேச மருத்துவத்தை மேம்படுத்தல்மற்றும்வேறுபலகாரணங்களுக்காக, வடக்கில் பரம்பரை பரம்பரையாக வைத்தியம் செய்து வந்தவர்களது பெயர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு வடமாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களம் கோரியுள்ளது.

இது தொடர்பில் வடமாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்கள ஆணையாளர் திருமதி சி.துரைரட்ணம் தெரிவித்துள்ளதாவது:-

பாரம்பரியமாக பலர் சுதேச மருத்துவத்தை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் இந்தத் துறைசார் கல்வி எதுவுமின்றி பாரம்பரியமாக அதனை மேற்கொண்டு வந்துள்ளனர். அவர்கள் கைக்கொண்ட முறைகள், செய்முறைகள் உள்ளிட்ட பல விடயங்களும் அழிந்து போகும் நிலையில் உள்ளதால் அவற்றைப் பாதுகாப்பதற்காகவும் அவற்றை வைத்து ஆய்வுகள் செய்யவும், சுதேச மருத்துவத்தை மேம்படுத்தவும், அவர்களது பெயர் விவரங்கள் அழிந்துவிடாது பேணி ஆவணப்படுத்தும் நோக்குடனும் புத்தகம் ஒன்றை வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனைச் செயற்படுத்தவே அவர்களது பெயர் விவரங்கள் கோரப்படுகின்றன.

பாரம்பரியமாக குறித்த வைத்தியத்தை மேற்கொண்டு வந்தவர்களது பெயர், அவர்களது இடம், அவர்கள் சேவை புரிந்த காலப்பகுதி, அவர்கள் சேவையை மேற்கொண்ட இடம் என்பனவற்றை திணைக்களம் கோரியுள்ளது. பாரம்பரிய வைத்தியர்களில் தற்போது சுமார் 300 பேரின் பெயர் விவரங்களே பேணப் பட்டு வருகின்றன-என்றார். (வ-4)

## நல்லூரில் தெய்வீக சுகானுபவம்

யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு 'தெய்வீக சுகானுபவம்' என்ற இசைப் பயிலரங்கு மற்றும் இசைக்கச்சேரி நிகழ்வு எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நல்லூர் சங்கிலியன் தோப்பில் நடைபெறவுள்ளன. பரத நாட்டியக் கலைஞர் திருமதி லாவண்யா ஆனந்த் மற்றும் பிரபல கர்நாடக இசைக் கலைஞர் ராம்பிரசாத் ஆகியோர் வடமாகாணத்தின் நுண்கலை பயிலும் மாணவருக்கான பயிலரங்கையும் இசைக்கச்சேரியையும் நடத்தவுள்ளனர். (ஒ-14)

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு-

'முருகியல் வாழ்வு' என்ற தலைப்பில் க.ஈஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும் அராலி கோகுலம் அறநெறிப் பாடசாலை, கோப்பாய் அருள் முருகன் அறநெறிப் பாடசாலை, கோப்பாய் சித்திர வேலாயுதர் அறநெறிப் பாடசாலை, ஏழாலை ஸ்ரீ கண்ணகி அம்பாள் அறநெறிப் பாடசாலை, மற்றும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-7)

♦♦♦

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங் கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு - பாட்டு - செல்வி சின்மயி ஆருத்திரா சேவியர், வயலின் - எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் - பிரம்மஸ்ரீ எஸ்.சிவசுந்தரசர்மா, கடம் - எஸ்.ரவிசங்கர். (ஒ-ரி)

♦♦♦

'பிரம்மகான சபை'யால் நல்லை ஆதீனத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு இசை அர்ச்சனை இடம்பெறும். செல்வி ஹம்சவதி ஜெகதீஸ்வரசர்மா நிகழ்வில் பங்குபற்றுகின்றார். (ஒ)

♦♦♦


நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'கங்கைவேடன்'இசைப் பேருரை இடம்பெறும். (ஒ)

♦♦♦

யாழ்ப்பாணம் சின்மயாமிஷன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறையுடன்இணைந்து நடத்தும் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை நல்லூர் பின் வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய அருளுரையின் தலைப்பு 'முதுமை ஓர் இனிமை' என்பதாகும். (ஒ)

### ச.ச.நிலையத்துக்கு பாதுகாப்பு வேலி அமைக்க நிதி வழங்கிய நலன்விரும்பி

கொடிகாமம், கோயிலாமனை நாவலர் சனசமூக நிலையத்தின் முன்பக்க வேலி அமைப்பதற்கு லண்டனில் வசிக்கும் மேற்படி பிரதேசவாசியான நமசிவாயம் தேவராசாஎன்பவர் 35ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளதாக சங்கத் தலைவர் த.சுபாஸ்கரன் தெரிவித்தார். சுமார் 110 அடி நீளமான இந்த வேலி கொங்கிறீட் தூண், முட்கம்பி, தகரம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளதாகக் கூறப் பட்டது. (வ-122)



பதினைந்தாம் நாள் திருவிழா

## நல்லூர் நாயகன்



இராகம்: சண்முகப்பிரியா
தாளம்: ஆதி

பல்லவி

தேன் பொழில் பழநி தேவ குமாரா
சிறப்புறு சீர் நல்லூர் கந்தனே முருகா

அனுபல்லவி

பரம் பொருளான பாலனே ஸ்கந்தா
அடியருக்கருள் தரும் நல்லையின் நாதா

சரணம்

சதுர்மறை போற்றும் சண்முக நாதா
ஆகம மேந்தும் அம்பிகை புதல்வா
போதுமினி எமக்குப் பெருந்துயர் வேண்டா
காத்திடு காத்திடு நல்லூர் நாயகா

*சுபாஷினி பிரணவன்*

## இன்னல்களை நீக்கிடுவாய்

சூரனை மாய்த்துச் சுரருக் கரசளித்த
காரணத்தை நாமறிவோம் கந்தையா - பாரினிலே
உன்னையே நம்பி உயிர் வாழும் எங்களது
இன்னல்களை நீக்கிடுவாய் ஈங்கு

*சி. வெற்றிவேலு, வட்டுக்கோட்டை*

## வருவாய் முருகா அருள்வாய் குகனே

அடியவர்க்கு அருள் புரியும்
அன்னை உமை பாலனே
அடிமை தனைப் போக்கிடவே
ஆரோகணித்து அருள் புரிவாய்
கொடிய இவ் வறட்சி வறுமையினால்
கோதாகிப் போன எம் குவலயத்தை
நீ வந்து காத்தருள்வாய் குகனே
நிறை மழை தந்திடுவாய் நீலமயில் வாகனனே

*பொலிகை - பிரணவன்*

## மனமிரங்கி நீ வந்து காத்திடையா

மயிலேறி வலம் வந்த வேல் முருகா
மங்கை இருவர் மனங்கவர்ந்த மால் மருகா
மக்கள் படும் அல்லல் நீ அறியாயோ
மனமிரங்கி நீ வந்து காத்திடையா
மண்டியிட்டோம் நின் பதங்கள் சரணமையா
மனமுவந்தே எங்கள் குறை தீருமையா
நல்லூர்ப் பதிவாழும் நல்லைக் கந்தா
நாளும் உனைப் போற்றுகின்றோம் போற்றி போற்றி

*சி. மகாலட்சுமி*


# மணிவிழா வாழ்த்து



## வே.கா.கணபதிப்பிள்ளை

(அதிபர்-கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

வீரனாய் தமிழைப் போற்றி விடாது செய் முயற்சி கூடி
தீரனாய் சைவம் காத்து திசையெங்கும் சிறப்புப்பெற்று
ஆண்டு அறுபது வரையில் ஆற்றிட்ட
நீண்ட சேவை நிலத்தில் நிலைபெற
பூண்ட செல்வம், புகழ், கல்வி ஓங்கிட வேண்டும் என்று
விருப்புடன் வாழ்த்துகின்றோம்.
கலாசாலை அதிபராய் – நீர் கண்ணியமாய்
ஆற்றிட்ட சேவையதில் கலைத்தேர்ச்சி
பெற்றனர் பல ஆசிரியர்கள்
கணபதியாம் பிள்ளையாரைப் போல்
கரையேற்றிவிட்டீர் பல மாணவரை
காலமதில் நூற்றாண்டு தாண்டி
களிப்புடனே வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

கண்ணன் குடும்பம் - சிங்கப்பூர் ஜுவல்லறி, யாழ்ப்பாணம்.

(7.6.3)

# அறிவித்தல்



➡ நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு (சுவாமிகாவும்) வாகனங்கள், ஏனைய உபகரணங்கள் என்பவற்றை நேர்த்தியாக வழங்க விரும்பும் அடியார்கள் கோயிலின் அறங்காவலர் சபையுடன் தொடர்பு கொண்டு கோயிலுக்கு அதிமுக்கியமாகத் தேவைப்படுவனவற்றை அறிந்து நேர்த்தியாக வழங்கி உச்சப்பயனைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

➡ நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு நிதி சேகரிப்பதற்கென - உள்நாட்டிலோ, வெளிநாடுகளிலோ, தனிப்பட்ட எவருமோ, அமைப்புக்களோ நியமிக்கப்படவில்லை என்பதால் கோயிலுக்கு நிதி வழங்க விரும்புவோர் நேரடியாக கோயிலின் நிர்வாக அலுவலகத்தில் வழங்கலாம். அல்லது கோயிலின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்துவிட்டு வங்கிப்பற்றுச் சீட்டினைப் பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைப்பதுடன், என்ன காரணத்துக்கான நிதிப்பங்களிப்பு என்பதையும் அறியத் தரவேண்டும் என்பதை தயவன்போடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

## வங்கிக் கணக்கு விவரம்

க/கு இல. 012426285-01
வர்த்தக வங்கி புறக்கோட்டை,
கொழும்பு 11.

க/கு இல. 1060012330
வர்த்தக வங்கி ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

க/கு இல. 007687860
இலங்கை வங்கி ஊர்காவற்றுறை,

மேலதிக விவரங்கள் தேவை எனின்
021321 3024, 021 320 7785
என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.

(சி16055)(12.3.6)

நல்லூர் கந்தனுக்கு இன்று
பதினாறாம் திருவிழா
16.08.2014



பயோட்டினெக்ஸ் e 14 ஆண்டுகளாக.....
தலைமுடி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு
நிரந்தரத் தீர்வளிக்கிறது.

Rial E

வளமான
கேசத்திற்கு
பலமான
கவசம்



மேலதிக தொடர்புகளுக்கு :
யாழ் மாவட்ட விற்பனைப் பிரதிநிதி
R.Y.பிரபு 077 002 8942
ஏக விநியோகஸ்தர் :
ஜெகன் பார்மசி
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4336

(C/15124) (7.6.3)

# எம்மை ஆளவும் வாழவும் செய்வது கல்வியே

## கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

வவுனியா, ஓக.16

கடந்த காலங்களில் எமது மண்ணில் நடைபெற்ற போர் காரணமான இழப்புகளோடும், வலிகளோடும் இன்று வரை நாம் அனுபவித்து வரும் துன்ப துயரங்களி லிருந்து நாம் மீள வேண்டுமாக இருந் தால் பெற்றோர்கள் தம் பிள் ளைகளைப் பாடசாலைக் கற் றல் செயற்பாடுகளிலிருந்து இடை விலகிவிடாமல் கண்கா ணித்துக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பி னர் சிவசக்தி ஆனந்தன்.

மகிழங்குளம் கிராம சேவை யாளர் பிரிவின் விளக்கு வைத்த குளம் கிராமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங் கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



சிறுமி ஒருவருக்கு உதவி

அவர் அங்கு மேலும் தெரி வித்ததாவது:-

இன்று நாம் சுமக்கும் சுமை களை நாளை எமது பிள்ளை களும் சுமக்காமல் வளமான வாழ்வு வாழவேண்டும் என்ற விருப்பம் பெற்றோர்களிடம் குடி கொண்டிருந்தால் அதற்காக வலி களைத் தாங்கி உங்கள் பிள் ளைகளின் கல்வியில் கூடிய கவனம் செலுத்தி அவர்க ளைச் சமூகத்தில் நற் பிரஜை களாக்க சகல முயற்சிகளை யும் பெற்றோர் மேற்கொள்ள வேண்டும்.

கல்வியே எமது மூலதனம். கல்வியே எமது அழிக்க முடியாத ஒரேயொரு பெரும் சொத்து. அதுவே எம்மை ஆளவும், வாழவும் செய்யும். இதை கவனத்தில் கொண்டே புலம்பெயர்ந்து வாழும் மக் களின் நிதிப்பங்களிப்போடு கற் றல் உபகரணங்களைக் கைய ளித்திருக்கிறோம்-என்றார்.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்களான செல்வம் அடைக் கலநாதன், சிவசக்தி ஆனந் தன், வினோ நோகராதலிங் கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான இந்திர ராசா, தியாக ராசா, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை யின் தவிசாளர் சிவலிங்கம், கிராமத்தின் மாதர் அபிவிருத் திச் சங்க தலைவி சுமதி, கிராம அபிவி ருத்திச் சங்கத்தின் செய லாளர் கணேசலிங்கம் ஆகியோர் மாணவர்களுக்குப் பொருள் களைக் கையளித்தனர்.

விளக்குவைத்தகுளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஞானசேகரம் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 65 ஆயிரத்து 700 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 28 மாணவர்களுக்கு வழங்கப் பட்டன. (த)

## வறட்சியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம்

கிளிநொச்சி, ஓக.16

கண்டாவளைப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நிவா ரணம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, சுண்டிக் குளம் ஆகிய சிறுகடல் பகுதி களில் தொழில் செய்யும் கடற் றொழிலாளர்கள் தற்போது ஏற் பட்டுள்ள வறட்சியினால் பாதிக் கப்பட்டு தொழில் வாய்ப்பை முற்றாக இழந்துள்ளனர்.

இதனால் கடற்றொழிலை வாழ்வாதாரத் தொழிலாக நம்பி வாழும் ஆயிரத்துக்கும் மேற் பட்ட குடும்பங்கள் பல் வேறு துன்பங்களை அனு. பவித்து வருகின்றனர். இந்த நிலை யில் தமக்கான நிவாரண உதவிகளை பெற்றுத்தரு மாறு கோரிக்கை விடுத்துள் ளனர். (த-55)

# முறையான நீர் முகாமைத்துவத்தால் சிறுபோகச் செய்கை பெரு வெற்றி

கிளிநொச்சி, ஓக.16

இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோகச் செய்கை யில் முறைப்படியான நீர் முகா மைத்துவம் மேற்கொள்ளப் பட்டமையால் இந்தச் சிறு போகச் செய்கை வெற்றி அளித் துள்ளது எனக் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறி யியலாளர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் வருடாந்தம் 8 ஆயிரம் ஏக்கர்கள் வரையான நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் நிலவிய எதிர்பாராத கடும் வறட்சி காரணமாக குளத்தின் நீர் அளவைக்கொண்டு 800 ஏக் கர்களில் மாத்திரம் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட் டது. இதில் எதிர்பார்த்த அளவு வெற்றி கிடைத்திருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்

இது தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என். சுதாகர னிடம் கேட்டபோது, இந்த சிறுபோகச் செய்கைக்கான கூட்டத் தீர்மானம் எடுக்கும் போது இரணைமடுக் குளத் தின் நீர் மட்டம் 13 அடி 9 அங்குலமாக இருந்தது. சிறு போக பயிர்ச் செய்கை ஆரம் பிக் கும்போது ஏப்ரல் மாதத்தில் பெய்த மழையை அடுத்து நீர் மட்டம் 15 அடி 2 அங்குலமாக உயர்ந் திருந்தது. இந்த 800 ஏக்கர் சிறுபோக நெற் செய்கை மேற் கொள் ளப்பட்டு அவற்றுக் கான நீர் விநியோகம் நிறுத்தப்பட்ட நிலை யில் தற்போது நீர் மட்டம் 10 அடி 6 அங் குலமாக உள்ளது. இவ்வாறு குளத்தின் நீரைப் பாதுகாத்து முறைப்படியான நீர் முகாமைத்துவம் பேணப் பட்டமை யால் இந்தச் சிறுபோக நெற்செய்கை மற்றும் அதன் ஊடான சிறு தானியப் பயிர்ச் செய்கை என்பனவும் வெற்றியளித்துள்ளன.



கோப்புப்படம்

நிலத்தடி நீரையும் பாது காக்க முடிந்துள்ளது. கடந்த ஆண்டு நிலவிய கடும் வறட்சியின் காரணமாகவும், தற்போது நில வும் வறட்சி காரணமாகவும் அடுத்த காலபோக நெற்செய்கைக் கான விதை நெல்லை உற்பத்தி செய்யும் நோக்கத்துடனேயே நெற் செய்கை மேற்கொள் ளப்பட்டது. இதன் மூலம் கால போகச் செய்கைக்கு 40 வீத மான விதை நெல்லை உற் பத்தி செய்யக்கூடிய வகையில் எதிர்பார்த்ததை விட அதிகளவு விளைச்சல் கிடைத்துள்ளது- என்றார். (த-55)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

பெரியதம்பி இராசையா ஆச்சாரியார்

தோற்றம் 12.05.1952

மறைவு 17.07.2014



அறங்கள் பல புரிந்தீர்கள்
அன்பு மழை பொழிந்தீர்கள்
ஆலவிருட்ச நிழலாக
ஆறுதல் மொழி பகர்வீர்கள்
வானகமும் வையகமும் போற்றிடவே
வாழும் வழிமுறைகள் புகட்டினீர்கள்
எமது குடும்ப விருட்சத்தில் இருந்து
உதிர்ந்து விட்ட உயிர்ப்பூவே!
மானிட வாழ்க்கை தர்மங்களின் உறைவிடமே!
வாழ்க்கைத் தர்மத்தை முறையாக வாழ்ந்து காட்டிய
கலங்கரை விளக்கமே!
கற்றோரும் மற்றோரும் போற்றும் நல்லவரே!
நமது நல்வாழ்வு நலம்பெற
உலை மெழுகாய் தன்னையே உருக்கி உழைத்த
உயிர்த் தெய்வமே!
ஆண்டவனடிகளில் உங்களை நாம் கண்டறிவோம்
உங்கள் ஆத்மா இறைவனோடு கலந்து உறவாடட்டும்.

✳ இன்று (16.08.2014) சனிக்கிழமை முற்பகல் 10 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.
72, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(50874)(45.6.3)

## 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

ச.சம்பந்தசரனாலயம்

மண்ணில் 17.03.1923

விண்ணில் 16.08.1984



மண்ணில் நல்ல
வண்ணம் வாழ வைத்த
எங்கள் அன்புத்
தந்தையே!– எங்கள்
உயர்வுகளிலெல்லாம்
உங்கள்
நினைவுகளுடன்
நாங்கள்.

இணுவில்.

(50867)(4.3.6)

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### திருமதி இராஜேஸ்வரி அருட்செல்வம்

(ஆசிரியை, நாவலி சென்.ரீற்றேஸ்)

4ஆம் கட்டை ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி அருட்செல்வம் நேற்று (15.08.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அருட்செல்வத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வம் மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், மதியா வர்ணம்-நிற்ரா தம்பதியரின் அன்பு மருமகளும், டினுஷா, வினுஷா, மதுஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி, இந்திராதேவி, சந்திராதேவி, விமலாதேவி, செல்வமலர், கலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் அருளானந்தம் (அருள்) யோகராசா, திருச்செல்வம், ரதி, ராதிகா, ஜெயராணி, செல்வராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.08.2014) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(50869)(7.6.3)

தகவல்:
4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. J.யோகராசா



தென் கொரியாவுக்கு பயணம் மேற்கொண்ட பாப்பரசர் பிரான்சிஸை அந்த நாட்டு ஜனாதிபதி விமான நிலையத்தில் வரவேற்றபோது. (வ)

# தென்கொரியாவில் பாப்பரசர்

## 25 வருடங்களில் இதுவே முதல்முறை

சியோல், ஒக.16

25 ஆண்டுகளுக்குப் பின்னர் பாப்பரசர் பிரான்சிஸ் ஐந்து நாள் பயணம் மேற்கொண்டு தென்கொரியாவுக்குச் சென்றுள்ளார். பாப்பரசர் ஒருவர் தென் கொரியா செல்வது இதுவே முதலாவது முறை.

தலைநகர் சியோலிலுள்ள விமான நிலையத்தைச் சென்றடைந்த அவரை, தென் கொரிய ஜனாதிபதி பார்க் கியூன்-ஹை வரவேற்றார். அதனைத் தொடர்ந்து, அந்த நாட்டின் படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் ஐந்து பேரை பாப்பரசர் சந்தித்தார்.

தென் கொரியாவின் மிக மோசமான விபத்துக்களில் ஒன்றான அந்தப் படகு விபத்தில், 300 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

கிறிஸ்தவ மதத்துக்காக உயிர் நீத்த கொரிய கத்தோலிக்க பிரஜைகளை புனிதர்களாக திருநிலைப்படுத்தும் நிகழ்ச்சியிலும், கத்தோலிக்க இளைஞர் திருவிழாவிலும் பாப்பரசர் பங்கேற்பார்.

இதேவேளை தென்கொரியா செல்வதற்காக சீன வான் எல்லை வழியாக பாப்பரசர் பிரான்சிஸ் சென்ற விமானம் பறந்தபோது, சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங்குக்கு வாழ்த்துத் தந்தி அனுப்பப்பட்டது.

எந்தவொரு நாட்டின் வான் வழியாகச் செல்லும்போதும், அந்த நாட்டுத் தலைவர்களுக்கு வாழ்த்துத் தந்தி அனுப்புவது பாப்பரசர்களின் மரபாகும்.

சீன அரசின் அங்கீகாரம் பெறாத தேவாலயங்களில் வழிபடுவது குறித்த பிரச்சினையில் அந்த நாட்டு அதிகாரிகளுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசலை, பாப்பரசரின் இந்தத் தந்தி ஓரளவு குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே, 1989 ஆம் ஆண்டு சீன வான் வழியாக விமானத்தில் பறந்து கொண்டிருந்த போது, அப்போதைய பாப்பரசர் அனுப்பிய வாழ்த்துத் தந்தியை அப்போதைய சீன ஜனாதிபதி ஏற்க மறுத்திருந்தார்.

எனினும் பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் அனுப்பிய தந்தியை, சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஈராக்கில் பாலியல் வன்முறைகள்

### ஐ.நா. கண்டனம்

நியூயோர்க், ஒக.16

ஈராக்கில் யாஸிதிகள், கிறிஸ்தவர்கள் உட்பட சிறுபான்மையினர் மீது ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தினர் கட்டவிழ்த்து விட்டுள்ள பாலியல் வன்முறைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் ஆளும் ஷியா முஸ்லிம் அரசுக்கு எதிராக சன்னி முஸ்லிம்களின் ஆயுத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கம் உள்நாட்டுப் போரை நடத்தி வருகிறது. அத்துடன் சிரியா மற்றும் ஈராக்கில் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை இணைத்து இஸ்லாமிய தேசம் என்று பிரகடனம் செய்துள்ளது.

தங்களது இயக்கத்தின் பெயரையும் இஸ்லாமிய தேசம் என்று மாற்றியுள்ளனர். தற்போது இந்த இஸ்லாமிய தேசம் இயக்கத்தினர் சிறுபான்மை மக்களுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

யாஸிதிகள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்டோர் கட்டாயமாக இஸ்லாத்தைப் பின்பற்ற வேண்டும் அல்லது வரி செலுத்த வேண்டும் என்று அவர்களால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதை ஏற்க மறுத்து அகதிகளாகத் தப்பி ஓடிய யாஸிதிகள் பசிக் கொடுமையால் வெயிலில் சுருண்டு கொத்துக் கொத்தாக மடிந்து வருகின்றனர்.

இதனையடுத்து இஸ்லாமிய தேசத்தினர் மீது அமெரிக்கா வான் தாக்குதல் நடத்தியது.

சர்வதேச நாடுகள் யாஸிதிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்த நிலையில் சிறுபான்மையினத்தவர் மீது பாலியல் வன்முறைகளையும் இஸ்லாமிய தேசம் இயக்கத்தினர் கட்டவிழ்த்து விட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது. (வ)

## பாகிஸ்தானில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத், ஒக.16

பாகிஸ்தானில் இராணுவத் தளங்களில் தாக்குதல் நடத்திய 7 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானில் தென்மேற்கு பகுதியில் பலுசிஸ்தான் மாகாணத்தில் சடமுங்லியில் விமானபடைத்தளமும், காலித் என்ற இடத்தில் இராணுவத் தளமும் உள்ளன. அவை மாகாணத் தலைநகர் குவெட்டாவில் இருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளன.

நேற்று அதிகாலை சடமுங்லி விமானபடைத் தளத்துக்குள் துப்பாக்கியுடன் தீவிரவாதிகள் புகுந்தனர். தானியங்கி ஆயுதங்கள், கையெறி குண்டுகள் என்பவற்றை அவர்கள் வைத்திருந்தனர். தற்கொலை படை உடைகளையும் அணிந்திருந்தனர்.

அவர்களைப் பார்த்ததும் பணியில் இருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்குத் தீவிரவாதிகளும் சுட்டதால் இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது.

அப்போது மனித வெடிகுண்டு தீவிரவாதிகள் தங்கள் உடலில் இருந்து குண்டை வெடிக்கச் செய்து உயிரிழந்தனர். ஒரு தீவிரவாதி கொல்லப்பட்டான், துப்பாக்கிச் சண்டையில் 4 பொலிஸாரும், 3 இராணுவத்தினரும் காயம் அடைந்தனர்.

இதற்கிடையே காலித் இராணுவத் தளத்திலும், தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அப்போது நடந்த துப்பாக்கிச் சண்டையில் 4 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 2 இடங்களிலுமாக மொத்தம் 7 தீவிரவாதிகள் உயிரிழந்தனர். (வ)

# பாகிஸ்தான் காஷ்மீர் பிரச்சினையில் அமைதித் தீர்வையே விரும்புகிறது

## சுதந்திர தின விழாவில் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஒக.16

பதற்றத்தின் ஆதாரமாகத் திகழ்கிற காஷ்மீர் பிரச்சினையில், அமைதித் தீர்வு காண விரும்புவதாக பாகிஸ்தான் சுதந்திர தின விழாவில் பேசிய பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி கடந்த மே மாதம் 26 ஆம் திகதி பதவி ஏற்றதைத் தொடர்ந்து, அண்டை நாடுகளுடன் நல்லுறவைப்பேண விரும்புகிறார். அதற்கான முதலாவது முயற்சியாக, அவர் பதவி ஏற்பு விழாவுக்கு சார்க் என்னும் தெற்காசிய நாடுகள் அமைப்பின் தலைவர்களை அழைத்தார். அந்த அழைப்பை ஏற்று, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் மோடி பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டார். இரு தரப்பு உறவை மேம்படுத்துவது தொடர்பாக அவர் மோடியுடன் பேச்சும் நடத்தினார்.

ஆனால் இன்னொரு பக்கம் எல்லையில், போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி பாகிஸ்தான் தொடர்ந்து அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது. இது இருதரப்பு உறவில் கசப்பை ஏற்படுத்தி வருகிறது.

இதுதொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சில தினங்களுக்கு முன் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவுடன் நேருக்கு நேர் நின்று போரிட வலிமை இல்லாததால் தீவிரவாதத்தை கட்டவிழ்த்து விட்டு பாகிஸ்தான் மறைமுகப்போரில் ஈடுபடுகிறது என்று குற்றம் சாட்டியிருந்தார். ஆனால், மோடியின் கருத்துகள் அடிப்படையற்றவை, துரதிர்ஷ்டவசமானவை என்று கூறி பாகிஸ்தான் அதனை நிராகரித்தது.

இந்த நிலையில், பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் பிரதமர் நவாஸ் ஷெரீப் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

காஷ்மீர் பிரச்சினையில் அமைதித் தீர்வையே நாம் முழுமையான நேர்மையுடன் விரும்புகிறோம். இதன்மூலம் பதற்றத்தின் முக்கிய ஆதாரத்தைப் போக்கலாம். தங்களது உறவினை மேம்படுத்துவதற்குப் பாகிஸ்தானும், இந்தியாவும் புதிய வழிகளைக் கண்டறிய வேண்டும்.



நவாஸ் ஷெரீப்

எங்கள் நாடு அமைதியான நாடு. நாம் நாட்டில் அமைதி நிலவ முயற்சி செய்கிறோம். எல்லைகளிலும் நீடித்த அமைதி நிலவவே விரும்புகிறோம். அண்டை நாடுகளுடன் அமைதியான உறவை மேம்படுத்துவதே எனது முக்கிய வெளியுறவுக் கொள்கை ஆகும் என அவர் கூறினார். (வ)





இந்தியாவின் 68 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் புதுடில்லி செங்கோட்டையில் நேற்று நடைபெற்ற வேளை பிரதமர் மோடி முப்படை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கின்றார். அதையடுத்து அவர் தேசியக் கொடியை ஏற்றி வைத்த வேளை..... (வ)

# மத வன்முறைக்கு முடிவு கட்டுவோம்

## சுதந்திரதின உரையில் பிரதமர் மோடி தெரிவிப்பு

டில்லி, ஓக. 16

நாட்டில் நீடித்து வரும் மத மோதல்களுக்கு முடிவு கட்டுவோம்; பெண் சிசுக் கொலையைத் தடுப்போம்; தற்போதைய திட்டக்குழு முறையை மாற்றி அமைப்போம்; ஏழைகளுக்கு காப்பீட்டுவசதியுடன் கூடிய வங்கிக் கணக்கு வழங்குவோம் என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை இந்திய சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றும்போது பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்தை ஒட்டி நேற்றுக்காலை மகாத்மா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பிரதமர்நரேந்திர மோடி காலை 7.30 மணி அளவில் செங்கோட்டைக்கு வந்தார். அங்கு முப்படைவீரர்களின்அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். பின்னர்அவர் செங்கோட்டைகொத்தளத்தில்மூவர்ணக்கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அவர் ஆற்றிய உரையின் தொகுப்பு வருமாறு:-

உலகம் முழுவதும் இந்தியர்கள் நேற்று (இன்று) சுதந்திர தினத்தைக் கொண்டாடி வருகின்றனர். நான் ஒரு பிரதமராக இல்லாமல் உங் களின் முதன்மை சேவகனாக இருந்து வாழ்த்துகிறேன். நான் ஒரு பிரதமர் அல்ல. பிரதம சேவகன். நாட்டின் சுதந்திரப் போராட்டம் பல ஆண்டுகாலம் நடைபெற்றது. பலதலைமுறையினர் நாட்டின் சுதந்திரத்துக்காக தங்களது உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள். தங்களது இளம் பராயத்தைச் சுதந்திரப் போராட்டத்துக்காக அர்ப்பணித்திருக்கின்றனர்.

இந்த நாட்டின் குக்கிராமமொன்றில் ஏழை விவசாயியின் குடும்பத்தில் பிறந்த என்னை இந்த மேடையில் நிற்க வைத்திருப்பதுதான் நமது நாட்டு அரசியல் சாசனத்தின்அழகு. எமதுநாட்டை முன்னையஅரசுகள், முன்னாள் பிரதமர்கள், மாநில முதல்வர்கள் என அனைவரும்தான் மேம்பாடு அடையச் செய்திருக்கின்றனர். அவர்கள் அனைவரும் மதிப்புக்குரியவர்கள்.

நாம் அனைவரும் ஒருங்கிணைந்துநாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டியது அவசியம். அரசியலை முன்னெடுக்காமல்நாட்டின்வளர்ச்சியைநாம் முன்னெடுக்க வேண்டியது அவசியம். வலிமையான இந்தியா உருவாக ஒவ்வொருவரது பங்களிப்பும் அவசியம். நமது நாட்டின் இளைஞர்கள் சரியான பாதையில் செல்ல வேண்டுமானால் அது பெற்றோரின் பொறுப்பு. வன்முறைப் பாதையைக் கைவிட வேண்டும். நேபாளத்தை இதற்கு முன்னுதாரணமாகக் கொள்ளலாம். மாவோயிஸ்டுகள் வன்முறை பாதையைக் கைவிட வேண்டும். பல நூற்றாண்டுகளாக மத வன்முறையைப் பார்த்து விட்டோம். இது வரை மக்கள் உயிரிழந்தது போதும். கடந்தகால மத வன்முறைகளை மறப்போம்- மத மோதல்களுக்கு முடிவு கட்டுவோம்-இவ்வாறு கூறினார். (வ)

## அதிகாரவர்க்கத் தலையீடு நீதித்துறையில் வேண்டாம்

### உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி வலியுறுத்து

டில்லி, ஓக.16



லோதா

நீதித்துறை உரிமையில் நாடாளுமன்றமோ, அதிகாரவர்க்கமோ தலையிடக் கூடாது என்று சுதந்திரதின உரையில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி லோதா வலியுறுத்தியுள்ளார்.

நீதித்துறை, நாடாளுமன்றம், அதிகாரவர்க்கம் ஒன்றை ஒன்று மதிக்க வேண்டும் என்று அவர் கூறினார். 3 அமைப்புகளும் ஒன்றின் செயற்பாட்டில் மற்றொன்று தலையிடக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

நவீன தொழில்நுட்பங்களைப் பயன் படுத்தி வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், அதற்காக, வெற்றிடமாக உள்ள நீதிபதி பதவிகளை விரைந்து நிரப்பவும் நீதிபதி லோதா வலியுறுத்தியுள்ளார். (வ)

## தலைகீழாக ஏற்றப்பட்ட தேசியக்கொடியால் பரபரப்பு



தலைகீழாக ஏற்றப்பட்ட தேசியக்கொடி

சென்னை, ஓக.16

சென்னை துறைமுகத்தில் சுதந்திர தின விழாவில் தேசியக் கொடி தலைகீழாக ஏற்றப்பட்டதால் பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்தியாவின் 68 ஆவது சுதந்திரதின விழா நாடு முழுவதும் நேற்றுக் கொண்டாடப்பட்டது. சென்னை துறைமுகத்தில் நேற்றுக் காலை சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டுள்ளது.

அப்போது, சென்னை துறைமுகப் பொறுப்பு கழகத்தின் தலைவர் தேசியக்கொடியை ஏற்றிய போது மூவர்ணக் கொடி தலைகீழாக ஏற்றப்பட்டதால் மக்களிடையே சலசலப்பு ஏற்பட்டது.

அதையடுத்து, தேசியக் கொடியை மீண்டும் சரிசெய்து ஏற்றியுள்ளனர். உயர் அதிகாரிகள் பங்குபெற்ற அந்தச் சுதந்திரதின விழாவில்தேசியக் கொடி அவமானப்படுத்தப்பட்டதாகவும் அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (வ)

## கோட்டைப்பட்டின மீனவர்கள் வேலைநிறுத்தம்

இலங்கை அரசு கைப்பற்றி வைத்துள்ள தமிழக மீனவர்களின் விசைப்படகுகளை விடுவிக்க வலியுறுத்தி, புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் மீனவர்கள் காலவரம்பற்ற வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இதனால், நாளொன்றுக்கு 40 லட்சம் ரூபா வருமானம் இழப்பு ஏற்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ)

## இந்தியாவில் முதலாவது முறையாக தூக்குத் தண்டனை பெறும் பெண்கள்

**2001 ஆம் ஆண்டு, இந்தக் கொடூரக் குற்றத்துக்காக இருவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.**

கோலாப்பூர், ஓக.16

மகாராஷ்டிராவைச் சேர்ந்த சகோதரிகள் இருவர், பச்சிளம் குழந்தைகளைக் கடத்தி பிச்சை எடுக்கவைத்து பின்னர் கொலை செய்ததற்காக தூக்கிலிடப்பட உள்ளனர்.

மகாராஷ்டிர மாநிலம் கோலாப்பூரைச் சேர்ந்த சகோதரிகளான ரேணுகாகிரண்ஷிண்டே, சீமாமோகன் காவித் ஆகிய இருவரும் பச்சிளம் குழந்தைகளைக் கடத்திச் சென்று பிச்சை எடுக்க வைப்பதைத் தொழிலாகச் செய்து வந்துள்ளனர்.

இவ்வாறு, மொத்தம் 13 குழந்தைகளைக் கடத்திச் சென்று பிச்சை எடுக்க வைத்த அவர்கள், தங்கள் தொழிலுக்கு ஒத்துவராத 9 குழந்தைகளை படுகொலை செய்து வீசியுள்ளனர். 2001 ஆம் ஆண்டு, இந்தக் கொடூரக் குற்றத்துக்காக இருவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்தத் தண்டனையை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்ததையடுத்து, ஜனாதிபதியிடம் கருணை மனுவை சமர்ப்பித்துள்ளனர்.

ஆனால், அவர்களது மனுவை ஜனாதிபதிநிராகரித்ததையடுத்து, அவர்கள் தூக்கிலிடப்படுவது உறுதியாகியுள்ளது.

மேலும், தற்போது புனே எரவாடா சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவர்கள் தூக்கிலிடப்பட்டால், நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் இந்தியாவில் தூக்கிலிடப்படும் முதலாவது பெண் குற்றவாளிகளாக இவர்கள் கொள்ளப்படுவர். (வ)



பம்பலப்பிட்டி கடற்கரை வீதியில் பயணித்துக் கொண்டிருந்த அதிசொகுசு கார், திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. நேற்றுக் காலை 9.15 மணியளவில், மரைன் டிரைவ் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தீயணைப்பு படையினர் தீயை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்றும், சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது என்றும் பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# தீவிரவாதத்தை ஒழித்த ஒரே நாடு இலங்கையாம்

## இராணுவத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு, ஓக.16
பயங்கரவாதத்தை முற்றாக இல்லாமல் செய்த ஒரே நாடு இலங்கையாகும். ஒப்பீட்டளவில் உலகின் ஏனைய நாடுகளை விடவும் பயங்கரவாதப் பிரச்சினைகளுக்கு இலங்கை காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்துள்ளது-இவ்வாறு தெரிவித்துள்ளார் இராணுவத் தளபதி தயா ரட்நாயக்க.



தயா ரட்நாயக்க.

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள சர்வதேச மாநாடு தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"போரின் பின்னரான சவால்கள் மிகவும் சிறந்த முறையில் வெற்றி கொள்ளப்பட்டுள்ளன. போரின் பின்னர் நாட்டின் ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல், பாதுகாப்பு ரீதியாக எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பில் சிறந்த அனுபவம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் இந்த அனுபவங்கள் பிராந்திய வலயத்தின் ஏனைய நாடுகளுக்கும் நன்மையை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளன. பயங்கரவாதப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் நாடுகளின் படையதிகாரிகள் மாநாட்டில் பங்கேற்க உள்ளனர். அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து பேச்சு நடத்துவதன் மூலம் சிறந்த பலன்களை அடைய முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# கஞ்சா தோட்டம் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஓக.16
உடவளவ சரணாலயப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த 10 ஏக்கர் கஞ்சாத் தோட்டத்தை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர். குறித்த கஞ்சாத் தோட்டத்தின் பெறுமதி 10 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# போதையில் வீதியில் விழுந்த விரிவுரையாளர்

கொழும்பு, ஓக.16
அதிகமாக மது அருந்தி விட்டு வீதியில் விழுந்துகிடந்த ருகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் அவசர அழைப்பான 119 தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மாத்தறை - ஜம்புகஹவத்தை - மெதவத்த பிரதேசத்திலுள்ள வீடொன்றின் முன் விழுந்து கிடந்த இவரை மீட்ட பொலிஸார் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

பொலிஸாருக்கு தகவல் வழங்கிய ஒரு நபர், திருடன் ஒருவன் வீட்டுக்குள் நுழைய முற்படுகின்றான் என்று கூறியுள்ளார். அதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டதில் அவர் ருகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் எனத் தெரிய வந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் இவர் மதுபானம் அருந்தியுள்ளார். அதன் பின்னர் நேற்று அதிகாலை வீட்டுக்குச் சென்ற வேளை அவர் பிறிதொரு வீட்டின் முன் விழுந்துள்ளார். (ற)

# ஞானசாரருக்கு எதிராக கிளம்பினர் அமைச்சர்கள்

## அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து முறையிடவுள்ளனர் என்கிறார் அஸாத் சாலி



**பௌத்த துறவிகள் பெண்களுடன் தொடர்பற்று இருப்பர். ஆனால் ஞான சாரருக்கு காதலி உள்ளார். வாகனம் ஓட்டுகிறார். மதுபானம் உட்பட அனைத்து தீய பழக்கங்களையும் கொண்டவராகவுள்ளார்.**

கொழும்பு, ஓக.16
அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரரின் நடவடிக்கைகளால் அதிருப்தி அடைந்துள்ளனர். அவர்கள் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து பிக்கு என்னும் போர்வைக்குள் இருந்து கொண்டு அரசின் கைக்கூலியாகச் செயற்படும் ஞானசார தேரர் குறித்து முறையிடவுள்ளனர் - என்று தெரிவித்துள்ளார் மத்தியமாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இஸ்ரேலுக்கு விரோதமாக யாரேனும் குரலெழுப்பினால் அவர்களை முறியடிப்போமென்று ஞானசார தேரர் சூளுரைத்துள்ளார். அவருக்கு இந்தளவு அதிகாரத்தை இந்த அரசு வழங்கியுள்ளது. அமைச்சர் ராஜித சேனரத்னவுக்கு எதிராக இன்று பொதுபல சேனாவால் அவதூறுகள் பரப்பப்படுகின்றன. அதற்கு அரசே முழுப் பொறுப்பு உடையது.

ஏனெனில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உட்பட பல இடதுசாரிகள் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமைக்கு எதிரான கருத்தை உடையவர்களாக உள்ளனர். அதே கருத்தையுடைய அமைச்சர்கள் பலர் ஒன்றிணைந்து ஒரு அமைப்பாக அரசுக்குள்ளேயே செயற்படுகின்றனர். அதில் ராஜிதவும் உள்ளடங்குகின்றார். அதனால்தான் அவருக்கு எதிராக அரசு ஞானசார தேரர் மூலம் அவதூறுகளை பரப்பி வருகின்றது.

உண்மையில் பௌத்த துறவிகள் பெண்களுடன் தொடர்பற்று இருப்பர். ஆனால் ஞான சாரருக்கு காதலி உள்ளார். வாகனம் ஓட்டுகிறார். மதுபானம் உட்பட அனைத்து தீய பழக்கங்களையும் கொண்டவராகவுள்ளார்.

இவர் தொடர்ந்து தனது செயற்பாடுகளை முன்னெடுத்தால் 99.9 வீதமான சிங்கள பௌத்தம் அழிவை நோக்கி செல்லும் என்பதில் ஐயமில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# வலுவான வேட்பாளரை விரும்பமாட்டார் ரணில்

## என்கிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஓக.16
நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வலுவான பொது வேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடாவிட்டால் வேறு வலுவான ஓர் எதிர்க்கட்சி வேட்பாளரை போட்டியிட அனுமதிக்க மாட்டார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றியீட்ட மாட்டார் என்பதனை அறிந்து கொண்டதன் காரணமாகவே, ரணில் விக்கிரமசிங்க ஆதரவளித்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய எவரையும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ரணில் அனுமதிக்கப் போவதில்லை. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றியீட்டுவார் என சிலர் கருதுகின்றனர். ஆயினும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டக் கூடிய சொற்பளவு வாய்ப்பு இருக்கக் கூடிய சஜித் போன்றவர்கள் தேர்தலில் போட்டியிட ரணில் அனுமதிக்க மாட்டார்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



விமல் வீரவன்ஸ

# 11 மாதம் தந்தையைக் கட்டி வைத்திருந்த மகள் கைது



கொழும்பு, ஓக.16
கடந்த 11 மாதங்களாகத் தந்தையை வீட்டுக்குள் கட்டி வைத்திருந்த மகள் ஒருவரும் அவரது கணவரும் வெலிஹெபொல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு இதுகுறித்துக் கிடைத்த தகவலை அடுத்தே அவர்கள் முதியவரை மீட்டுள்ளனர்.

"86 வயதுடைய குறித்த முதியவர் கடந்த 11 மாத காலமாக வீட்டுக்குள் கட்டி வைக்கப்பட்டுள்ளார் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது"- என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆயினும் இதுகுறித்து விளக்கமளித்துள்ள மகள், "தந்தைக்கு மனநிலை சரியில்லை. அதனாலேயே அவரைக் கட்டி வைத்திருந்தோம்"- என்று தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட முதியவர் தற்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேக நபர்களான தம்பதிகளை பொலிஸார் பலாங்கொடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# தீ விபத்து

கொழும்பு, ஓக.16
புதுக்கடை நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகிலுள்ள கட்டடத்தில் நேற்றுத் தீ விபத்து ஏற்பட்டது.

குறித்த பகுதிக்கு உடனடியாக தீயணைப்பு வாகனங்கள் அனுப்பிவைக்கப்பட்டு, தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# பாகிஸ்தான் தஞ்சக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த வேண்டாம்

## இலங்கையிடம் கோருகின்றது ஐக்கிய நாடுகள் சபை

கொழும்பு, ஓக.16
இலங்கையில் தஞ்சமடைந்துள்ள பாகிஸ்தானியர்களை நாடு கடத்தும் திட்டத்தைக் கைவிடுமாறு கோரியுள்ளனர் ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு நிபுணர்கள்.


ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுபான்மையினர் தொடர்பிலான விசேட பிரதிநிதி மற்றும் சமய சுதந்திரம் மற்றும் நம்பிக்கை தொடர்பிலான நிபுணர் ஆகியோரே இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அவர்கள், "குறித்த பாகிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர்களுக்குத் தற்காலிகப் பாதுகாப்பு அவசியம்." - என்று வலியுறுத்தியுள்ளனர்.


அதேவேளை, பாகிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர் விடயத்தில் இலங்கை எந்தத் தவறையும் செய்யவில்லை என்று தெரிவித்துள்ளார் ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல.

"சுற்றுலா நுழைவிசைவில் இலங்கை வந்த அவர்கள், நுழைவிசைவு வரையறைகளை மீறிச் செயற்பட்டுள்ளனர். அதையடுத்தே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது."- என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

இவரு நம்ம ஊரு ஒபாமா



## இன்றைய பேஸ்புக் 'தத்துவம்'





**காதல் என்பது**
பிரான்ஸில்- காமெடி
இங்கிலாந்தில்- சோகம்
இத்தாலியில்- அதிசயம்
ஜேர்மனியில்- நாடகம்
நம்ம ஊரில்- பெண்களின் தேசிய விளையாட்டு

## அறிமுகமாகும் 'ஸ்மாட்' கைத்தொலைபேசி



ச ம்சுங் நிறுவனம் தனது புதிய 'ஸ்மாட்' கைத்தொலைபேசியான 'கலெக்ஸி அல்பா' ( Galaxy Alpha ) இனை அறிமுகம் செய்வது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

முற்றிலும் புதிய வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட இந்தக் கைத் தொலைபேசியானது உலோகத்தினாலான வெளி அமைப்பினை உடையதாகக் காணப்படுகின்றது.

4.7 அங்குல அளவு, 1.280 X 720 பிக்ஷ றிசலூசன் (Pixel Resolution) உடைய HD தொடுதிரையினைக் கொண்டுள்ளது. 1.8 Ghz வேகத்தில் செயற்படக்கூடிய 8 Core Processor, 1.3GHz வேகத்தில் செயற்படக்கூடிய Quad Core Processor ஆகியவற்றையும் ஒருங்கே கொண்டுள்ளது.

இவை தவிர 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 2.1 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

## இதுவுமா குளோனிங்!



குளோனிங் முறையிலான நாயொன்றை பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானியொருவர் முதன் முறையாக உருவாக்கியுள்ளார். 12 வயதுடைய டெக்ஷன்ட் இனத்தைச் சேர்ந்த வின்னி எனும் நாயொன்றின் மரபணுக்களை கொண்டு அதே போன்றதொரு நாய் உருவாக்கப்பட்டுள்ளது.

ரெபேகா ஸ்மித் (வயது- 29) என்பவரே வின்னியின் உரிமையாளராவார். வின்னியின் மரபணுவைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த குளோனிங் நாய்க்கு மினி வின்னி என்ற பெயரிடப்பட்டுள்ளது. சாதாரணமாக இவற்றை உருவாக்குவதற்கு 60 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்கள் செலவிடப்படும். ஆனால், வின்னியின் உரிமையாளரான ஸ்மித் போட்டியொன்றில் வெற்றி பெற்றதன் காரணத்தினால், இலவசமாகவே மினி வின்னி உருவாக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதம் பிறந்த இந்த குளோனிங் நாய்க்குட்டியானது தென்னாபிரிக்காவைச் சேர்ந்த விசேட நிபுணர் ஒருவரின் பராமரிப்பில் சுமார் 5 மாதங்கள் இருந்துள்ளது. அதன் பின்னரே, அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தனது இரு நாய்களும் மிகவும் ஆரோக்கியமாக உள்ளன என்றும் சிறு வயதில் வின்னி எவ்வாறெல்லாம் சேட்டைகளைச் செய்ததோ அவ்வாறே மினி வின்னியும் செய்கிறது என்றும் நாய்களின் உரிமையாளர் ஸ்மித் தெரிவித்துள்ளார்.





## சின்னத்திரை நாயகிக்கு டும்...டும்...

காயத்ரி தொடரில் நடித்து வரும் நிமாவுக்கு திருமணம் நடக்க இருக்கிறது. இவர் திருமணம் செய்துகொள்ள மாப்பிள்ளை டுபாயில் பொறியியலாளராக இருக்கின்றாராம்.

பெற்றோர்கள் பார்த்து முடிவு செய்த மாப்பிள்ளையாம். இதனால் சின்னத்திரை தொடருக்கு விடுமுறை போட்டுவிட்டு சொந்த ஊரான பாலக்காட்டுக்குச் சென்று விட்டார். நாளை மறுதினம் 18 ஆம் திகதி பாலக்காட்டில் நிச்சயதார்த்தம் நடக்க இருக்கிறது. டிசெம்பர் மாதம் திருமணம் நடக்கிறது. நிச்சயதார்த்தம் முடிந்ததும் மீண்டும் நடிக்க வந்து விடுவார் என்றும், திருமணத்துக்குப் பிறகு நடிப்பது பற்றி கணவர்தான் முடிவு செய்வார் என்றும் நிமாவுக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கிறார்கள். நிமா நிச்சயதார்த்தத்தில் நெருக்கமான உறவினர்களும், நண்பர்களும் மட்டுமே கலந்து கொள்கிறார்கள். திருமணத்துக்கு காயத்ரி தொடரில் நடிக்கும் ஒட்டுமொத்த குழுவையும் அழைக்க இருக்கிறாராம் நிமா.



## சர்ச்சையில் சிக்கிய ஷாருக்கான்

பொலிவூட்டின் முன்னணி நடிகர் ஷாருக்கான். இவர் எப்போதுமே கலகலப்பாக இருப்பார். விழாக்களுக்கு சென்றாலும் அதை அப்படியே தொடர்வார். மேலும் விழா மேடையில் தான் ஏறி நடனமாடி உடன் இருப்பவர்களை யும் ஆட வைத்து விடுவார். அந்தளவுக்கு கலகலப்பான மனிதர் ஷாருக்.

இந்த நிலையில் இந்தியாவின் மேற்கு மாநிலம், கொல்கத்தாவில் நடந்த பொலிஸ் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் ஷாருக் பங்கேற்றார். விழாவில் முதல்வர் மம்தா பானர்ஜியும் பங்கேற்றார். விழாவில், கலை நிகழ்ச்சியில் வழக்கம் போல் தனது பாணியில் ஆடிய ஷாருக், திடீரென பாதுகாப்புக்காக நின்றிருந்த பெண் பொலிஸ் ஒருவரை அப்படியே தூக்கி நடனமாடினார். கூடவே அந்த பெண் பொலிஸ்ும், ஷாருக்குடன் நடனமாடினார்.

இந்தச் சம்பவம் பெரும் சர்ச்சை உண்டாக்கியுள்ளது. பணியில் இருக்கும், அதுவும் பொலிஸ் உடையில் இருக்கும்போது இப்படி ஒரு நிகழ்வு நடந்திருப்பதால், இது பொலிஸ் உடையை அவமதிக்கும் செயல் என்று கூறி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிறைவான ஆரோக்கியம் தரும் பிஸ்தாம் பருப்பு



பிஸ்தாம் பருப்பில் அதிக அளவு விற்றமின் பி-6 உள்ளது. இது, இரத்தத்தில் ஹீமோகுளோபின் உற்பத்திக்கு மிகவும் அவசியமானது.

அத்துடன் செல்களுக்கு ஒக்சிசனை வழங்கக் கூடியது. பிஸ்தா பருப்பில் டெரிபின்தினேட், இனிப்புச் சுவையுடைய நறுமண எண்ணெய், காலோடானிக் அமிலம் ஆகியன காணப்படுகின்றன.

இவை நரம்பு மண்டலத்தைத் தூண்டி, ஹோர்மோன்களின் சுரப்பை அதிகப்படுத்தி, புத்துணர்ச்சியை உண்டாக்குகின்றன. பிரசவமான பெண்கள் பிஸ்தாம் பருப்பை பாலுடன் வேக வைத்தோ அல்லது நெய்யில் பொரித்தோ சாப்பிட்டு வந்தால் தாய்ப்பால் நன்கு சுரக்கும். ஆண், பெண் இருபாலாரும் பிஸ்தாம் பருப்பை சூடான பாலில் ஊறவைத்து தினமும் மாலையில் சாப்பிட சக்தி அதிகரிக்கும். பிஸ்தாம் பருப்பைச் சாப்பிடுவதால் உடலில் உள்ள கெட்ட கொழுப்பை குறைப்பதோடு ஆரோக்கியம் தரக்கூடிய கொழுப்பை அதிகரிக்கச் செய்யும். அத்துடன் பிஸ்தாம் பருப்பில் உள்ள பொஸ்பரஸானது குளுக்கோஸை அமினோ அமிலமாகச் சிதைக்கிறது. இதனால் நீரிழிவு நோயாளிகளுக்கு பிஸ்தாம் பருப்பு ஒரு நல்ல பயனுள்ள உணவாகும்.

ஆண், பெண் இருபாலாரும் பிஸ்தா பருப்பை சூடான பாலில் ஊற வைத்து தினமும் மாலையில் சாப்பிட சக்தி அதிகரிக்கும்.

# சுட்ட மீன் சாப்பிடுங்கள்



மீனில் உள்ள, ஒமேகா-3 என்ற அமிலமானது, நமது உடலுக்கு பலவிதமான நன்மைகளைத் தரவல்லது. ஆனால், வாரம் ஒரு முறை சுட்ட மீன் சாப்பிட்டால், அது மூளைக்கு நல்லது. சுட்ட மீனில், ஒமேகா-3 அமிலம் இருந்தா லும், அதனால், பிரச்சினை ஏற்படாது என்றும், ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

ஒவ்வொரு வாரமும், சுட்ட மீன் சாப்பிடும் போது, வாழ்க்கையின் பிற்பகுதியில், நினைவுச் சிதைவு பாதிப்பு ஏற்படுவது தவிர்க்கப்படும். அத்துடன், மூளையும் பலம் அடையும்.

மீனில் உள்ள, ஒமேகா-3 அமிலத்தால், நோய் எதிர்ப்பு சக்தி கூடி, மூளை பலம் அடையலாம் என, முன்னைய ஆய்வுகளிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, சுட்ட மீன் சாப்பிடுவதன் மூலம், இந்த மகத்துவம் மேலும் அதிக ரிக்கும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

# கண் பார்வைக்கு பலன் தரும் கரட்

கரட்டிலுள்ள விற்றமின் 'ஏ' கண்பார்வைக்கு நல்லது. கரட்டை இரண்டு துண்டாக வெட்டி அதன் உட்பகுதியை உற்று நோக்குங்கள். கிட்டத்தட்ட அது நமது கண்ணின் அமைப்பு போலவே இருக்கும். கரட்டுக்கு மஞ்சள் நிறத்தை அதிலுள்ள பீட்டா கரட்டின் என்ற அமிலம் தான் கொடுக்கிறது. இது மனிதக் கண்களில் புரை வராமல்



பாதுகாக்கிறது.

வயோதிபம் காரணமாக ஏற்படும் பார்வை குறைபாட்டைக்கூட பீட்டா கரட்டின் தடுத்து நிறுத்துகிறது. பீட்டா கரட்டின் மாத்திரைகள் எடுத்துக்கொண்டால் கூட அது கரட்டைப் போல பலன் தருவதில்லை என்பதும் உண்மை.

# பற்களின் கறைகளைப் போக்க



பல்துலக்கியைக் கொண்டு ஒரு முறைக்கு இரண்டு முறை பல் தேய்த்தாலும் நமது பற்களில் கறை கொஞ்சம் கொஞ்சமாக படிந்து விடுகிறது.

எனினும் நீண்ட நாள்களாக இருக்கும் கறைப் படிமங்களை சுத்தம் செய்வது மிகவும் எளிது. பொட்டாசியம் பர்மாங்கனேட் என்னும் வேதிப் பொருள்கள் இதற்குப் பலன் தரும். பக்கற்றுக்களில் கிடைக்கும் இவற்றை வெதுவெதுப்பான நீரில் மிகச் சிறிய அளவில் போட்டு அந்தத் தண்ணீரை வாயில் ஊற்றி நன்றாகக் கொப்புளிக்க வேண்டும். அதிகமாக இந்த வேதிப் பொருளை நீரில் போடக் கூடாது.

அதிக வேதிப் பொருள்களை சேர்ப்பதால் கரு ஊதா நிறமாக மாறும். துவர்ப்புத் தன்மை அதிகரித்து விடும். எனவே குறைந்த வேதிப் பொருள்களை சேர்த்து கொஞ்சம் கொஞ்சமாகக் கொப்புளித்த பின்னர் பல்துலக்கியால் சுத்தம் செய்யும் போது பல வருடங்களாக இருந்த கறைகள் பெயர்ந்து வெளியேறும். பற்கள் பளிச் சென்று ஆகிவிடும்.

# நாம் உண்ணும் உணவு சரியானதா?



எந்த உணவானாலும் உணவு உண்ணும்போதோ உண்ட பின்னரோ உடனே தண்ணீர் தேவைப்பட்டால் உண்ட உணவு உண்பதற்கு ஏற்ற நல்ல உணவு அல்ல என்றும் உடனே தண்ணீர் தேவைப்படவில்லை என்றால் அது உண்பதற்கு ஏற்ற நல்ல உணவு என்றும் அறிந்து கொள்ளலாம்.

உண்ணும் உணவால் ஒருவருக்குத் தாகம் எடுக்கிறது என்றால் அந்த உணவை நமது உடம்பு சாதாரணமாக ஏற்றுக்கொள்வில்லை என்பது பொருள். அதன்காரணமாகத் தண்ணீரைக் குடித்து சரிசெய்து மேலும் அதே உணவை வயிற்றில் செலுத்துகிறோம்.

உடம்புக்குத் தண்ணீர் தேவை இல்லாத போதும் உண்ட உணவு தண்ணீர் கேட்கிறது. அத்தகைய உணவு எதுவானாலும், உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதே.

அடுப்பில் வைத்து எண்ணெயின்றி வேகவைத்து சமைக்கப்படும் உணவுகள் குறைந்த தாகத்தையே ஏற்படுத்தும். எண்ணெயைக் கொண்டு தாளிக்கும் மற்றும் உப்பு காரம் நிறையச் சேர்க்கப்படும் உணவுகள் கூடுதல் தாகத்தை ஏற்படுத்தும்.

ஆனால் நெருப்பில் நேரடியாகவோ அல்லது காய்ச்சிய எண்ணெயில் போட்டோ சுட்டெடுக்கப்படும் உணவு வகைகள் உடனே அதிகமான அளவு தண்ணீர் கேட்கும்.

காரணம் ஒவ்வொன்றும் அவற்றைச் சமைக்கும் முறைக்கேற்ப அதிகமான தண்ணீர் குடித்தால்தான் நமது சமிபாட்டு உறுப்புக்களால் செயற்பட முடிகிறது.

இந்த இருவகைகளையும் ஒப்பிட்டுப்பார்த்தால் தண்ணீர்த் தாகத்தை அதிகப்படுத்தும் உணவுகள் எல்லாம் குறைந்த அளவிலிருந்து அதிகமான அளவு வரை நோய்களுக்குக் காரணமாக இருப்பதும் அப்படித் தாகத்தை உண்டுபண்ணாத உணவுகள் எல்லாம் நோய்களை உருவாக்குவது இல்லை என்பதோடு அனேக நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுவது உறுதிப்படும்.

அதற்குக் காரணம் இயற்கை உணவுகள் அனைத்தும் எளிதில் சமிபாடு அடைவதோடு அவற்றின் கழிவுப்பொருள்களும் எளிதில் வெளியேற்றப்படுகின்றன.

அதேசமயம் சமைக்கப்படும் விதத்துக்கேற்ப சமையல் உணவுகள் எளிதில் சமிபாடடையாமல் சிரமப்படுத்துவதோடு அவற்றின் கழிவுப்பொருள்களும் எளிதில் வெளியேறாமல் உடம்பிலேயே தங்கிப் பின் பல்வேறு நோய்கள் உருவாகக் காரணங்களாக மாறுகின்றன.

இயற்கை உணவுகள் தண்ணீரைச் சார்ந்து இருப்பது இல்லை பச்சையாக உண்ணக் கூடிய காய்கறிகள், கனிவகைகள், முளைக் கட்டிய தானியங்கள், பழச்சாறுகள், மூலிகைச் சாறுகள், இளநீர் போன்ற இயற்கை உணவுகள் தாகத்தை அதிகமாகத் தூண்டுவது இல்லை. இனியாவது இவற்றை அதிகம் எடுத்துக்கொள்வோம். ஆரோக்கிய வாழ்வு வாழ்வோம்.

உடம்புக்குத் தண்ணீர் தேவை இல் லாத போதும் உண்ட உணவு தண்ணீர் கேட்கிறது. அத்தகைய உணவு எதுவானாலும் உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதே.

# தனியார் கல்வி நிலையங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படவேண்டும்

## அந்தணர் ஒன்றியம் வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை

வவுனியா, ஓக.16
வவுனியா நகரப் பகுதியில் இயங்குகின்ற தனியார் கல்வி நிலையங்களைக் கட்டுப்படுத்தி குறிப்பிட்ட தினங்களில் குறிப்பிட்ட நேரங்களில் அறநெறி வகுப்புக்கள் நடத்த உதவி செய்யுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோரிடம் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.


முதலமைச்சருக்கு மனு

அறநெறி வகுப்புக்கள் இடம்பெறுகின்ற நாள்களில் குறிப்பிட்ட நேரங்களில் தனியார் பிரத்தியேக வகுப்புக்களைத் தடைசெய்வது தொடர்பாக வவுனியா அந்தணர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும், வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.
இதன்போது மேற்குறித்த வேண்டுகோள் அடங்கிய கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.
எமது கலை, கலாசாரத்தைப் பாதுகாக்கும் நோக்குடனும் அறநெறி வகுப்புக்களைத் தடையின்றி நடத்தக் கூடியதாகவும் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளிலும் பௌர்ணமி தினங்களிலும் காலை 9 மணியில் இருந்து மதியம் 12 மணி வரை அனைத்துத் தனியார் கல்வி நிலைய வகுப்புக்கள், பிரத்தியேக வகுப்புக்கள், பிற கலை வகுப்புக்கள் என்பவற்றைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-421)

## புதுக்குடியிருப்பு சந்தைக்கு புதிதாகக் கட்டடத் தொகுதி

கிளிநொச்சி, ஓக. 16
புதுக்குடியிருப்பு சந்தைக்கான கட்டடத்தொகுதி ஒன்று அமைப்பதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகப் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் மிதிலைநாதன்தெரிவித்தார்.

**இந்த மாத பிற்பகுதியில் இதன் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. படிப்படி யாக அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்**

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள பிரதான சந்தைகளில் ஒன்றாகக் காணப்படும் புதுக்குடியிருப்பு பொதுச் சந்தைக்குப் போதிய அடிப்படை வசதிகள் இதுவரை செய்து தரப்படவில்லை எனவும், மரக்கறி மற்றும் மீன் கடைத் தொகுதிகள் தொடர்ந்தும் தற்காலிகக் கொட்டகைகளில் இயங்கி வருவதனால் தமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதாகவும், இதனைப் பலரது கவனத்துக்குக் கொண்டு வந்தபோதும் எந்த விதமான முன்னேற்றங்களும் ஏற்படவில்லை எனவும் வர்த்தகர்கள் விசனம் தெரிவித்தனர்.
இந்தவிடயம் தொடர்பாகப் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் மிதிலை நாதனிடம் கேட்டபோது, சபையின் நிதியிலிருந்து புதுக்குடியிருப்பு சந்தைக்கு ஒரு கட்டடத்தொகுதி அமைப்பதற்கு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
இந்த மாத பிற்பகுதியில் இதன் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
சந்தையில் தொடர்ந்தும் படிப்படியாக அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்- என்றார். (த-55)

## கிளிநொச்சியில் வான் பயிர்கள் அழிவடையும் அபாய நிலைமை

### கடுமையான வறட்சியே காரணம்

கிளிநொச்சி, ஓக.16
கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வறட்சி காரணமாக. தென்னை, பலா, தேசி போன்ற பயிர்கள் அழிவடைந்து வருவதனால் அவற்றை நம்பி வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள் ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாள்களாக நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக சாந்தபுரம், அம்பாள் நகர், திருவையாறு, வட்டக் கச்சி, கல்மடுநகர், ஸ்கந்தபுரம், மணியங்குளம், ஐயனார்புரம், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், கண்ணகிபுரம், சுபாஸ் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் நிலவுகின்ற கடுமையான வறட்சி காரணமாகக் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
இதே நேரத்தில் பயன் தரும் நிலையில் காணப்பட்ட பெருமள வான தென்னை,பலா, தோடை, எலுமிச்சை போன்ற மரங்கள் அழிவடைந்த நிலையில் கருகிக் காணப்படுகின்றன.
இவற்றின் வருமானத்தைக் கொண்டு தமது வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்து வந்த இந்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மேற்படி பயிர்ச்செய்கைகள் அழிவடைந்து வருவதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். (த-55)


காய்ந்து போன வான் பயிர்கள்

## தற்போது நிலவும் வறட்சியை எதிர்கொள்ள வீட்டுத்தோட்டம்


வீட்டுத் தோட்டத்தில் மூதாட்டி

கிளிநொச்சி, ஓக 16
தற்போது நிலவும் வறட்சியை எதிர்கொள்ளக்கூடியதாக வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையை கிளிநொச்சி சாந்தபுரத்தில் தனித்து வாழும் மூதாட்டி ஒருவர் உற்சாகத்துடன் மேற்கொண்டு வருகிறார்.
தற்போது நிலவும் கடுமையான வறட்சி காரணமாகக் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. அத்துடன் பெருமளவான பயிர் செய்கைகள், வான் பயிர்கள் என்பன அழிவடைந்து வருகின்றன.
இந்த நிலையில் குறிப்பிட்ட சில விவசாயிகள் வறட்சியை எதிர்கொள்ளக் கூடியதும் தங்களுடைய தேவைகளை நிறைவு செய்யக்கூடியதுமான வகையில் வீட்டுத் தோட்டச் செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சாந்தபுரம் கிராமத்தில் தனித்து வாழும் 60 வயதுடைய றாக்கம்மா என்ற மூதாட்டி வறட்சியான காலநிலையை எதிர்கொள்ளக்கூடிய வகையிலும், குறைந்தளவில் நீரைப் பயன்படுத்தியும் வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொண்டு வருகிறார்.
இதேவேளை, தனக்குத் தேவையான மரக்கறிகளையும் இவ்வாறு பயிர்ச் செய்கை மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும் இந்த பயிர்களுக்கான தண்ணீரை சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவில் இருந்து எடுத்து வருவதா கவும் அவர் குறிப்பிட்டார். (த-55)

## சிறந்த பண்பாட்டை கட்டி வளர்த்தால் குடும்ப வன்முறைகள் குறைவடையும்

### உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 16
தமிழர்களுடைய சிறந்த பண்பாட்டை ஆண், பெண் இருபாலாரும் புரிந்துணர்வு ஊடாக கட்டிவளர்ப்பதன் மூலம் சமூகத்தில் ஏற்படும் குடும்ப வன்முறைகளைக் குறைக்க இயலும் எனக் கிளிநொச்சி மாவட்ட அரச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
'அக்ரெட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் கரைச்சிப் பிரதேச கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினால் "பால்நிலை சமத்து வத்தை நோக்கி ஒன்றிணைந்து சிந்திப்போம். செயற்படு வோம். மகிழ்வோடு வாழ்வோம்" என்ற தொனிப்பொருளுடன் கிளிநொச்சி பன்னங்கண்டி கிராமத்தில் கடந்த 9ஆம் திகதி தெருவெளி அரங்காற்றுகை ஒன்று இடம்பெற்றது.


தெருவெளி நாடகத்தின் ஒரு காட்சி

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆண், பெண் இருபாலாருக்குமான உரிமைகளைச் சமமாகப் பேணி ஒற்றுமையாக வாழ்வதுதான் பால்நிலை சமத்துவமாக பார்க்கப்படுகின்றது. இன்று பார்க்கும்போது எமது மாவட்டத்திலே மீள்குடியமர்வுக்குப் பின்னர் பல்வேறு நிலைகளிலே பொருளாதார அபிவிருத்தியும் உட்கட்டுமான அபிவிருத்தியும் துரிதமாக இடம்பெறுகிறது. ஆனால் சமூக நிலையைப் பார்க்கின்றபோது நிறையப் பிரச்சினைகள் காணப்படுகின்றன.
பெண்கள் பல நெருக்கடிகளை எதிர் கொள்கின்றார்கள். குடும்பங்களிலே பெண்கள், சிறுவர்கள் கூடுதலாகத் தாக்கப்படுகின்றார்கள்.
பெண்கள் சிறுவர்களுடைய நிலைமை பல சம்பவங்களுடாக மோசமடை வதைக் காணக் கூடியதாக வுள்ளது.
கிளிநொச்சி பொது மருத்துவமனையிலும், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் பல பதிவுகளின் மூலம் ஆண், பெண் சமமின்மையால் ஏற்பட்ட விளைவுகளைப் பார்க்கின்றோம்.
எனவே இந்தச் சமூகச் சீரழிவை உணர்ந்து அல்லது தமிழர்களுடைய சிறந்த பண்பாட்டைப் புரிந்துகொண்டு பண்பாட்டின்படி ஒழுகிச் சிறந்த சமூகத்தைக் கட்டி வளர்ப்பதில் ஆண், பெண் இருபாலாருக்கும் இடையே புரிந்துணர்வு முக்கியமான தாகும் - என்றார். (த-18)

# பயிற்சி, போட்டிகளுக்கு முன்னர் விளையாட்டு மருத்துவ சேவை

## அனைவருக்கும் கட்டாயமானது

யாழ்ப்பாணம், ஓக. 16

ஒவ்வொருவரும் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் பயிற்சிகள், போட்டிகள் என்பவற்றில் ஈடுபடுவதற்கு முன்னர் விளையாட்டு மருத்துவம் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அதனை யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள விளையாட்டு மருத்துவப் பிரிவில் பெற்றுக்கொள்ளுங்கள். அதனை எக்காரணம் கொண்டும் தவிர்க்கவேண்டாம் என்று விளையாட்டு, உடற் பயிற்சி அதிகாரிகள் மற்றும் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் விளையாட்டு மருத்துவப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் நிகழ்வு யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக உள்ள மருத்துவ மாணவர் விடுதியில் உள்ள கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

அதில் கருத்துரை வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலையின் முறிவு நெரிவு மருத்துவ நிபுணர் ரி.கோபி சங்கர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்றாடம் பயிற்சியில் ஈடுபடும் அனைவருக்கும் விளையாட்டு மருத்துவம் மற்றும் ஆலோசனைகள் தேவையானது. பலர் இதனை முழுமையாகப் பெறவில்லை. ஆனால் பயிற்சிகள் மற்றும் போட்டிகளுக்கு முன்னர் இதனைப் பெற்றிருப்பது கட்டாயமாகும். அதன் மூலமாகவே பயிற்சியில் அல்லது போட்டியில் ஈடுபடும் ஒருவருக்கு உள்ள உடல் உள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய முடியும்.


போட்டி மற்றும் பயிற்சிகளுக்கு இவை முக்கியமானவை. அவர்களுக்கு உள்ள உடல் உளப் பாதிப்புகள் பற்றி அவர்கள் தெரிந்திருக்காது விட்டால் தேவையற்ற இழப்புகளை எதிர்கொள்ள வேண்டிவரும். அந்த இழப்புகளைத் தவிர்க்கவே இந்த விளையாட்டு மருத்துவ பரிசோதனை அவசியமாகிறது.

பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் ஒருவர் தனது உடல் கட்டமைப்பைப் பேண முடியும். இது தவிர பயிற்சிகள், போட்டிகளில் ஈடுபடுபவர்கள் அதற்கு முன்னர் அதற்கென உள்ள படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்து கொள்ளல் வேண்டும். அதனைச் சமர்ப்பித்தால் அதன் மூலமாக அவரது உடல் நிலை பற்றி அறிய முடியும். அதனைச் சிலரே பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே பாடசாலை மாணவர்கள் விடயத்தில் பாடசாலை அதிபர்களும், தனியார் கழகங்கள் விடயத்தில் அவற்றுக்குப் பொறுப்பானவர்களும் மாத்திரமன்றி விளையாட்டு அதிகாரிகளும் இந்த விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பாதிப்புகள் ஏற்படும் பட்சத்தில் அவர்களே பொறுப்புக் கூறுபவர்களாக உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்த சேவையை அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். இந்தச் சிகிச்சையைத் திறம்பட மேற்கொள்வதற்கென 10 இற்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் கொண்ட அமைப்பு ஒன்றும் நேற்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஆனந்த குணசேகர, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பவானி பசுபதிராஜா மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் ஆகியோர் காப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த நிகழ்வில் மருத்துவர்கள், உடற்கல்வி, விளையாட்டு அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-4)

## ரயில் கடவை இடமாற்றத்தால் நந்தாவில் மக்கள் அசௌகரியம்



யாழ்ப்பாணம், ஓக. 16

முன்னர் இருந்த இடத்தில் அல்லாமல் பிறிதொரு இடத்தில் ரயில் கடவை பாதை அமைக்கப்படுவதால் தாம் பல்வேறு போக்குவரத்து நெருக்கடிகளையும், பல அசௌகரியங்களையும் சந்திக்க நேரிடும் என நந்தாவில் அம்மன் கோயில் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் ரயில் கடவைகள் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன. குறித்த ரயில் கடவை சீரமைப்பு நடவடிக்கைகள் தற்போது கொக்குவில் பகுதியில் இடம்பெற்று வரும் நிலையில், பல வருடங்களாக பொதுமக்கள் பயன்படுத்தி வந்த வீதிகள் இதனால் மூடப் படும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ரயில் சேவை நடைமுறையில் இருந்தபோது குறித்த பகுதிகளில் மக்கள் வீதியைக் கடப்பதற்கு இலகுவாக அமைக்கப்பட்டிருந்த நான்கு கடவைப் பாதைகள் தற்போது ஒன்றாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு குறைக்கப்பட்ட ஒரு கடவையும் தற்போது பொருத்தமற்ற இடத்தில் அமையவுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த இடங்களில் அமைந்துள்ள கொக்குவில் இந்துக் கல்லூரி, இராமகிருஷ்ண மிசன் ஆகிய பாடசாலைகளில் கற்கும், மாணவர்கள், கற்பிற்கும் ஆசிரியர்கள் கடவை இல்லாத காரணத்தால் 3 மைல் தூரம் சுற்றிச் சென்றே பாடசாலைகளை அடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள நந்தாவில் அம்மன் கோயிலுக்கான கடவைப் பாதையும் முடக்கப்பட்டுள்ளமை யினால் குழந்தைகள், பொதுமக்கள் , வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள் எனப் பலரும் பல அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடும் எனப் பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாக ரயில் திணைக்களத்தின் குறித்த பகுதிக்குரிய பொறியியலாளரோடு தொடர்பு கொண்டு கேட்டபோது, ஒரு கடவைப் பாதை அமைப்பதற்கே தமக்கு அனுமதி தரப்பட்டிருப்பதாகவும், பாதுகாப்புக் காரணமாகவே கடவைப் பாதை நாமல் ஒழுங்கை என்ற பகுதியில் அமைக்கப்பட இருப்பதாகவும் தெரிவித்தார். (த-22)

# வாக்காளர் பதிவு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக் கடைசிச் சந்தர்ப்பம்

## உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16

வாக்காளர் பதிவு விண்ணப்பங்களை இதுவரை யாராவது சமர்ப்பிக்காமல் இருந்தால் அவர்கள் தமது பகுதி கிராம சேவையாளரிடமோ அல்லது யாழ். மாவட்டத் தேர்தல்கள் திணைக்களத்திடமோ அதனைச் சமர்ப்பிக்க முடியும் என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகின. வீடு வீடாக வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவம் (பி.சி படிவம்) விநியோகிக்கப்பட்டது. பின்னர் அவை மீளப் பெறப்பட்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி யாழ். மாவட்டத் தேர்தல்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இந்த நடவடிக்கைகளும் ஜூலை மாதத்துடன் முடிவுக்கு வந்தன.

இந்த நிலையில் தற்போது பி.சி படிவங்களைக் கையளிப்பதற்குப் பொதுமக்கள் கிராம சேவையாளரிடம் சென்றால், 'படிவங்கள் கையளிக்கும் நடவடிக்கைகள் முடிவடைந்து விட்டதால் ஒன்றுமே செய்ய முடியாது' என்றோ, 'உரிமைக் கோரிக்கைக் காலப் பகுதியில் உரிமைக் கோரிக்கையொன்றைச் சமர்ப்பியுங்கள்' என்றோ, '2015 ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பின்போது பெயர்களை உட்சேருங்கள்' என்றோ கூறுவதைத் தவிர்க்குமாறும், பொது மக்களிடமிருந்து அதனைப் பெற்றுப் பரிந்துரையுடன் யாழ். மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தில் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று பி.சி படிவங்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவித்து வருபவர்களிடம் புதிய படிவத்தை வழங்கி அதனைப் பூர்த்தி செய்வித்து மீளப் பெற்று பரிந்துரையுடன் யாழ். மாவட்டத் தேர்தல்கள் திணைக்களத்துக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி வரையில், ஒருவர் இந்த ஆண் டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலில் தன்னைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# வாழ்வெழுச்சிப் பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம்



யாழ்ப்பாணம், ஓக.16

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் 'திவிநெகும' வாழ்வின் எழுச்சித் திட்டக் கைத்தொழில் பயனாளிகளுக்கான சுய தொழில் ஊக்குவிப்புத் திட்டம் மற்றும் இலகு கடன் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் வாழ்வெழுச்சிப் பயனாளிகளின் தேவைகள், தொழில் முன்னேற்றம், தொழில் முயற்சியாளர்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன் வங்கிக் கடனுதவித் திட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

வாழ்வெழுச்சித் திட்டத்தில் தொழில் முயற்சிக்கான உபகரணங்களைப் பெற்றவர்கள் பலர் தொழில் முயற்சிகளை முன்னெடுக்காததால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளதாக நல்லூர் பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன் தெரிவித்தார்.

தொழில் முயற்சிக்கான உபகரணங்களைப் பெற்றும் அவற்றைப் பயன்படுத்தாதவர்களிடமிருந்து அவற்றை மீளப் பெற்று வேறு புதிய முயற்சியாளர்களுக்கு வழங்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொழில் முயற்சியாளர்கள் போதிய வருமானம் பெறக் கூடியதாக, ஒவ்வொரு கால கட்டத்தில் எத்தகைய உற்பத்திகளைச் சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என்பதைத் தெரிந்து கொண்டு தமது தொழில் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இதுவரை தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் புதுமுயற்சி தேவை என்பதை ஒவ்வொரு பயனாளியும் சிந்தித்துச் செயற்படுத்த வேண்டியது இன்றியமையாதது என்றும் வலியுறுத்தப்பட்டது.

நிகழ்வில் நல்லூர் பிரதேச தொழில் முயற்சி இணைப்பாளர் எஸ். தனம், திருநெல்வேலி மக்கள் வங்கி முகாமையாளர் சத்தியமூர்த்தி, விதாதா வள நிலையத்தைச் சேர்ந்த ந. சதீஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-7)

## இன்று மணிவிழா

அச்சுவேலி, ஓக.16

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றி 60 ஆவது வயதில் அரச சேவையில் இருந்து ஓய்வுபெறும் வே.கா. கணபதிப் பிள்ளையின் மணிவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆசிரியர் கலாசாலையில் ரதிலஷ்மி மண்டபத்தில் மணிவிழாக் குழுத் தலைவர் வீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெறும்.

மணிவிழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அருட்பணி செ. அன்புராசா, மௌலவி, எம்.ஏ. பைசர் ஆகியோர் ஆசியுரை வழங்குகின்றனர். கல்வியியலாளர்கள் பலரும் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. குணநாதன், லயன் வை... கராசா, ஓய்வுநிலை வி...வுரையாளர் இ. மருதலிங்கம், வி.எஸ். குணசீலன், திரு...தி வதனி கேதாரநாதன், ப...ய மாணவன் சி. சிவரூபன், மாணவத் தலைவன் ம. ச...த ரூபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

'கணாதீபம்' மணிவிழா ம...லரும் வெளியிடப்படவுள்ளது. மலர் வெளியீட்டுரையை ச. லலீசன் ஆற்றுவார். (ஞ 11)

# இணுவில் ஆலயத்தில் உறியடி உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக 16

இணுவில் திருப்பதி என அழைக்கப்படும் ஸ்ரீவெங்கடேஸ்வரர் ஆலய கிருஷ்ணஜெயந்தி பெருவிழாவும், உறியடி உற்சவமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்று பிற்பகல் 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 5.30 மணிக்கு வெங்கடேசப் பெருமான் ஸ்ரீகிருஷ்ணனாக எழுந்தருளி 6 மணிக்கு உறியடி உற்சவமும் இடம்பெறும். இரவு 7 மணியிலிருந்து 9 மணிவரை தொட்டிலில் கிருஷ்ண தரிசனமும் பின்னர் விசேட தாலாட்டுப் பூசையும் இடம்பெறும். இந்தக் காட்சிகளைக் கண்டுகளிக்க வருமாறு அடியார்களை ஆலயத்தினர் கேட்டுள்ளனர். (த-4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அழகுக்கலை சிகிச்சை நிலையங்கள் குறித்து கூடுதல் கவனம் தேவை

அழகுக்கலைச் சிகிச்சை நிலையம் ஒன்றில் சிகிச்சை பெறச் சென்ற பெண் வைத்தியர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் குறித்து கடந்த சில தினங்களாக ஊடகங்களில் பரபரப்பாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. குறித்த பெண்ணுக்கு வைத்தியம் செய்த வைத்தியர் கைதுசெய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளார். நீதிமன்றின் விசேட உத்தரவுக்கிணங்க கொழும்பு சட்டவைத்திய அதிகாரி உட்பட்ட அறுவர் அடங்கிய குழு பம்பலப்பிட்டியிலுள்ள பிரஸ்தாப அழகுக்கலை சிகிச்சை நிலையத்தில் சோதனைகளை நடத்தியுள்ளது. கைதுசெய்யப்பட்டுள்ள டாக்டர் சத்திரசிகிச்சை செய்வதற்கான தகைமை உள்ளவரா? சத்திரசிகிச்சைக்குத் தேவையான உபகரண வசதிகள், மயக்க மருந்து மற்றும் வைத்தியரின் உதவி, கழிவறை போன்ற தேவையான வசதிகள் அங்கு உள்ளனவா என்பவை குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரஸ்தாப பெண் வைத்தியர் தனது கண்ணின் கீழ் இருந்த கருவளையங்களை அகற்றுவதற்கு பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை செய்துகொள்ள பிரஸ்தாப அழகுக்கலை நிலையத்துக்கு வந்திருந்தார் என்றும், மயக்க மருந்து ஊசி ஏற்றப்பட்டவுடன் அங்கேயே அவர் உயிரிழந்தார் என்றும் கூறப்படுகிறது. கைதான வைத்தியரின் தகைமை குறித்து தற்பொழுது சர்ச்சை கிளப்பப்பட்டு வருவதால் இந்தப்பெண் வைத்தியரின் மரணம் பல விடயங்களை வெளிக் கொண்டு வர உதவலாம்.

கைதுசெய்யப்பட்டுள்ள வைத்தியர் சத்திரசிகிச்சை செய்வதற்கான தகைமையைக் கொண்டிருக்கவில்லை என்கிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம். சுகாதார அதிகாரிகள் முன்னரே உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் பிரஸ்தாப பெண் வைத்தியரின் மரணத்தைத் தவிர்த்திருக்கலாம். தொடர்மாடி வீடு ஒன்றில் அழகுக்கலை நிலையம் என்ற பெயரில் சத்திர சிகிச்சைகள் இடம்பெறுவது குறித்தும் அதனை மேற்கொள்ளும் வைத்தியர் அதற்குத் தகுதியானவர் இல்லை என்பது குறித்தும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சுகாதார அமைச்சின் கவனத்துக்கு சில வைத்தியர்கள் கொண்டுவந்திருந்தனர் என்று கூறப்படுகிறது. அப்படி இருந்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதுமான நடவடிக்கை எடுக்கத் தவறியமை துரதிர்ஷ்டம் வாய்ந்தது; விசாரணைக்குரியது. அழகுக்கலை சிகிச்சைக்காக இன்று அழகுச் சிகிச்சை நிலையங்களுக்கு பலர் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைக் குறிவைத்துப் கொழும்பிலும் நாட்டின் மற்றைய பகுதிகளிலும் பல நிலையங்கள் இயங்குகின்றன. புதிய புதிய உத்திகளைக் கையாண்டு ஏராளமான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையங்களின் பிரதான நோக்கம் பணம் கறப்பதுதான். முக அழகுச் சிகிச்சைக்குச் செல்லும் ஒருவர் இடையில் அதை நிறுத்த முடியாது. நிறுத்தினால் முகம் விகாரமடைந்துவிடும். ஒரு தடவை சிகிச்சைக்கு வருவோர் தொடர்ந்து வரும்போது பெரும் தொகையான பணம் அவர்களிடமிருந்து அறவிடப்படுகிறது. உயிரிழந்த பிரஸ்தாப பெண் வைத்தியர் கண்ணின் கீழ் இருந்த கருவளையங்களை அகற்றுவதற்கு ஒரு லட்சம் ரூபா செலுத்தியதாகக் கூறப்படுகிறது.

கைதான வைத்தியர் சத்திரசிகிச்சை செய்வதற்குத் தகுதியற்றவர் என்றும் அவர் விசேட வைத்தியர் அல்லர் என்றும் குற்றஞ்சாட்டப்படுவதால் சுகாதார அமைச்சு நாட்டிலுள்ள விசேட வைத்தியர்களின் பெயர் விவரப்பட்டியலைத் தயாரித்து வெளியிடுவது அவசியம். இதன் மூலம் தகுதியற்ற வைத்தியர்களை இனங்கண்டு கொள்ள முடியும். ஐந்து வருடங்கள் மருத்துவப் பட்டப்படிப்பை நிறைவு செய்து இரண்டு வருடங்கள் விசேட பயிற்சி பெற்றதன் பின்பே ஒருவர் வைத்தியராகக் கடமையாற்ற சர்வதேச தகைமை பெறுகிறார். ஆனால் தனியார் துறையில் விசேட வைத்தியர் ஒருவரை இனங்காண்பதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது. அதிலுள்ள பாதகத் தன்மை சுகாதார அமைச்சுக்குச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து விசேட வைத்தியர்களின் பெயர் விவரங்கள் உள்ளடங்கிய பட்டியலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு எதிராக சிலர் நீதிமன்றில் சட்ட நடவடிக்கை எடுத்ததால் பட்டியலை வெளியிடும் முயற்சி கைவிடப்பட்டது. பம்பலப்பிட்டிச் சம்பவத்தில் ஒருவர் தகுதியான வைத்தியரா என்பதை ஒரு வைத்தியராலேயே இனங்காண முடியவில்லையென்றால் அப்பாவிப் பொது மக்களின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

ஆகவே சுகாதார அமைச்சு பதிவுசெய்யப்பட்ட விசேட வைத்தியர்களின் பெயர்விவரப் பட்டியலை வெளியிட வேண்டும். அதேசமயம் நாட்டில் பிரதானமாக கொழும்பில் மூலை முடுக்குகளில் எல்லாம் அழகுக்கலை சிகிச்சை நிலையம் என்ற பெயரில் இயங்கும் நிலையங்களில் திடீர் சோதனை நடத்தப்படுவது அவசியம்.

# மஹிந்த மண் கவ்வ நேரிட்டால் குடும்பமே அல்லாடிப் போகும்

## அரசியலில் அநாதையாகிவிடும் நிலை வரும்

சிங்கள மூலம் : உபுல் யோசெப் பெர்னாண்டோ
தமிழில் : வீ.எஸ்.ரீ



இனிவரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வெற்றி பெறுவது இலேசானதொன்றாக இருக்கப் போவதில்லை என்பது தற்போது பொது மக்கள் மத்தியில் பரவலாக உலவும் ஒரு கருத்து. தேர்தலில் மஹிந்தவை எதிர்த்துப் போட்டியிடப் போகும் எதிரணியினரின் பொது வேட்பாளர் எவரென இன்னமும் தீர்மானிக்கப்படாததால், மஹிந்த இந்தமுறை தோல்வியையே தழுவுவார் என இதுவரை எவரும் கருத்துக்கூற முனையவில்லை.

அதுசரி, ஒருவேளை மஹிந்த இந்த முறை தோல்வியடைய நேருமானால் என்னதான் நடக்கும்? என அண்மையில் பழைய இடதுசாரி அரசியல்வாதியொருவர் வினவியிருந்தார். உண்மையில் இந்த நாட்டின் வரலாற்றில், ஜனாதிபதியாகப் பதவியில் இருந்து கொண்டே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட எவர்தானும் தேர்தலில் தோல்வி கண்டதில்லை. 1988 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டாரே தவிர, தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடையவில்லை. 1993 ஆம் ஆண்டில் பதவியில் இருந்த வேளையே பிரேமதாஸ படுகொலையுற நேர்ந்தது. 1994 இல் டி.பி.விஜேதுங்கவும்கூட பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். 2005 இல் சந்திரிகாவும் பதவியில் இருந்த போதே ஓய்வுபெற நேர்ந்தது. நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையில் ஜனாதிபதியொருவர், ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற வேண்டி ஏற்படாது. ஏனெனில் ஜனாதிபதியாகவிருக்கும் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கான பின்னணி அந்த நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறைமூலம் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அது ஜனாதிபதியொருவர் இரு தடவைகள் மட்டுமே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஜனாதிபதியொருவர் மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், அவரால் அந்தத் தேர்தலில் வெற்றி பெற வாய்ப்பிருக்காது என அரசமைப்பை உருவாக்கிய வேளையில் ஜே.ஆர். எண்ணியிருந்திருக்கக் கூடும். ஆனால் அரசமைப்பில் திருத்தம் மேற்கொண்டதன் மூலம் ஜனாதிபதியொருவர் மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இயலும் என்பதற்கு மஹிந்த வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளார். ஆனால் ஜனாதிபதியொருவர் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைய நேர்ந்ததால் அவரது நிலை என்னவாகும் என்பதை மஹிந்த சிந்தித்துப் பார்த்ததாக தோன்றவில்லை. உண்மையில் அத்தகையதொரு நிலை ஏற்பட்டால், குறிப்பிட்ட அந்த ஜனாதிபதி அரசியல் அநாதை என்ற நிலைக்கு உட்பட நேரும். அவர் வெறும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவியைக் கூட அரசியலில் வகிக்க இயலாது போய்விடும். ஜனாதிபதி மஹிந்த அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைய நேருமானால் அவர் உண்மையில் சேவையிலிருந்து ஓய்வுபெற்று வீடு செல்லும் பொலிஸ்காரர் ஒருவரின் நிலையில் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொள்ள நேரிடும். அவ்விதம் தோல்வியுற நேர்ந்தால்கூட எப்படியும் அவர்தானே சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கப் போகிறார் என்றதொரு கேள்வியும் இந்த இடத்தில் எழக்கூடும்.

ஜனாதிபதியொருவர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடையும்வேளை, ஜனாதிபதிப் பதவியின் சிறகுகள் மட்டுமன்றி கட்சித் தலைமைப் பதவியின் சிறகுகளும் கழற்றப்பட்டுவிடும். அத்தகைய நிலையில் குறிப்பிட்ட அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரே பலம் பொருந்தியவராகிறார். மஹிந்த ஒருவேளை ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றால் அவர் அடுத்துவரும் சுதந்திரக்கட்சியின் அரசியல் சபைக் கூட்டத்தில் சிக்கலை எதிர்கொள்ள நேரிடும். கட்சியின் பொதுச் செயலாளரின் தலைமையில் இடம்பெறும் அந்த அரசியல் சபைக் கூட்டத்தில் மஹிந்த சாதாரண ஓர் உறுப்பினராகவே கலந்து கொள்ள நேரிடும். அந்த அரசியல் சபைக் கூட்டத்தில் அரசியல் தீர்மானம் எதனையும் மேற்கொள்ளும் அதிகாரம் மஹிந்தவுக்குக் கிட்டாது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் பிரதமராக ஒருவர் இருந்த வேளையில், அவர் சார்ந்த கட்சி பொதுத் தேர்தலில் தோல்விகண்ட சந்தர்ப்பங்களும் ஏற்பட்டதுண்டு. தமது கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்கள் பெறாததால் அரசமைக்கும் வாய்ப்பை அந்த முன்னாள் பிரதமர் இழந்தாலும், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியாவது மிஞ்சும். அவ்விதம் அரசமைக்க இயலாது போனாலும்கூட , பெரும்பாலும் எதிர்க்கட்சித் தலைவராகவோ அல்லது தலைவியாகவோ பதவி வகிக்கும் வாய்ப்பு அந்த முன்னாள் பிரதமருக்குக் கிட்டக்கூடும். அதன் பின்னர் தாம் சார்ந்த கட்சியின் தலைமைத்துவத்தை வலுப்படுத்த அந்தத் தலைவரோ அல்லது தலைவியோ தமது எதிர்க்கட்சித் தலைமைப் பதவியின் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு அமையும். இரு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றும், ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியை தக்க வைத்துக் கொள்ள அவரது நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவிக்குரிய அதிகாரமே கைகொடுத்துள்ளது. கட்சித் தலைமைப் பதவியையும் இழந்து எதிர்க்கட்சித் தலைமைப் பதவியும் கிட்டாமல் போன ஒரேயொரு சந்தர்ப்பம் 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போதே இடம்பெற்றது. அவ் வேளை சிறிமாவோவுக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவி கிட்டாதபோதிலும் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவருக்கெதிராக குற்றவியல் பிரேரணையொன்றைக் கொண்டுவந்து அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் பறித்துவிட ஜே.ஆர்.முயன்றமை, ஒரு தலைவருக்கோ, தலைவிக்கோ நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாதுவிட்டால், அவரால் தாம் சார்ந்த கட்சியின் தலைமைப் பதவியின் அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தச் சிரமம் ஏற்படும் என்பதை அவர் அறிந்திருந்தமையினாலேயே ஆகும். கடைசியில் ஜே.ஆர்.போட்ட கணக்கே சரியாகியது. கட்சி பிளவுண்டு சிறிமாவோ சுதந்திரக் கட்சியின் கட்சிச் சின்னத்தையும், கட்சியின் தலைமைப் பணிமனையையும் இழக்க நேர்ந்தது. 1983 ஆம் ஆண்டில் அமிர்தலிங்கம் தரப்பினரின் நாடாளுமன்ற உறுப்புரிமை பதவி பறிபோன பின்னர் சிறிமாவோவின் மகன் அனுர பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவராக ஆனதையடுத்து சிறிமாவோவால் மீண்டும் தனது சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை பாதுகாத்துக் கொள்ள வாய்ப்புக் கிட்டியது. எது எவ்வாற்றானபோதிலும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவியின்றி பொதுத் தேர்தலிலோ அல்லது ஜனாதிபதித் தேர்தலிலோ போட்டியிட்டு வெற்றிபெறுவதென்பது சிரமமானதொன்று என்பதற்கு சிறிமாவோவுக்கு ஏற்பட்ட அனுபவம் மிகப்பொருத்தமான ஒன்றாகும்.

2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வெற்றியடைந்த பின்னர், படுகொலை செய்யப்பட்ட முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவால் வெற்றிடமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு சந்திரிகா நியமிக்கப்படவுள்ளார் என்ற கதையொன்று பரவலாக அடிபட்டது. ஆனால் மஹிந்த அதற்கு இடமளிக்கவில்லை. 2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் சந்திரிகா ஜனாதிபதிப் பதவியைக் கைவிட்டு நாடாளுமன்றத்துக்குள் நுழைந்திருப்பாரானால், சந்திரிகாவை சுதந்திரக் கட்சித் தலைவி என்ற பதவியில் இருந்து வெளியேற்றுவது மஹிந்தவுக்குச் சிரமமானதாக அமைந்திருக்கும். ஒருவேளை கட்சியின் தலைமைப் பதவிதான் பறிபோனாலும் சந்திரிகா அரசியல் சபையில் அங்கம் வகிக்க வாய்ப்பு இருந்திருக்கும். அவ்விதம் நிகழ்ந்திருந்தால் மஹிந்தவுக்கு சுதந்திரக் கட்சியின் முற்று முழுதான உரிமையைக் கைப்பற்ற வாய்ப்புக் கிட்டியிருக்காது. ஒருவேளை மஹிந்த எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற நேர்ந்தால் இலங்கை அரசியலரங்கில் பஸில் ராஜபக்ஷ , நாமல் ராஜபக்ஷ மற்றும் சமல் ராஜபக்ஷ ஆகியோர் மட்டுமே நிலைத்து நிற்க இயலும். ஏனெனில் இந்த மூவருமே இன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள். அதுவுமின்றி பஸில் தேசிய அமைப்பாளர். சமல் நாடாளுமன்றத்தின் சபாநாயகர். கோத்தபாய ராஜபக்ஷவினால் தமது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியைப் பாதுகாத்துக்கொள்ள இயலுமென நம்பமுடியாது. மஹிந்தவின் ஜனாதிபதி அதிகாரம் அற்றுப் போகுமானால், பஸிலாலோ, நாமலாலோ அல்லது சமலாலோ தானும் சுதந்திரக் கட்சிக்குள் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வது இலேசானதொன்றாக அமையாது. இவை பற்றியெல்லாம் மஹிந்த கூட்டிக் கழித்துக் கணக்கிடாமல் இருந்திருக்கமாட்டார். ஆதலால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெறுவதற்காக எதையெல்லாம் செய்ய வேண்டுமோ, செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் மேற்கொள்ள மஹிந்த பின்னிற்கப் போவதில்லை. இவற்றை மனதில் இருத்தி எதிரணியினர் மஹிந்தவைத் தோற்கடிப்பதற்கான தோற்கடிக்கக் கூடிய பொது வேட்பாளர் எவர் என்பதை முடிவுசெய்ய வேண்டிய வேளையிது.

# இளமை திரும்புமா?

குமரன்



இளமையைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அழகு நிலையமொன்றில் ஊசி மூலமாக மருந்தை ஏற்றிக் கொண்ட பெண் மருத்துவர் ஒருவர் அந்த மருந்து விசமானதால் இறந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மருத்துவர் ஒருவருக்கே இந்தக் கதியென்றால் ஏனையவர்களின் நிலை தொடர்பாக ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தருணம் இப்போது வந்துவிட்டது என்றுதான் கூறவேண்டும்.

மனிதர்களில் எவருமே இறப்பதற்கு விரும்புவதில்லை. ஒரு சிலர் ஏதோ காரணத்துக்காக அவசர முடிவுகளை எடுத்து தற்கொலை செய்து கொள்கின்றனர். ஆனால் தற்கொலை முயற்சியில் தோல்வி கண்டவர்களில் பலர் மீண்டும் அந்த முயற்சியில் ஈடுபடுவதில்லை. உயிரின் மீதுள்ள ஆசையே இதற்குக் காரணமாகும். ஆண்டொன்று போக வயதொன்றும் போய்விடும். எமது இளமையிலும் சிறிய சரிவொன்று ஏற்பட்டுவிடும்.

சினிமாப் படங்களில் துள்ளி ஓடித் திரிந்த கதாநாயகி ஒருவரை அவரது வயோதிப காலத்தில் பார்க்கும்போது வேதனையாகத்தான் இருக்கின்றது. இளமையில் பூத்துக் குலுங்கிய அவர் காய்ந்த சருகாகக் காட்சியளிக்கின்றார். ஏனைய மனிதர்களின் நிலையும் இதுதான். இதனால்தான் தமது இளமையைத் தக்க வைத்துக் கொள்வதற்காகப் பலரும் பாடுபடுகின்றனர். இதற்கென அழகு சாதனப் பொருள்களும் பெருமளவில் விற்பனையாகின்றன.

ஒருவர் வயோதிபம் அடைந்து வருவதை அவரது தலைமயிர் காட்டிக்கொடுத்துவிடும். கறுப்பு நிறம் வெள்ளையாக மாறும்போது அங்கு வயோதிபம் தெரிகின்றது. இதனால் வெள்ளை கறுப்பாக மாற்றப்படுகின்றது. முகத்தில் தெரியும் சுருக்கங்களும் சில சாதனங்களின் உதவியுடன் மறைக்கப்படுகின்றன. இவையெல்லாம் புறத்தோற்றம் தொடர்பான விடயங்கள். ஆனால் இதில் காட்டும் அக்கறையைத் தமது மனதையும் இளமையாக வைத்திருப்பதில் பலர் காட்டுவதில்லை. உடலின் இளமையைக் கம்பீரமாகக் காட்ட வேண்டுமாயின் எமது மனதையும் நாம் இளமையாகப் பேணி வருதல் வேண்டும்.

மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ராமச்சந்திரன் உலகம் சுற்றும் வாலிபன் என்னும் படத்தில் நடிக்கும்போது அறுபது வயதைக் கடந்த நிலையில் இருந்தார். ஆனால் தமது உடலை மட்டுமல்லாது மனதையும் இளமையாக வைத்திருந்ததால் அந்தப் படத்தில் ஒரு வாலி பனைப் போன்று அவரால் ஓடியாடித்திரிய முடிந்தது. தற்போது நடிகர் ரஜனிகாந்த் கூட இதனைத்தான் பின்பற்றி வருகின்றார். ஆகவே இளமை என்பது மனதிலும் வேண்டும்.

என்னால் எதுவுமே முடியாது. எனக்கு வயதாகி விட்டது. ஒரு மூலையில் முடங்கிக் கிடப்பதே எனது வேலை என ஒருவன் சிந்திக்க ஆரம்பித்தால் அந்தக் கணமே அவன் தனது இளமையை இழந்து விடுகின்றான் என்பது அர்த்தம். இந்த உடலை இயக்க வைப்பது எமது மனம்தான். மனமிருந்தால் எங்கும் இடமுண்டு.

இளமைக்காலம் எப்போதுமே இனிமையானது. அப்போதெல்லாம் முதுமையைப் பற்றிய நினைவுகள் எம்மிடம் எழுவதேயில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல இதை நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

ஒவ்வொரு உயிரினங்களுக்கும் ஒரு வயது தொடர்பான வரையறை உண்டு. இதன் பிரகாரம் நூறு ஆண்டுகள் மனிதனுக்கென வகுக்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பகுதி முதுமையிலேயே கழிந்துவிடுகின்றது. அரச ஊழியர் ஒருவரின் ஓய்வுகாலம் அறுபது என வகுக்கப்பட்டாலும் இதற்கு முன்னரேயே அவரது முதுமைக்காலம் ஆரம்பித்து விடுகின்றது.

இந்த இளமை தொடர்பாகப் பெண்களே அதிகளவில் கவலைப்படுகின்றனர்.


ஒரு சிலர் ஆண்களைக் கவர வேண்டும் என்பதற்காகவும் தமது இளமையைப் பேணுவதில் அக்கறை செலுத்துகின்றனர்.

ஆனால் ஒன்றை மட்டும் நாம் மறந்துவிடக் கூடாது.

இயற்கை எமக்களித்த இளமையே நிரந்தர மானது. மற்றதெல்லாம் போலியா னவை என்பதுதான் அது. இழந்த இளமையை மீட்பதற்குப் பாடு படும் நாம் எமது முது மையையும் பயன் படுத் திக் கொள்ள வேண்டும். முதுமை சமூகத்தில் உயர்வானதொரு அந்தஸ்தை எமக்கு வழங்குகின்றது. என்ன தான் இளைஞர்கள் துள்ளிக் குதித்தாலும் முதியவர்களின் சொல்லுக்கு எப்போதுமே ஒரு மதிப்பு உண்டு. அனுபவமும், பட்டறிவும், முதியோர்களிடத்தில்தான் நிறைந்து காணப்படுகின்றன. பிஞ்சு மாங்காய் புளிக்கும், முற்றி பழம் இனிக்கும் என்பதற் கேற்ப முதுமைக்கு ஒரு பெருமை எப்போதும் உண்டு.

இந்த நிலையில் இளமையைத் தக்க வைத் துக் கொள்வதற்காக நாம் முயற்சிகளை மேற் கொள்வது வீணான ஒன்றாகவே முடிந்து விடும்.

# சமுதாய ஏணிகளின் நிகரில்லாப் பணி



றொ.ராஜப்பிரகாஷ்

ஆண்டு முழுவதும் பயின்ற பாடங்களை நினைவில் நிறுத்தி திறமையைக் காட்டும் தருணம் தேர்வின்போது மாணவர்களுக்குக் கிட்டுகின்றது. தம்மை ஏணியாய் நின்று ஏற்றிவிட்டுக் காத்திருக்கும் ஆசிரியர்களை நன்றியுடன் நினைவு கூருவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் இதுதான். எதிர்பார்ப்பு எதுவும் இல்லாமல் ஆண்டு முழுவதும் தமக்கு அறிவூட்டுவதற்காகவே தமது நேரத்தையும் உழைப்பையும் அர்ப்பணித்த ஆசிரியர்களை மாணவர்கள் போற்றி வணங்க வேண்டியது முக்கிய கடமையாகும். நிறைய மதிப்பெண் பெறும் மாணவன் என்பதைக் காட்டிலும் ஆசிரியர்கள் செய்த நன்றியை மறக்காது அவர்களுக்கு மதிப்பளிக்கும் மாணவன் என்று பெயர் எடுப்பதே ஒவ்வொரு மாணவனுக்கும் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. மனதின் அறியாமை எனும் இருளைப் போக்கி அறிவுக் கண்களைத் திறந்து வைக்கும் ஆசிரியப் பணியின் சிறப்பை உணர்ந்தே நம் முன்னோர் "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்றனர். தாய்க்கும் தந்தைக்கும் அடுத்தபடியாக குருவாகிய ஆசிரியர்களையே முதன்மைப்படுத்த வேண்டும் என்றும் கூறினார்கள்.

எந்தவொரு பணியும் அதைச் சார்ந்த மக்களிடமும் , சமுதாயத்திடமும் மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. ஆனால் ஆசிரியப் பணி தலைமுறைகளைத் தாண்டியது. சமுதாயத்தின் சரித்திரத்தை மாற்றும் வல்லமை கொண்டது. மாணவர்கள் மண் என்றால் அவர்களைப் பயனுள்ள பொருளாகவும், கல் என்றால் சிறப்பு மிக்க சிலையாகவும் மாற்றும் திறன் படைத்தவர்கள் ஆசிரியர்கள்.

மாணவர்களின் வருங்காலத்தையும், நாட்டின் எதிர்காலத்தையும் செம்மையாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் போற்றுதலுக்கும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்கள். இதைக் கற்பவர்கள் உணரவேண்டும்.

சான்றோர்களும் அறிஞர்களும் பிற பணிகளைப் புறக்கணித்து ஆசிரியப் பணியில் இணைந்த காலம்போய்விட்டது. வேறு வேலை கிடைக்கவில்லை என்பதற்காக ஆசிரியப் பணியில் இணையும் காலம் வந்துவிட்டது. ஆசிரியப் பணியே அறப்பணியாகும்.

"ஆசிரியப் பணியே அறப்பணி
அதற்கே உன்னை அர்ப்பணி"

# இடம் மாறிய 'ற்' உம் 'ர்' உம்

கலாநிதி நா.சிவபாலன்
இரசாயனவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

கடந்த 29.05.2014 அன்றைய உதயனில் வெளிவந்த 'மொழியின் மாற்றம் விரும்பத்தக்கதே' என்ற தலைப்பிலான கதிர்காமலிங்கம் யாழினியின் கட்டுரையினதும், 31.07.2014 உதயனில் 'தொடர்க தமிழியல் ஆய்வு' என்னும் தலைப்பில் இல.நிசாந்தன் எழுதிய கட்டுரையினதும் தொடர்ச்சியாக இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

இந்தக் கட்டுரைகளில் 'ா' என்ற எழுத்துத் தொடர்பாக சில விடயங்கள் எழுப்பப்பட்டன. எனது தாழ்மையான கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

01. ர, ரா, ரி... என்ற உயிர்மெய் எழுத்துக்களின் மெய்யெழுத்தான 'ர்' என்பதே 'ா' என எழுதப்படுகிறது என எடுத்துக் கொள்ளலாம்.

02. 'ா' என்பது உயிர்மெய் எழுத்தல்ல. அது ' ா ' என்ற விசிறியைப் போன்றதொரு (குறில் சப்தத்தை நெடில் சப்தமாக்கும்) அடையாளமாகும். எனவே 'ா' என்னும் ஒரு மெய் எழுத்து இல்லை.

03. ர, ரா, ரி,... என்னும் சப்தங்களுடன் ஒப்பிடும்போது 'ற்' என்னும் எழுத்துக்குரிய சப்தமே ர, ரா, ரி,... என்னும் உயிர்மெய் எழுத்துக்களுக்குரிய மெய் எழுத்தான 'ர்' இற்கு பொருந்தும் எனக் காணலாம்.

04. ற,றா, றி,... என்னும் உயிர்மெய் எழுத்துக்களின் சப்தங்களுடன் ஒப்பிடும்போது இதன் உயிர் எழுத்தான 'ற்' இற்கு தற்போது நாங்கள் 'ர்' என்னும் எழுத்துக்குப் பயன்படுத்தும் சப்தமே பொருந்துகிறது என்பதையும் ஒருவர் இலகுவில் உணரலாம்.

எனினும் சில விதிவிலக்குகளும் உண்டு. உதாரணமாக, 'மறவர்' என்னும் சொல்லில் வரும் 'ற' வல்லின சப்தத்தை உடையது. 'மாற்றம்' என்னும் சொல்லில் வரும் 'ற'இடையின சப்தத்தை ('ர' இன் சப்தம்) உடையது.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக கீழ்வருவனவற்றை எண்ணிப் பார்க்கலாம்.

(அ) 'ா' என்பதற்குப் பதிலாக 'ர்' ஐப் பயன்படுத்துவது.

(ஆ) சப்தத்தைப் பொறுத்தவரை 'ர்' என்பதன் உயிர்மெய் எழுத்துக்களான ர, ரா, ரி,... என்பனவற்றுக்கு தற்போதைய ற,றா,றி,... என்னும் சப்தங்களே பொருந்தும் என்பதால் இனிமேல் ர,ரா,ரி,.. என்பனவற்றை தற்போதைய ற,றா,றி,.. என்பனவற்றின் சப்தங்களால் உச்சரிப்பது.

(இ) இதேபோல் 'ற்' என்னும் மெய் எழுத்தின் உயிர்மெய் எழுத்துக்களான ற,றா,றி,... என்பனவற்றுக்கு தற்போதைய ர,ரா,ரி.. என்னும் சப்தங்களே பொருந்துகின்றன என்பதால் ற,றா,றி.. என்பனவற்றை தற்போதைய ர,ரா,ரி,.. என்னும் சப்தங்களாக உச்சரிப்பது.

அல்லது இதைத் தவிர்த்துவிட்டு 'ர்' என்பதை தற்போதைய 'ற்' என்னும் சப்தமாகவும் 'ற்' என்பதை தற்போதைய 'ர்' என்னும் சப்தமாகவும் உச்சரிக்கலாம். எனவும் ர் .ர.ரா.. எனவும் ற்,ற,றா,.. எனவும் உச்சரித்துப் பாருங்கள் இது விளங்கும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு செயல் திறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம். குடும்பத்தில் நிம்மதி ஏற்படும். பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். கு( ம்ப வருமானம் அதிகரிக்கும்.



**இடபம்**: அறிவுத்திறன் அதிகரிக்கும். இனிமையான வார்த்தைகளால் சிக்கலான காரியத்தைக்கூட எளிதாகச் செய்து முடிப்பீர்கள். எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சில திட்டங்கள ள ஆலோசிப்பீர்கள். காரிய வெற்றி உண்டாகும்.



**மிதுனம்**: திடீர் செலவு ஏற்படும். சிலருக்கு மருத்துவ செலவு ஏற்படும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். தொழில் தொடர்பான காரியங்கள் தாமதமாக நடக்கும். உத்தியோகத்தில் இ நப்பவர்கள் பயந்து வேலை செய்ய வேண்டி இருக்கும். உழைப்பு அ திகரிக்கும்.



**கடகம்**: குடும்பத்தில் உறவினருடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். வீட்டில் உள்ள பொருள்களை கவனமாகப் பார்த்துக் கொள்வது நல்லது. சொத்து விவகாரங்களில் கவனம் தேவை. பிள்ளைகள் நலனில் கவனம் செலுத்துவீர்கள்.



**சிங்கம்**: எதிர்பாராத செலவு உண்டாகும். எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். கடின உழைப்பால் வளர்ச்சி உண்டாகும். பேச்சைக் கட்டுப்படுத்திக்கொள்வது நன்மை தரும். நண்பர்களுக்கு உதவிகள் செய்வீர்கள்.



**கன்னி**: வீண்பழி ஏற்படலாம். நிதானமாக செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரம் மெத்தனமாக இருக்கும். வியாபாரம் தொடர்பான காரியங்களில் கூடுதல் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி இருக்கும்.



**துலாம்**: குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளைத் தட்டிக் கொடுத்து எதையும் செய்யச் சொல்வது நல்லது. பணவரவு திருப்தி தரும். வீண்பேச்சைக் குறைப்பது நன்மை தரும்.



**விருச்சிகம்**: பணவரவு அதிகரிக்கும். மனதில் உற்சாகம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களில் தடை நீங்கி சாதகமான பயன் தரும். எதிலும் தயக்கம் காட்டமாட்டீர்கள். கண்மூடித்தனமாக எதிலும் ஈடுபடாமல் யோசித்துச் செய்வது நல்லது.



**தனுசு**: தொழில் வியாபாரம் தொய்வு நீங்கிச் சூடுபிடிக்கும். நிதிப் பிரச்சினை நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதையும் குழப்பத்துடனேயே செய்ய நேரிடும். சக ஊழியர்களிடம் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது.



**மகரம்**: குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி நிம்மதியும் சந்தோஷமும் உண்டாகும். பிள்ளைகளின் செயற்பாடுகள் சந்தோஷத்தைத் தரும். பயணங்கள் செல்லும்போது கவனம் தேவை. சகோதரர்களிடம் கருத்து வேற்றுமை உண்டாகலாம்.



**கும்பம்**: எதிலும் தயக்கம் காட்டாமல் துணிச்சலாக காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். தொழில் வியாபாரம் சூடுபிடிக்கும்.



**மீனம்**: வீண் பிரச்சினையால் மனக்குழப்பம் ஏற்படலாம். பயணங்களில் தடங்கல் ஏற்படலாம். எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் தடைகள் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வேகம் இருக்காது.

## நாளை

**ஆவணி-01 ஞாயிற்றுக்கிழமை | 17.08.2014**

திதி: ஸப்தமி மு.ப.11.53 வரை
நட்சத்திரம்: பரணி
பி.ப.05.04 வரை

சுபநேரம்: 09.05-10.35 வரை
இராகுகாலம்: 04.35-06.05 வரை
**கார்த்திகை விரதம்**

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பலவீனத்துக்கு ஒரு போதும் இணங்கிப் போகாதே

ஞானம் என்பது எப்போதும் உள்ளது. மனிதன் அதைக் கண்டுபிடிக்கிறான். அவ்வளவுதான். உலகத்தைப் படைக்கக் காரணமான ஞானங்களின் தொகுப்பே வேதங்கள். மிகவும் மேலான தத்துவங்களை அவை போதிக்கின்றன. வேதங்களின் துணையால் இறைவன் படைக்கிறான் என்று அவை பெருமை பாராட்டிக் கொள்கின்றன.

பிறரைப் புண்படுத்துமா, புண்படுத்தாதா என்பதைக் கருத்தில் கொள்ளாமல் உண்மையைத் தைரியமாகப் பேசு. பலவீனத்துக்கு ஒரு போதும் இணங்கிப் போகாதே. உண்மையை அறிவாளிகளால் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் அவர்கள் போகட்டும், எவ்வளவு விரைவில் அவர்கள் போய்விடுகிறார்களோ, அவ்வளவு நல்லது. சிறுபிள்ளைத்தனமான கருத்துக்கள் காட்டுமிராண்டிகளுக்கும் குழந்தைகளுக்குமே உரியவை. இந்தக் கருத்துக்கள் குழந்தைகளின் அறைகளிலும் காடுகளிலும் மட்டும்தான் இருப்பதாக எண்ண வேண்டாம், மதப்பிரசார மேடைகளிலும் அவற்றுள் சில இடம் பெறத்தான் செய்கின்றன.

ஆன்மிகத் துறையில் முன்னேற்றம் அடைந்த பின்னர், கிறிஸ்தவ தேவாலயம் போன்றவற்றுள் கட்டுண்டு கிடப்பது தீமை பயக்கும். அதைவிட்டு வெளியே வந்து, சுதந்திரச் சூழ்நிலையில் இறப்பது நல்லது.

எல்லா முன்னேற்றங்களும் சார்பு நிலையில்தான் உள்ளன. அனைத்திலும் மேலானது மானிட உடல், அனைத்திலும் மேலானவன் மனிதன், இப்போதே, இங்கேயே சார்பு நிலை உலகை முற்றிலும் துறந்துவிட்டு, நாம் முக்தி பெறலாம். இதுவே நமது லட்சியம். பூரண நிலையை நாம் அடைய முடியும் என்பது மட்டுமல்ல. அந்த நிலையை வேறு சிலரும் அடைந்திருக்கிறார்கள். ஆதலால் எத்தனை சூட்சும உடல்களை மனிதன் பெற்றாலும், அதனால் பயன் இல்லை, ஏனெனில் அதுவும் சார்புநிலை உலகுடன் தொடர்புடையது தான். அதனால் நுண்ணிய உடலைப் பெற்றிருப்பவர்கள், நம்மை விட அதிகமாக எதையும் சாதிக்கப் போவதில்லை. நாம் பெறுபவற்றுள் முக்தியே மிகவும் உயர்ந்தது.

# 'பர்கர்' உணவுப் பண்டத்தில் ஹிட்லரின் சுவஸ்திகா சின்னம்



அமெரிக்காவில் மெக்டொனால்ட் உணவகத்தில் செய்த உணவுப் பண்ட வகைகளில் ஒன்றான 'பர்கர்' ஒன்றில் நாஜிக் கட்சியின் சின்னமான சுவஸ்திகா காணப்பட்டது. அதை அடுத்து ஊழியர் ஒருவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தில் உள்ள மெக்டொனால்ட் உணவு மையத்தில் சார்லி மெடிஸ் என்பவர் 'சிக்கன் பர்கர்' கேட்டுள்ளார். அதனையடுத்து அவருக்கு வந்த பர்கரில் நாஜி சர்வாதிகாரி ஹிட்லரின் கட்சிச் சின் னம் வெண்ணெயால் எழு தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இரண்டாம் உலகப் போரில் சண்டையிட்ட ஒரு போர் வீரரின் பேத்தியான சார்லி இந்த விடயத்தை எளிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதனையடுத்து அவர் மேலாளரிடம் முறைப்பாடு செய்ததால் அந்த ஊழியரைப் பணி நீக்கம் செய்துள்ளனர்.

இதுகுறித்து சார்லி கூறுகையில், இந்த சின்னத்தால் பலர் உயிரிழந்துள்ளனர். இதனை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 5 | 1 | | 9 | |
| | | 7 | | | | 6 | 2 | 8 |
| | | 6 | | | | 1 | | |
| 4 | 8 | 1 | 3 | | 2 | 5 | | |
| | 6 | 9 | 1 | | 5 | 4 | 8 | |
| | | 5 | 8 | | 9 | 2 | 6 | 1 |
| | | 4 | | | | 3 | | |
| 6 | 1 | 3 | | | | 8 | | |
| | 2 | | 4 | 1 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 1 | 3 | 5 | 7 | 2 | 8 | 6 |
| 5 | 7 | 2 | 9 | 6 | 8 | 3 | 1 | 4 |
| 6 | 8 | 3 | 4 | 2 | 1 | 5 | 9 | 7 |
| 1 | 5 | 8 | 7 | 4 | 2 | 9 | 6 | 3 |
| 4 | 6 | 9 | 5 | 8 | 3 | 1 | 7 | 2 |
| 2 | 3 | 7 | 6 | 1 | 9 | 4 | 5 | 8 |
| 8 | 2 | 6 | 1 | 9 | 5 | 7 | 3 | 5 |
| 3 | 9 | 5 | 2 | 7 | 6 | 8 | 4 | 1 |
| 7 | 1 | 4 | 8 | 3 | 5 | 6 | 2 | 9 |



பிறிமியர் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டிக்கு வவுனியா மாவட்ட 15 வயதுப்பிரிவு அணியைத் தெரிவு செய்யும் முகமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை வவுனியா யங்ஸ்ரார் மைதானத்தில் இடம் பெற்ற பயிற்சி முகாமில் பங்கு பற்றிய வீரர்கள். (5-23)

# கஜீபன் சகலதுறையிலும் அசத்தல் நயினாதீவு இஸ்லாம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 16
கஜீபன் துடுப்பாட்டம், பந்து வீச்சில் அசத்தலாக, சகலதுறைகளிலும் ஜொலிக்க நெடுந்தீவு சூப்பர் கிங்ஸ் அணியை, நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழக அணி 34 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழகமும் நயினாதீவு இஸ்லாம் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய றம்சான் வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு பற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த வாரம் நயினாதீவு மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடுந்தீவு சூப்பர் கிங்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக்கழக அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் லியா உல் ஹக் 39 ஓட்டங்களையும், கஜீபன் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் நெடுந்தீவு சூப்பர் கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் டிலான் 4 இலக்குகளையும், தயாளன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

127 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெடுந்தீவு சூப்பர் கிங்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் தயாளன் 27 ஓட்டங்களையும், றஜீவன் 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக்கழக அணி சார்பில் கஜீபன் 3 இலக்களையும், யசிர் அரபாத் 2 இலக்களையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழக அணி வீரன் கஜீபன் தெரிவானர். ஆட்ட தொடர் நாயகனாக நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக்கழக அணி வீரன் லியால் உல்ஹக் தெரிவானர். (5-23)

# ஊரெழு றோயலை வீழ்த்தியது உடுப்பிட்டி நவஜீவன் வி.கழகம்

கரணவாய், ஓக.16
விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் இடம்பெற்ற ஆட்டத்தில் முன்னணிக் கழகமாகிய ஊரெழு விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம்.

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்ற ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிவல்வை றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகமும் மோதின. பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் ஆரம்பமாகிய ஆட்டத்தில் 11 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணிக்கு சுயாதீன உதை ஒன்று கிடைத்தது. அதனை அந்த அணி வீரர் கலைஞானரதன் அழகாக உதைக்க அது எதிரணியின் கோல் கம்பங்களுக்குள் சரண் புகுந்தது.

தொடர்ந்து இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்படுவதற்கு 2 நிமிடங்கள் இருக்கும்போது ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக வீரர் எதிரணியின் கோல் கம்பங்களுக்கு அண்மையில் தவறு இழைத்ததால் எதிரணிக்குத் தண்டனை உதை வழங்கப்பட்டது.

அதனைச் சரியாகப் பயன்படுத்தி நவஜீவன்ஸ் அணி வீரர் உசானந்த தமது அணிக்காக இரண்டாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் ஆட்டத்தின் போக்கில் அனல் பறந்தது. இரு அணி வீரர்களும் முன்னேறித் தாக்குவதிலும் ஊடுருவித் தாக்குவதிலும் முழுக் கவனத்தையும் செலுத்தி மோதினர்.

இதனால் இடைவேளைக்குப் பின்னர் கோல் போடுவதற்கு இரு அணியினரும் கடுமையாகப் போராடினர். இந்தச் சூழ்நிலையில் ஆட்டம் நிறைவடைவதற்கு ஒரு சில செக்கன்கள் இருக்கையில் றோயல் அணியின் சோபன் ஒரு கோலைப் போட ஆட்டம் 2:1 என்ற அடிப்படையில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் மத்தியில் 3:1 என்ற கோல்கள் அடிப்படையில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக ஆட்டம் ஆரம்பமாகி 27 ஆவது நிமிடத்தில் ஜெகன் ஒரு கோலைப் போட்டார். ஆட்டம் 1:0 என்ற நிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 5 ஆவது நிமிடத்தில் ஹென்றிஸ் அணி வீரர் ஞானம் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து 10 ஆவது நிமிடத்தில் ஞான முருகன் அணியைச் சேர்ந்த ஜெகனும், 16 ஆவது நிமிடத்தில் அதே அணியைச் சேர்ந்த தீபனும் கோல் போட 3:1 என்ற அடிப்படையில் ஞான முருகன் அணி வெற்றி பெற்றது. (5-108)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 16
உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 9.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிவகுமாரன் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுகழக அணியை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை விளைய்ாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23)

* * *

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி வீண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.


இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொள்ளவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23)

## தடகளப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 16
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட தடகளப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும், கனகபுரம் மைதானத்தில் காலை 8 மணி முதல் மாலை வரையில் இடம்பெறவுள்ளது. (5-23)

## ஆட்டம் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஓக. 16
தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக் கிழமையும் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (5-23)

## அரையிறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 16
தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுதியுடன் நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழகமும் நயினாதீவு இஸ்லாம் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நயினாதீவு மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் புங்குடுதீவு சென்.சேவியர்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து புங்குடு தீவு நசேரேத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (5-23)



## உடுத்துறை பாரதி வெற்றி



கரணவாய், ஓக. 16
கணேசானந்தா வீரர் சோபன் ஓன் கோல் அடிக்க 5:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகம்.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்ற ஆட்டத்தில் மருதங்கேணி கணே சானந்தா விளையாட்டுக் கழகமும் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்டம்ஆரம்பமாகி10 ஆவது நிமிடத்தில் பாரதி விளையாட்டுக்கழக வீரர் ஜெயமோகன் தமது அணிக்கான முதல் கோலைப் போட்டார்.

அடுத்த மூன்றாவது நிமிடத்தில் விஜேந்திரனும் 22 ஆவது நிமிடத்தில் ஜெயமோகனும் மீண்டும் ஒவ்வொரு கோலைப் போட 3:0 என்ற அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 32 ஆவது நிமிடத்தில் கணேசானந்தா விளையாட்டுக் கழக வீரர் சோபனன் தமது அணியின் கோல் கம்பங்களுக்கிடையே பந்தைச் செலுத்தியதன் மூலம் அது ஓன் கோலாக மாறியது.

தொடர்ந்து 56 ஆவது நிமிடத்தில் உடுத்துறை பாரதி கழக வீரர் ஜெயதிலீபனும் கோல் போட 5:0 என்ற கோல் கணக்கில் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னே றியது.

அடுத்து இடம்பெறவிருந்த ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் வருகை தராத காரணத்தால் பொற்பதி சென் பீற்றர்ஸ் விளையாட்டுக் கழத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது. (5-108)

# அடுத்த சுற்றுக்கு முன்னேறிய இவானோவிச், ரத்வன்ஸ்கா



சின்சினாட்டி ஓபன் ரென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3வது சுற்றில் விளையாட செர்பியா வீராங்கனை அனா இவானோவிச் தகுதி பெற்றார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்றில் அமெரிக்காவின் கிறிஸ்டினா மெக்கேலுடன் மோதிய இவானோவிச் 6- 4, 6- 0 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று 3வது சுற்றுக்கு முன்னேறினார். தரவரிசையில் முதலிடத்தில் உள்ள வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தனது 2வது சுற்றில் 7- 6, 7- 6 என்ற நேர் செற்களில் 1.54 மணி நேரம் போராடி ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரை வீழ்த்தினார். போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா 6- 2, 6- 2 என்ற நேர் செற்களில் ஜப்பான் வீராங்கனை குருமி நாராவை வென்று 3வது சுற்றுக்கு தகுதி பெற்றார். செக்குடியரசு வீராங்கனையான பெத்ரா குவித்தோவா 2- 6, 6- 7 என்ற நேர் செற்களில் உக்ரைனின் எலினா ஸ்விடோலினாவிடம் அதிர்ச்சி தோல்வியடைந்து ஏமாற்றத்துடன் வெளியேறினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றில் சுவிஸ் வீரர் ரோஜர் பெடரர் 7- 6 , 5-7, 6-2 என்ற செற் கணக்கில் கனடாவின் வாசெக் பாஸ்பிசிலை போராடி வென்றார். ஏரிபி மாஸ்டர்ஸ் 1000 அந்தஸ்து போட்டிகளில் இது அவரது 300வது வெற்றியாகும். ஆண்கள் இரட்டையர் பிரிவு 2வது சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக்குடியரசின் ரேடக் ஸ்டெபானக் ஜோடி 1- 6, 6- 4, 8- 10 என்ற செட் கணக்கில் கனடாவின் வாசெக் பாஸ்பிசில் அமெரிக்காவின் ஜாக் சாக் ஜோடியிடம் தோற்று வெளியேறியது. (ரி)


## ஒரு நாள் தொடரில் அஜ்மல் சந்தேகம்

இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மல் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது. பந்துவீச்சுத் தொடர்பான பரிசோதனைக்காக இங்கிலாந்து செல்லவுள்ளமையாலேயே அவர் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது.

சயீத் அஜ்மலின் பந்து வீச்சுத் தொடர்பாக கடந்த 2009ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய தொடரில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. அப்போது அதிலிருந்து தப்பிப் பிழைத்த அவரது பந்து வீச்சுத் தொடர்பாக இரண்டாவது முறையாக அண்மையில் சந்தேகம் எழுப்பப்பட்டிருந்தது. இதனையடுத்து இம்மாத இறுதிக்குள் சர்வதேச கிரிக்கெட் சபையின் சோதனை மையத்தில் பந்துவீச்சுத் தொடர்பான பரிசோதனைக்காக சயீட் அஜ்மல் முன்னிலையாக வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இப் பரிசோதனை இங்கிலாந்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தற்போது நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டி முடிந்தவுடன் சயீட் அஜ்மல் இங்கிலாந்துக்கு புறப்பட வேண்டியிருக்கும்.

இதன் காரணமாக இவ்விரு அணிகளும் பங்கேற்கும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இவர் பங்கேற்பது கேள்விக்குறியாகியுள்ளது. இவ்விரு அணிகளுக்குமிடையிலான சர்வதேச ஒரு நாள் ஆட்டங்கள் எதிர்வரும் 23ஆம், 27ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)



நேற்றைய ஆட்டத்தில் ரங்கண ஹேரத் மிஸ்பா உல் ஹக்கின் இலக்கினை வீழ்த்திய போது டெஸ்ட் அரங்கில் 250 இலக்குகள் என்ற மைல் கல்லைத்தாண்டினார். மிஸ்பாவின் இலக்கினைக் கைப்பற்றிய சந்தோசத்தில் கேரத்தும் அவருடன் இணைந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் அணித்தலைவர் மத்தியூசும் (ரி)

# தடுமாறி மீண்டது பாகிஸ்தான் முடங்குமா இலங்கையின் வெற்றி

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் முதலாவது இனிங்ஸில் 140 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள் என்று தடுமாறிய பாகிஸ்தான் அணி அசார் சபீக், சர்பிரஷ் அகமட்டின் இணைப்பாட்டம் கைகொடுக்க மீண்டெழுந்தது. இதனால் மஹேல வின் இறுதியாட்ட வெற்றி முடங்கும் நிலைக்குச் சென்றுள்ளது. நேற்றைய ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி 6 இலக்குகளை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.



அரைச்சதம் கடந்த பாகிஸ்தான் சர்பிரஷ் அகமட்

முதல் நாள் ஆட்டநேர முடிவின் போது 261 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்து தடுமாறிக் கொண்டிருந்த இலங்கை அணி நேற்றைய ஆட்டத்தைத் தொடர்ந்த போது மேலதிகமாக 23 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் தம்மிக்க பிரசாத் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இறுதி இலக்குக்காக ரங்கண ஹேரத், வெலிகெதர ஆகியோர் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த இணைப்பாட்டம் தங்களுக்குள் 36 ஓட்டங்களைப் பகிர்ந்து கொள்ள இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. முதல் இன்னிங்ஸில் இலங்கை அணிசார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான உப்புல் தரங்க 92 ஓட்டங்களையும், கௌசல் சில்வசா 41 ஓட்டங்களையும், அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் 39 ஓட்டங்களையும், சானக வெலிகெதர ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பாகிஸ்தான் அணி சார்பாக பந்து வீசிய வேகப்பந்து வீச்சாளர் யுனைட்கான் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். வகாப் ரியாஷ் 3 இலக்குகளையும், அப்துர் ரெஹ்மான், சயீட் அஜ்மல் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையூம் கைப்பற்றினர். முதலாவது இனிங் ஸில் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு அவ்வணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். முதலாவது இலக்குக்காக குர்ராம் மன்சூர் 23 ஓட்டங்களைப் பெற்று வெளியேறினார். இரண்டாவது இலக்குக்காக அகமெட் செஷாட், அசார் அலி ஜோடி பொறுமையுடன் 63 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டது. 110 ஓட்டங்களை அணி பெற்றிருந்த போது இரண்டாவது இலக்கு வீழ்த்தப்பட தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்களும் பொறுப்பின்றி ஆட பாகிஸ்தான் ஒரு கட்டத்தில் 140 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள் என்று மிக மோசமான நிலையில் தத்தளித்தது. பின்னர் அசார் சபீக், சர்பிரஷ் அகமட்டின் இணைப்பாட்டத்தின் உதவியுடன் மீண்டெழுந்த பாகிஸ்தான் 6ஆவ்து இலக்குக்காக 93 ஓட்டங்களை பெற்றது. ஆட்டநேரமுடிவின் போது பாகிஸ்தான் அணி 244 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்திருந்தது. பாகிஸ்தான் அணியின் அகமட் செஷாட் 58 ஓட்டங்களையும், அசார் அலி 32ஓட்டங்களையும், அசாத் சபீக் 42 ஓட்டங்களையும், சர்பிரஷ் அகமட் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணி சார்பாக பந்து வீச்சில் தனது சுழல் ஜாலத்தை தொடர்ந்து வரும் ரங்கண ஹேரத் 5 இலக்குகளையும், தில்ருவான் பெரேரா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். 4 இலக்குகள் கையிருப்புடன்; 76 ஆட்டங்கள் பின் தங்கியுள்ள பாகிஸ்தான் இன்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடவுள்ளது. (ரி)


## அறிவிக்கப்பட்ட பங்களாதேஷ் அணி

அடுத்த மாதம் தென்கொரியாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுக்களில் பங்கேற்கவுள்ள பங்களாதேஷ் அணியை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அணிக்கு அணித்தலைவர் யார் என்பதை கிரிக்கெட் சபை இன்னமும் தெரியப்படுத்தவில்லை. அணி விவரம் வருமாறு : -



தமிம் இக்பால், அனாமல் ஹக், இம்ருல் ஹைஸ், மொகமட் மிதுன் அலி, சம்சர் ரஹ்மான், ஹொம் சௌதுரி, சபீர் ரஹ்மான், மொகமதுல்லா, நசீர் ஹொசைன், சொகக் காசி, அரபட் சன்னி, மஷ்ரபீ மோட்ரசா, முக்தர் அலி, அல்அமீன் ஹொசைன், ரஸ்கின் அகமட்

# இந்தியாவை வீழ்த்த உதவிய நடுவர்



இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் மொயின் அலி, இந்தியாவுக்கு எதிராக தன்னால் சிறப்பாக பந்து வீச முடிந்ததற்குக் காரணம் போட்டி நடுவர் குமார் தர்மசேனா என்று தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் இந்திய அணி மூன்றாவது மற்றும் நான்காவது டெஸ்ட் ஆட்டங்களில் படுதோல்வியடைந்தது.

இவ் ஆட்டங்களில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர்கள் அன்டர்சன், ஸ்டுவர்ட் பிரோட் ஆகியோர்தான் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பாராதவிதமாக சுழல் பந்து வீச்சாளர் மொயின் அலி இந்திய விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சுழற்பந்து வீச்சாளரான மொயின் அலி நான்கு டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவின் 19 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். சுழல் பந்து தேசத்தில் இருந்து சென்ற இந் திய அணியை புதிதாக வந்த சுழல் பந்து வீச்சாளர், பெரிதும் சாதிக்காத ஒரு பந்து வீச்சாளர் அச்சுறுத்தலுக்குள்ளாக்கி வருவது இந்திய ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றமாக உள்ளது.

தற்போது தனது திடீர் எழுச்சிக்கான காரணத்தை மொயின் அலியே நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

முதல் டெஸ்ட் போட்டியில் நான் கூடுதல் ஓட்டங்களை வாரி வழங்கி விட்டேன். வீரர்களுக்கான அறையில் சோகமாக அமர்ந்து எனது பந்து வீச்சை ஆய்வு செய்து கொண்டிருந்த போது இயன்பெல் என்னை தனியாக அழைத்து சென்று சில அறிவுரைகளை வழங்கினார்.

முதல் நாள் ஆடுகளத்தில் பந்தை வேகமாகவும், நேராகவும் வீச வேண்டும். அப்போதுதான் மற்றொரு ஸ்வானாக உருவாக முடியும் என்று பெல் எனக்கு அறிவுரை கூறினார். இதை மனதில் வைத்துக் கொண்டு வலைப்பயிற்சிக்கு சென்றேன். வலைப்பயிற்சிக்கு சென்ற போது அங்கு, நடுவர் குமார் தர்மசேனாவும் இருந்தார். அவரிடம், பந்தை 'பிளாட்டாக' வீசாமல், வேகமாக எறிவது கடினமாக உள்ளதே, அதை எப்படி செய்வது என்று கேட்டேன். அப்போதுதான் அவர் ஒரு யோசனை கூறினார். 'பந்தை வீசும் போது உடனடியாக இடது கையால் உங்களது, பாக்கெட்டை இறுக்கி பிடித்துக்கொள்ளுங்கள்' என்று தெரிவித்தார்.

இதன்பிறகு குமார் தர்மசேனா கூறிய்புடி பந்தை வீசினேன். அவர் கூறியபடியே வேகமாகவும், பிளாட் இல்லாமல் தூக்கியும் எறிய முடிந்தது. இதன் பின்னனர் இறுதியாக நடந்த இரு ஆட்டங்களிலும் இதையே செய்தேன். இதற்கு கைமேல் பலன் கிடைத்தது. இவ்வாறு மொயின் அலி தெரிவித்தார். (ரி)

## டெஸ்டிலிருந்து ஓய்வு பெறவேண்டும் டோனிக்கு மார்ட்டின் குரோவ் அறிவுரை



டெஸ்ட் ஆட்டங்களில் டோனியின் விளையாட்டு மோசமாக இருப்பதாகவும், அணித்தலைமை மிக மோசமாக இருக்கின்றது என்றும் நியூசிலாந்தின் முன்னாள் வீரர் மார்ட்டின் குரோவ் தெரிவித்துள்ளார்.

பிரபல கிரிக்கெட் இணையதளத்திற்கு அவர் எழுதியுள்ள கட்டுரையில் கூறியிருப்பதாவது:-

டெஸ்ட் கிரிக்கெட்டை டோனி துறந்து விட்டால் அவரது விசித்திரமான, கிரிக்கெட்டிற்குப் புறம்பான தலைமையில் இருந்து இந்திய அணி விடுபடும். 4வது டெஸ்ட் போட்டியில் இந்தியா போராடாமல் சரணடைந்த போது கூட டெஸ்ட் போட்டி முடிந்த பிறகு அளித்த பேட்டியில் தோல்வி பற்றி பெரிதாகக் கவலைப்பட்டது போல் தெரியவில்லை. அவரது அணித் தேர்வு தர்க்கத்திற்குப் புறம்பானதாக உள்ளது. களத்தில் அவர் வீரர்களைக் கையாள்வது, களத் தடுப்பு அமைப்பு போன்றவற்றில் சூழ்நிலைக்குத் தக்கவாறாக அவர் எதுவும் செய்வதில்லை. லோர்ட்ஸ் டெஸ்டில் இஷாந்த் சர்மாவை பவுன்சர் வீசச் சொன்னதாக அவர் கூறிய ஒன்று மட்டும் விதிவிலக்கு. டெஸ்ட் கிரிக்கெட் குறித்து அவரது ஆர்வமின்மையை அவரே பல முறை சூசகமாகத் தெரிவித்துள்ளார். பணமோ அல்லது ஆட்டத்தின் வேகமோ அல்லது இரண்டுமோ, வண்ணச் சீருடை, வெள்ளைப் பந்து, குறைந்த ஓவர் கொண்ட கிரிக்கெட் வடிவம்தான் டோனிக்குப் பொருத்தமாக இருக்கிறது. அதில் அவர் திறம்பட செயல்படுகிறார். 2011 உலகக் கோப்பை போட்டிகளில் அவரது அணித்தலைமைப் பொறுப்பு தன்னம்பிக்கையுடனும் சீராகவும் இருந்தது. எனவே டெஸ்ட் போட்டிகளிலிருந்து அவர் விலகி 2015 உலகக் கோப்பைப் போட்டிகளில் சம்பியன் பட்டத்தை தக்க வைக்க இப்போது முதலே திட்டமிடலாம்.

நீண்ட காலமாக டெஸ்ட் தொடரில் அவர் விளையாடுகிறார். ஒரு டெஸ்ட் வீரராக அவர் எத்தனை நாட்கள் இப்படிப்பட்ட மோசமான திறமையுடன் தொடர்ந்து விளையாட முடியும் என்று எழுதியுள்ளார். (ரி)

## இந்தியாவில் சுதந்திரதினம் இங்கிலாந்தில் சத்தியசோதனை



வெள்ளையரிடமிருந்து சுதந்திரம் பெற்றதை 68ஆவது சுதந்திர தினமாக இந்தியா நேற்றுக் கொண்டாடியிருந்த போதும், இங்கிலாந்தில் வைத்து வெள்ளையரிடம் சத்தியசோதனையை அனுபவித்தது இந்தியக் கிரிக்கெட் அணி. இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் நேற்று ஆரம்பமான ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் உட்பட அணி வீரர்களின் படுமோசமான துடுப்பாட்டத்தால் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் திணறியது. அணித்தலைவர் டோனி, இசாந்த் சர்மாவின் உதவியுடன் இந்தியா கிரிக்கெட் அணியின் எழுச்சி விடுதலைக்குப் போராடினார். நாணயச்சுழற்சியிலேயே ஆதிக்கத்தைச் செலுத்திய இங்கிலாந்து அணி இந்தியாவை துடுப்பெடுத்தாடப் பணித்தது. இங்கிலாந்தின் கட்டளைக்குப் பணிந்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்தியஅணி வீரர்கள் அவர்களின் பந்து வீச்சுக்கும் பணிந்தே விளையாடினர். நீண்டகாலம் அணியில் சேர்க்கப்படாமல் இருந்து இத்தொடரில் அணிக்குத் திரும்பியுள்ள கௌதம் கம்பீர் முதல் பந்திலேயே ஆட்டமிழந்து கோல்டன் டக் ஆனார். தொடரில் தொடர்ந்து ஏமாற்றி வரும் புஜாரா, விராட் ஹோக்லி ஆகியோர் தமது பணியைத் தொடர்ந்தனர். இந்தத் தொடரில் தன்னை அடையாளம் காட்டிக் கொண்ட அஜிங்க ரகானேயும் அவர்களுடன் சேர்ந்து ஓட்டமெதனையும் பெறாமல் பவிலியன் திரும்பினார். களத்தில் தனித்து நின்ற முரளி விஜய்க்கு இணைப்புக் கொடுக்க களமிறங்கினார் அணித்தலைவர் டோனி. ஆனால் விஜய் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து டோனியை ஏமாற்றினார். தொடர்ந்து வந்த வீரர்களும் டோனியைத் தனியே தவிக்க விட்டுச் சென்றனர். ஒரு கட்டத்தில் 44 ஓட்டங்களுக்கு 6 இலக்குகள் என்ற நிலையில் இருந்த இந்திய அணி, 90 ஓட்டங்களுக்கு 9 இலக்குகள் என்ற நிலையை ஒரு வழியாக அடைந்தது. இறுதி இலக்குக்காக களமிறங்கிய இசாந்த் சர்மா மைதானத்தில் படுத்துறங்க மறுமுனையில் டோனி ஓட்டங்களைக் குவித்தார். செய்தி அச்சுக்குப் போகும் வரை இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. டோனி 82 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இசாந்த் சர்மா ஆட்டமிழக்காமல் 7 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இங்கிலாந்து சார்பில் கிறிஸ் ஜோர்தான், கிறிஸ் வோக்ஸ் தலா 3 இலக்குகளையும், அன்டர்சன், ப்ரோட் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இவ் ஆட்டத்தில் இந்திய அணி சார்பாக 3 வீரர்கள் மாத்திரமே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# ஐ.எஸ்.எல். தொடருக்கு பீபா ஆதரவு

இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து தொடருக்கு சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் (ஃபிஃபா) தலைவர் செப் பிளேட்டர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் இருந்து இந்தியாவின் பல்வேறு நகரங்களில் ஐ.எஸ்.எல் தொடர் நடைபெறவுள்ளது. மூன்று மாதங்கள் நடைபெறும் இத்தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்கின்றன. சர்வதேச கால்பந்து அரங்கில் விளையாடிய வீரர்களும் இதில் பங்கேற்பதால் ஐ.எஸ்.எல் தொடர் இந்திய கால்பந்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் என்ற கருத்து நிலவுகிறது.

இதுகுறித்து பிளேட்டர் கூறியதாவது: -கால்பந்து ஆட்டம் உலகம் முழுவதும் பரவி இருக்கிறது. சமீபத்தில் சீனாவில் தொழில் ரீதியிலான கால்பந்து தொடர் தொடங்கப்பட்டு, அது வெற்றியும் அடைந்ததைப் பார்த்திருக்கிறோம். அதேபோல் ஒக்டோபரில் இந்தியாவிலும் ஒரு தொடர் தொடங்கப்படவுள்ளது. இதை இந்திய கால்பந்துக்கான மற்றுமொரு சந்தை எனலாம். சந்தை என்றால் வர்த்தக ரீதியிலான சந்தை அல்ல. கால்பந்தை மேம்படுத்துவதற்கான சந்தை என பொருள்படும். இந்தியாவில் 130 கோடி பேர் உள்ளனர். அவர்கள் அனைவரும் தற்போது இந்தியாவில் கால்பந்து விளையாடப்பட வேண்டும் என விரும்புவதாகத் தெரிகிறது. இந்தியர்கள் கிரிக்கெட்டை விரும்புகின்றனர், அதுவும் நல்ல ஆட்டம்தான், விளையாடட்டும். ஆனால், கால்பந்து ஆடாதது நல்லதல்ல என பிளேட்டர் தெரிவித்தார்.

முன்னர் பிளேட்டர் இந்தியா வந்திருந்தபோது இந்திய கால்பந்து என்னும் மிருகம் தூங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் கால்பந்தை மேம்படுத்த தொழில் ரீதியிலான ஒரு தொடரும், தொலை நோக்குப் பார்வையுடன் கூடிய சீர்திருத்தங்களும் தேவை' எனக் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# தரவரிசையில் இந்தியாவுக்கு 150 ஆவது இடம்

சர்வதேச கால்பந்து தரவரிசையில் இந்தியா 150ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. உலக சம்பியனான ஜேர்மனி முதலிடத்தில் நீடிக்கிறது.

சர்வதேச கால்பந்து அரங்கில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை, ஃபிஃபா வெளியிட்டது. இதில் இந்தியா 150-வது இடத்தை மால்டாவுடன் பகிர்ந்து கொண்டது. ஆசிய அணிகளுக்கான தரவரிசையில் 26-வது இடத்தில் உள்ளது.

இந்த சீசனில் மார்ச் மாதம் நடைபெற்ற வங்கதேசத்துக்கு எதிரான ஆட்டத்தை 22 என இந்தியா டிரா செய்தது. அதன்பின், சர்வதேச ஆட்டங்களில் இந்தியாபங்கேற்கவில்லை. பிரேசிலில் சமீபத்தில் நடைபெற்ற உலகக் கோப்பையில் முதலிடம் பிடித்த ஜேர்மனி தரவரிசையிலும் முதலிடத்தில் நீடிக்கிறது. ஸ்பெயின் அணி ஒரு இடம் முன்னேறி பிரேசிலுடன் 7-வது இடத்தைப் பகிர்ந்து கொண்டது. உலகக் கோப்பை காலிறுதிக்கு முன்னேறிய கோஸ்டாரிகா 15-வது இடத்தில் உள்ளது. (ரி)

# துர்கிஸ்தானில் கைதான 39 பேரில் 9 பேர் மட்டக்களப்புக்கு வருகை

## உடைமைகளை இழந்த நிலையில்



துர்கிஸ்தானில் இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ள இளைஞர்கள்

மட்டக்களப்பு ஓக. 16

தொழில் வாய்ப்புக்காக துர்கிஸ்தான் சென்று அங்கு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 39 பேரில் 10 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

வியாழக்கிழமை நாடு திரும்பிய இந்தப் பத்து இளைஞர்களுள் ஒருவர் யாழ்ப்பாணத்தையும் ஏனைய 9 பேர் மட்டக்களப்பையும் சேர்ந்தவர்கள்.

இவர்கள் வேலை வாய்ப்புக்காக 2013 மற்றும் 2014 காலப்பகுதியில் துர்கிஸ்தான் சென்றிருந்தனர்.

'நாம் தொழில்வாய்ப்புத் தேடி துர்கிஸ்தான் சென்றபோது அங்கிருந்த அதிகாரிகள் எங்களை சீராகவே வழிநடத்தினர். கடந்த ஒரு மாத காலமாகத்தான் நாம் இராணுவத்தின் பிடியில் சிக்கி பல துன்பங்களை அனுபவித்தோம். எம்மை அடித்துத் துன்புறுத்திய துர்கிஸ்தான் இராணுவத்தினர் எங்கள் உடைமைகளையும் பறித்துக்கொண்டனர். தற்போது கையில் எதுவும் இல்லாமல் தாய்நாட்டுக்கு வந்துள்ளோம். இலங்கையில் இருந்து தொழில் தேடி துர்கிஸ்தான் செல்வதற்கு வட்டிக்கு கடன் பெற்று முகவர்களுக்கு கொடுத்திருந்தோம். பணம் சம்பாதிக்கலாம் என்ற கனவோடு சென்ற எமக்கு இப்போது ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. 365 இற்கும் அதிகமான இலங்கையர்கள் துர்கிஸ்தானில் உள்ளனர். அவர்களை இலங்கை அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து மீட்க வேண்டும்' எனத் தெரிவித்துள்ளனர் நாடு திரும்பிய அந்த இளைஞர்கள்.

இந்த நிலையில் போரதீவுப் பிரிவிலிருந்து துர்கிஸ்தானுக்கு தொழில் வாய்ப்புத் தேடிச் சென்றவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகவும், இது தொடர்பில் வெளிநாட்டுவேலைவாய்ப்பு பணியகத்துக்கு தெரிவித்துள்ளோம் எனவும் போரதீவுபற்று பிரதேச செயலகத்தின் வேலை வாய்ப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

(ஒ-10)

# பனையறுப்பான் சம்பவம்; கூட்டமைப்பு கண்டனம்

கொக்கட்டிச்சோலை மோதலின்போது மக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமையானது அராஜகமான செயல் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மோதல் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

மதுபாவனையை ஒழிக்க வேண்டும் என்பதில் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது. அதற்காக மக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்துவதை எக்காரணம் கொண்டும் ஏற்க முடியாது. இந்த அராஜகச் செயலை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பெண்கள் காயமடைந்துள்ளனர். பொது மக்கள் தாக்க முற்பட்டவேளை பொலிஸார் வானத்தை நோக்கி வேட்டுக்களை தீர்த்திருந்தால் மக்கள் கலைந்து சென்றிருப்பார்கள். அவ்வாறு செய்யாமல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதனால் கிழக்கு மாகாண மக்கள் பெரும் அச்சத்திற்காளாகியுள்ளனர் -என்றார். (ஒ-10)


நல்லூர்க் கந்தன் திருவிழாவை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
அனைத்து வகையான பூங்கன்றுகளும் அதிரடி விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.
யாழ் அக்கூரியம் அன்ட் பிளான்ற் பரடைஸ்
917, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.
021 561 1242
(50880) (12.3.6)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)


Platinum 3D 10.30am, 2.30pm, 6.30pm


Silver 10.15am, 2.15pm, 6.15pm


Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

வாடகைக்குண்டு
இல.531, பலாலி வீதி, திருநெல்வேலியில் 2 அறைகள், வரவேற்பறை, இணைந்த குளியலறையுடன் வீடும், 1000 (Sqft) சதுர அடி கொண்ட களஞ்சியமும், (Store) வாடகைக்குண்டு.Lava Hospital பின்புறம் தனிவழிப் பாதை, வாகனத் தரிப்பிடவசதிகள் கொண்டது. (50800) (12.3.6)
தொடர்பு:077 776 9260/077 232 8684

வீடு வாடகைக்கு
கிளிநொச்சி, இரத்தினபுரத்தில் 3அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(47251)(5.6.3) தொடர்பு:077 105 6121

வீடு வாடகைக்கு
உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் மூன்று அறைகளுடன் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: (80871) (12.3.6)
077 722 8335/077 362 8209

REGAL RENT A CAR
நாளாந்த, மாதாந்த அடிப்படையில் கார் வாடகைக்குண்டு.
(50870) (12.3.6) தொடர்பு: 077 583 4770

கட்டடம் வாடகைக்கு
பருத்தித்துறை வீதி, கல்வியங்காட்டு சந்தியில் 2 மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு.
வங்கிகள், நிறுவனங்கள் போன்றவற்றிற்கு உகந்தது.
போதிய வாகனத் தரிப்பிட வசதிகளுடன்.
தொடர்பு:077 486 0517 (50883) (4.6.3)

கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலை ஆசிரியை
திருமதி இராஜேஸ்வரி அருட்செல்வம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமது பாடசாலைச் சமூகம் துயரத்தில் ஆழ்ந்துள்ளது. அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
பாடசாலைச் சமூகம்,
(50876) (12.3.6) யா/நவாலி சென்.பீற்றேர்ஸ் றோ.க.த.க.பாடசாலை

குத்தகைக்கு
பலாலி வீதி, கந்தர்மடம் எனும் இடத்தில் வாகனத் தரிப்பிடம், மற்றும் ஏனைய வசதிகளுடனும் நல்ல நிலையில் இயங்கி வரும் 990 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட Food City ஒன்று பொருள்களுடன் குத்தகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 021 222 0220 /077 346 4756
(50875)(5.6.3)

கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் புனித அன்னாள் ஆலய அருட்பணிச் சபை முன்னாள் செயலாளரும், இந்நாள் அருட்பணி சபை உறுப்பினருமாகிய
ஆசிரியர்
திருமதி இராஜேஸ்வரி அருட்செல்வம்
அவர்களின் திடீர் மறைவினால் வேதனையுறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
கூழாவடி கிழக்கு, ஆனைக்கோட்டை.
வேதனையில் பங்குகொள்ளும் ராஜன் மாலினி குடும்பத்தினர்.
(50879)(7.6.3)

மரண அறிவித்தல்
திருமதி பகவதிப்பிள்ளை கந்தையா

மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பகவதிப்பிள்ளை கந்தையா 14.08.2014 வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (சிவா), ஸ்ரீகாந்தன் (கொலண்ட்), ஸ்ரீரஞ்சிதா (கனடா), திருச்செல்வம் (சுவிஸ்), அருட்செல்வம் (சுவிஸ்), அருமைலிங்கம் (தபால் அதிபர், மீசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், லோகமணி, தேவசீலன் (கனடா), வானதி (சுவிஸ்), ஸ்ரீரதி (சுவிஸ்), சோமறஞ்சினி ஆகியோரின் பாசமிகு மாமியும், இந்து (கனடா), சுதாகரன், கௌசியா, கார்த்திகா (கனடா), செந்தூரன் (கனடா), பைரவி (சுவிஸ்), றாகவி (சுவிஸ்), தாரவி (சுவிஸ்), கபிலன் (சுவிஸ்), சங்கவி (சுவிஸ்), சாரவி (சுவிஸ்), டிலான், லக்சிதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அக்சிகாவின் (கனடா) பாசமிகு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.08.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
மீசாலை கிழக்கு, மீசாலை.
(51060) (12.3.6)
தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

LED
1W LED Bulb Rs.12/=
Surface Mounted LED Panel light 12W Rs.1750/= 18W Rs.1950/=
Led Panel Light 3w Rs.490/= | 6w Rs.990/= 12w Rs.1450/= | 18w Rs.1750/=
Metal 3W Rs220/= 5W Rs300/= 7W Rs400/= 9W Rs600/=
Led Tube 1metre Rs490/=
LED Tube 4 ft 18w Rs.890/=
100W LED Rs.6750/=
LED Rotating Buld Rs.490/=
Led Strip 5m Rs1650
25W Led Celing Light Rs 5950/=
PLASTICS LED BULB 3W - Rs.150/= 5W - Rs.250/= 7W - Rs.280/= 9W - Rs.360/= 12W - Rs.420/= 15W - Rs550/= 18W - Rs750/=
16x96-pixels
LED NAME BOARD 6"-36" RS8500
KINGS ELECTRONICS
WWW.KINGSELECTRONICS.LK
11A, STANLEY ROAD, JAFFNA.
TEL NO : 021 2223857

# தொற்றா நோய்கள் குறித்தவிழிப்புணர்வுக் கண்காட்சி

## நல்லூர் இந்து விடுதியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.16

யாழ்ப்பாணம் சுகாதார வைத்தியர் பணிமனையின் ஏற்பாட்டில் நோயற்ற வாழ்வு எனும் தொனிப் பொருளிலான சுகாதாரக் கண்காட்சி நேற்று நல்லூர் இந்து விடுதியில் ஆரம்பமானது.



தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் ஆலய சூழலில் இந்தக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கபபட்டுள்ளது என்று யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி பி.ஜெசிதரன் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சியில் 3 பிரிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஆராக்கியமான வாழ்வு, போசணை, சுவரொட்டிகள் என 3 பிரிவுகளாக கண்காட்சி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றா நோய்களின் பாதிப்பு அதிகரித்துவரும் நிலையில் குறிப்பாக இரத்தஅழுத்தம், புற்றுநோய், உயர் குருதியழுத்தம் போன்றவற்றை எவ்வாறு வருமுன் தடுப்பது என்பது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தக் காட்சி ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வைத்திய அதிகாரி பி.ஜெசிதரன்.

"இந்தக்கண்காட்சியில் கூறப்படும் அறிவுரைகளை மக்கள் தங்களது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முற்பட்டால் அவர்களில் மாற்றம் கொண்டு வரலாம். இதே வேளை ஆன்மீக வாழ்வில் கடைப்பிடிக்கும் முறைகளாலும் தொற்றா நோயைக் கட்டுப்படுத்த முடியும். கடந்த காலங்களில் இவற்றை பின்பற்றி வந்ததன் ஊடாக வயது முதிர்ந்த காலத்திலும் மக்கள் ஆரோக்கியமாக இருந்தனர்.

தற்போது நவீனத்துக்கு ஏற்ப மக்கள் வாழ்வியலில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் ஆரோக்கியத்தில் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர். இதனை விட இந்தக்கண்காட்சியில் இயற்கைக்கு ஊறு விளைவிக்காத பொருள்களால் செய்யப்பட்ட உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. திருவிழாக் காலத் தில் மக்கள் இதனைப்பார்வையிட்டு ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்"- என்று தெரிவித்தார்.

(ற-14)

# பருத்தித்துறை பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா இன்று

கரணவாய்,ஒக.16

பருத்தித்துறை பிரதேச செயலகம் நடத்தும் பண்பாட்டுப் பெருவிழாவும் செம்பருத்தி பிரதேச மலர் வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பர்வத வர்த்தினி மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

பிரதேச செயலரும், பிரதேச கலாசார பேரவைத் தலைவருமான இ.த. ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர். சி.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி உஷா. சுபலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரட்ணமும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசநாயகமும், நூல் நயப்புரையை யாழ். பல்கலைக் கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் நிகழ்த்துவர்.

இதில் தொண்டமானாறு ஜெயபரத சேஷ்திர மாணவர்கள் வழங்கும் பாம்பு நடனம் இடம் பெறவுள்ளது. நட்டு வாங்கம் திருமதி ஜெயஸ்ரீ முருகதாஸ், பிற்பாட்டு திருமதி பாக்கிய லட்சுமி இராஜன், நாதஸ்வர இசை செல்வி ஜானகி கிருஷ்ண பிள்ளையும், மிருதங்கம் அ.அகிலனும் வயலின் திருமதி கலைவாணி புஸ் பராஜனும் வழங்குவர்.

சிறப்பு நிகழ்வாக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி தலைமையில் தமிழர் தம் பாரம்பரிய கலைகள் இன்று வரை பேணப்படுகின்றன. பேணப்படவில்லை என்ற தலைப்பிலான பட்டிமன்றமும் இடம்பெற வுள்ளது.

தொடர்ந்து பின்வரும் கலைஞர்களுக்கு கலைப்பிரிதி விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

ஆவணப்படுத்தலுக்காக பா.மீனாட்சி சுந்தரமும், இலக்கியத்துக்காக பண்டிதர் வீ.பரந்தாமனும், ஊடகத்துறைக்காக ஆ.நா.சு. திருச்செல்வமும், நாடகத்துக்காக சி.மரியதாஸ்ும் நாதஸ் வரத்துககாக மீ.கோவிந் தராஜனும் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

(த-108)

# பெரியமணல் கடற்றொழில் சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக 16

காரைநகர் பெரியமணல் சிவகௌரி கடற்றொழில் சிக்கன கடன் உதவிக் கூட்டுறவுச் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கப் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிக்கன கடன் தொகை ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ள தோடு அது தொடர்பான கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது. இதில் சிக்கன கடன்உதவிச் சங்க ஆணையாளர் , உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். அங்கத்தவர்களைக் கலந்துகொள்ளுமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

(த-4)

# இசை அர்ச்சனை கலைஞர்களுக்கு இன்று ஒத்திகை

யாழ்ப்பாணம், ஒக. 16


நல்லூர்க் கந்தனின் கார்த்திகை திருவிழாவை முன்னிட்டு ஆலய உள்வீதியில் வழமை போன்று இசை அர்ச்சனை நிகழ்வு நாளை நடைபெறும்.

வழமைபோல் மாலை சுவாமி வீதி வலம் வந்ததும் ஆலய உள் வீதியில் எட்டு திசைகளிலும் இசை அர்ச்சனை நிகழ்வு இடம் பெறும். இவ் இசை அர்ச்சனையில் பங்குபற்றும் இசை வாத்தியக் கலைஞர்கள் அனைவரும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடை பெறவுள்ள ஒத்திகை நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ)

## கண்ணீர் மழையில் ஐந்தாண்டு

அன்னை மடியில்
23 ✱ 05 ✱ 1957



ஆண்டவன் அடியில்
11 ✱ 08 ✱ 2009

### சடானணமூர்த்தி வரதராஜா

திதி:- ஷஷ்டி

ஆண்டுகள் எத்தனை ஓடி மறைந்தாலும்
உங்களுடன் நாம் வாழ்ந்த ஞாபகங்கள் என்றுமே
எப்போதுமே எம் நெஞ்சைவிட்டு அகலாதப்பா
எங்கள் ஆசை அப்பாவின் ஞாபகங்கள்
உங்கள் பிள்ளைகளாகிய எம்முடன்
என்றுமே நிலைத்து இருக்குமப்பா
எம்மைவிட்டு இறையடி சேர்ந்த
எங்கள் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப்
பிரார்த்திக்கிறோம் அப்பா!

என்றுமே உங்கள் நினைவலைகளில் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
மற்றும் குடும்பத்தினர்

அல்வாய் கிழக்கு,
அத்தாய் (சி/16068)

## கண்ணீர் அஞ்சலி

மாவட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி சி.நஸீரா அவர்களின் அன்புத் தந்தை

### சுல்தான் முகைதீன் அப்துல் சலாம்

அவர்கள் 15.08.2014 ஆம் திகதி இறைபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (50886) (10.6)

யாழ். மாவட்டச் செயலக நலன்புரி கழகம்.

## நல்லூர் பிரதேசசபையின் விசேட அறிவித்தல் கட்டம் அமைத்தல்

நல்லூர் பிரதேசசபையின் எல்லைக்குள் சிமெந்து மற்றும் கொங்கிறீட் கொண்டு அமைக்கப்படும் கட்டடங்கள் யாவும் சபையின் அனுமதியை பெற்று கட்டப்படவேண்டும் என்பதுடன் அவ்வாறு அனுமதி பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் சபையால் இடித்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருவதோடு, சபைக்கு தங்களின் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ப. வசந்தகுமார்
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை. (சி/16067) (10.6)

## மஹோற்சவ கால கடை ஏலம்

தெல்லிப்பழை துர்க்கை அம்மனின் வருடாந்த மஹோற்சத்தை முன்னிட்டு நாளை

(17.08.2014) ஞாயிற்றுக்கிழமை

காலை 8.00 மணிக்கு

ஆலய முன்புறத்திலும், தெற்குப் பக்கத்திலும் ஐஸ்கிறீம் கடை, கச்சான் கடை, மணிக்கடை போன்ற கடைகள் ஏலம் கூறப்படும்.

குறிப்பு: கடை ஏலம் கேட்பவர்கள் உடனே பணத்தைச் செலுத்தி கடை உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும். தவறும் பட்சத்தில் நிராகரிக்கப்படும்.

(50881) (12.3.6) தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

## மரண அறிவித்தல்



### திருமதி இராசமணி பொன்னுத்துரை

யாழ். உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி பொன்னுத்துரை (14-08-2014) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு- ஆச்சிக்குட்டி தம்பதியினரின் பாசமிகு மகளும், தம்பிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் மருமகளும், தம்பிப்பிள்ளை பொன்னுத்துரையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சிவராசா ஆகியோரின் சகோதரியும், உசாதேவி, சாரதா தேவி, நிர்மலா தேவி, லலிதாதேவி (ரோகினி), சுகந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் தயானந்தன், சிவயோகராஜா, கணேசதாசன், வாசன், ரூபன் ஆகியோரின் மாமியாரும், உமாசுதன், கஜதீபன், தாட்சபிரியா, கம்சனீ, கௌசிகன், சுஜாபிரணவி, தனுஷா, சாரண்யா, பிரவீன், அனுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக A.F. றேமன் மலர்ச்சாலை யில் வைக்கப்பட்டு நாளை (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00மணி அளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொறளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : குடும்பத்தினர்
077 2865334
(கணேசதாசன்-மருமகன்)

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (50887)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தவறிவிட்டது

EL 2642 இலக்கமுடைய வாகன பதிவு புத்தகம் ராமநாதன் வீதியில் தவறியுள்ளது.
(சன்மானம் வழங்கப்படும்).
தொடர்பு:077 691 3017 (50885) (10.6)

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 56 - XXXX இலக்க HIACE(நீள மொடல்) வாகனம் விற்பனைக்குண்டு.

(சி/16062) (12.3.6) தொடர்பு: 077 915 9546

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும்
பிரபல ரெஸ்ரோரன்டிற்கு
01.உணவு பரிமாறுனர்
02. சுத்திகரிப்பாளர்
உடன் தேவை.
சம்பளம் நேரில்
பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:075 724 6060 (47854) (4.6.3)

## எழுதுநர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் வர்த்தக நிலையத்துக்கு எழுத்துக் கணக்காளர் (ஆண்/பெண்) தேவை.

க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஆவணங்களுடன் 18.08. 2014 திங்கட்கிழமை
காலை 9.00 மணிக்கு வரவும்.
தொடர்பு: (C/16066) (10.6)
077 755 8984, 077 748 4567

## தொடர்ச்சிகள்

### மிரட்டலுக்கு

ருந்தது.

அதுகுறித்து இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

"ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை தமது கடமைகளை ஐ.நா. சாசன விதிமுறைகளுக்கமைய - ஐ.நா. உறுப்புரிமை நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கமைய செய்துவருகின்றார். தனிப்பட்ட ரீதியில் அவர் ஒருபோதும் செயற்படவில்லை. அவ்வாறு அவர் செயற்படவும் முடியாது. அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல், பக்கச் சார்பில்லாமல் நடுநிலையாக - நேர்மையாகச் செயற்படக் கூடியவரையே மனித உரிமைகள் ஆணையாளராக ஐ.நா. நியமிக்கின்றது.

அந்தவகையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை இலங்கை அரசின் அச்சுறுத்தல்கள் - மிரட்டல்களுக்கு அடிபணியாமல், பக்கச் சார்பில்லாமல் நடுநிலையாக - நேர்மையாக - நீதியாக செயற்பட்டு வருகின்றார். இதனால் ஆத்திரம்கொண்ட இலங்கை அரசு, அவர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவரைக் கண்டபடி விமர்சித்து வருகின்றது."- என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில்;

"இலங்கையில் அரசு போர் நடைபெற்ற காலத்தின்போது அப்பட்டமாக மீறிய போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நவநீதம்பிள்ளை கேள்விகளைத் தொடுத்து ஐ.நா. உறுப்புரிமை நாடுகளின் தீர்மானத்துக்கு அமைய சர்வதேச விசாரணையை கொண்டுவந்ததால் இந்த அரசு கடும் கோபத்துடன் அவரைக் கடுமையாச் சாடி வருகின்றது.

நவநீதம்பிள்ளையுடன் மட்டுமல்ல, அவருக்கு முதல் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக இருந்த லூயிஸ் ஆர்பருடனும் இலங்கை அரசு வெளிப்படையாக முரண்பட்டது. இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான விசாரணை வேண்டும் என்று அப்போது இலங்கை வந்த லூயிஸ் ஆர்பர் கூறியதையடுத்து அவரைக் கண்டபடி இலங்கை அரசு விமர்சிக்கத் தொடங்கியது.

ஆனால், லூயிஸ் ஆர்பர் நீதியாக - நேர்மையாக - பக்கச் சார்பில்லாமல் தமது கடமைகளைச் செய்தார். அவரின் வழியில் நவநீதம்பிள்ளையும் தமது கடமைகளை ஆரம்பத்திலிருந்து இன்றுவரை செய்துவருகின்றார்.

லூயிஸ் ஆர்பரும், நவநீதம்பிள்ளையும் தமது நாடுகளில் உயர்நீதிமன்ற நீதியரசர்களாக முன்னர் கடமையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இவர்கள் நீதிக்கு எதிர்மறையானவர்கள் அல்லர்.

அதேவேளை, புதிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராகப் பதவியேற்கவுள்ள ஷெயிட் அல் ஹூசைனும் இவர்களின் வழியில் நேர்மையாக தனது கடமைகளைச் செய்வார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

எனவே, இலங்கை அரசு மற்றவர்களைச் குற்றஞ்சாட்டாது தான் விட்ட தவறுகளைத் திருத்துவதுடன், தான் இழைத்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதே நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நல்லது.

இதைவிடுத்து நவநீதம்பிள்ளையே இலங்கை விவகாரத்தை சர்வதேசமயப்படுத்தி விட்டார் என்று இலங்கை அரசு புலம்புவதில் நாட்டுக்கு எந்தவிதப் பயனும் ஏற்படப் போவதில்லை"- என்றும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார். (ஈ-சி)

### போரால்

வழங்கவுள்ளார்.

2015 ஜனவரி 14ஆம் திகதி தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் தினத்தன்று மடுத் திருத்தலத்தில் பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ள விசேட ஆராதனையில் பாப்பரசர் பிரான்சிஸ் கலந்து கொள்கிறார். இதன்போதே இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பாப்பரசரின் இலங்கைப் பயணம் தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று மடு அன்னையின் திருநாள் திருப்பலி முடிவில் வெளியிடப்பட்டது. இதன்போது தமிழ் மொழி மூல அறிவிப்பை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையும், சிங்கள மொழியிலான அறிவிப்பை கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையும் வெளியிட்டனர்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரும் பாப்பரசர் பிரான்சிஸ் காலி முகத்திடலில் விசேட திருப்பலியை ஒப்புக் கொடுக்கவுள்ளார். இதன்போது இலங்கையில் கத்தோலிக்க மறைபரப்புப் பணியை மேற்கொண்ட அருளாளர் ஜோசப் வாஸ் அடிகளாருக்கு பாப்பரசர் புனிதர் பட்டம் வழங்கவுள்ளார். அத்துடன் அன்றைய தினம் கொழும்பில் அரசியல் சந்திப்புக்களையும் அவர் மேற்கொள்ளவுள்ளார்.

அடுத்தநாள் 14ஆம் திகதி தமிழர் திருநாளாம் தைப் பொங்கலன்று பி.ப 3 மணிக்கு மடுத் திருத்தலத்துக்கு பாப்பரசர் வருகை தரவுள்ளார். 1995 ஆம் ஆண்டு பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் கொழும்புக்கு வருகை தந்து திரும்பியிருந்தார். 19 ஆண்டுகளின் பின்னர் இல்ங்கைக்கு வரும் பாப்பரசர் ஒருவர் முதன்முதலாக வடக்குக்கு வருகை தரவுள்ளார். அத்துடன் மடுத் திருப்பதிக்கு வருகை தரும் முதலாவது பாப்பரசர் இவராவார்.

அன்றைய தினம் இலங்கையின் தேசிய யாத்திரைத் தலமான மடுவுக்கு வருகை தரும் பாப்பரசர், போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் துன்ப துயரங்களைக் கேட்டறிவதுடன், போரில் அங்கவீனமானவர்களைத் தொட்டு ஆசீர்வாதம் வழங்கவுள்ளார்.

இதேவேளை மடுத் திருத்தலத்தில் நேற்று இடம்பெற்ற திருச்சொரூப ஆசீர்வாதத்தின் போது, நல்லிணக்க ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்த தாயார் ஒருவர் தனது காணாமற்போன மகனின் படத்தைத் தாங்கிப் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

### தமிழக

அதேவேளை, கொழும்பில் நடத்தப்படவுள்ள பேச்சுத் தொடர்பான அனுமதிக் கடிதம் இலங்கைக் கடற்றொழில் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், எதிர்வரும் 29ஆம் தகதி புதுடில்லியில் உயர்மட்ட அதிகாரிகளின் சந்திப்பு நடக்கவுள்ளதால் இந்தியப் பிரநிதிகள் இலங்கைக்கு வருவதை, அமைச்சு தவிர்த்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-14)

### யாழ்.மாநகர

தது. அதற்கமைய வடக்கு மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சருமான க.வி. விக்னேஸ்வரனால் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபையால், யாழ்.நகரில் கடைகள் பகிரங்க கேள்வி அறிவித்தல் மூலம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டன. அவற்றை சில கடைக்காரர்கள் உபகுத்தகைக்கு கொடுத்துள்ளனர். அவ்வாறனவற்றை மாநகர சபை கண்டறிந்து, சில கடைகளை மாத்திரம் மீள் கேள்வி கோரல் மேற்கொண்டது என்றும், ஏனைய கடைகள் உபகுத்தகைக்காரர்களுக்கே கேள்வி கோரல் இன்றி வழங்கப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான முறைப்பாடுகளே விசாரணைக் குழுவால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. இன்னும் மூன்று வாரங்களுள் அது குறித்த அறிக்கை முதலமைச்சரிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### சிறப்பாக

ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட இளைப்பாறிய பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் உட்பட இத்தாலியன் ஆயர் மன்றத்தின் பிரதிநிதிகளாக வந்திருந்த குருக்கள் மென்சின் நோர் லேனாட் டீ முருகோ, மொன்டினியோ அன்ரனியோ அமராத்தி ஆகியோரும், பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் உட்பட அரசியல் தலைவர்கள் பலர் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தனர். (ற-14,56)

### இராணுவம்

திட்டத்துக்குரிய காணியில் இராணுவத்தினர் முகாம் அமைத்தனர்.

அதன்பின்னர் அந்தக் காணியில் நிரந்தரமாகத் தங்கியிருந்த இராணுவத்தினர் கடந்த சில மாதங்களுக்கு முன்னரே குறித்த காணியை விட்டு வெளியேறியுள்ளனர்.

தற்போது அந்தக் காணியின் உரிமையாளர்கள் மேற்படி காணியில் குடியமர்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் அவர்களுக்கு இந்திய வீட்டுத் திட்டமும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது குறித்த காணிக்குரியவர்கள், தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் ஆரம்பத்தில் குறித்த காணியை வீட்டுத் திட்ட கடனுக்கு பெற்றிருந்தனர் என்றும் - அதற்குரிய முழுமையான கடனை அவர்கள் கட்டவில்லை என்றும் - அதனால் மீதிப் பணத்தைப் பெற்றுத் தருமாறு தேசிய வீடமைப்பு அதிகார சபை பிரதேச செயலகத்திடம் கோரியுள்ளது. இராணுவத்தினர் இருந்தபோது காணி தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காத தேசிய வீடமைப்பு அதிகார சபை தற்போது மக்கள் மீளக்குடியமரவுள்ள நிலையில் மீதிப் பணத்தை கோரி வருகின்றனர் என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த மக்கள் இடம்பெயர்வால் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் அவர்களால் குறித்த தொகைப் பணத்தைச் செலுத்த முடியாத நிலையில் வீட்டுத் திட்டத்தை இழக்க வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### பாடசாலை

செயல்முறை ஆராய்ந்து அறியும் திறமையை மையமாகக் கொண்ட செயற்றிட்டம் போன்றவற்றை ஆசிரியர்கள் முன்னிலைப்படுத்தி ஊக்குவிப்பதை மையமாகக்கொண்டு தேசியப் பரீட்சைகள் மீளமைக்கப்படவேண்டும்.

2. தமிழ்மொழி மூலமான கற்றலுக்கான நிறுவனம் அமைக்கப்படவேண்டும். இந்தநிறுவனம் நாட்டில் தமிழ் மொழியில் கற்பிக்கும் சகல பாடசாலைகளிலும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வளங்கள், பாடவிதானம் தயாரித்தல், அதற்கான நூல்கள், கற்பித்தல் முறை, தமிழ் மொழி மூலம் கற்றல் கற்பித்தல் சம்பந்தமான நூல்களை வழங்குவதற்குப் பொறுப்பாக இருத்தல்வேண்டும்.

3.மாணவர்களுக்கு வழங்கப்படும் உடல் ரீதியான தண்டனைகள் சகல பாடசாலைகளிலும் தாமதமின்றி நிறுத்தப்படவேண்டும். இதற்குப் பதிலாக ஆசிரியர்கள், அதிபர், மாணவர் தலைவர், உள்ளடக்கிய மாணவர்களுக்கான வகுப்பறை நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

4. வலய மட்டத்தில் நிர்வகிக்கப் படும் பாடசாலைகளின் நிர்வாகம் மாற்றி அமைக்கப் படவேண்டும். வலய மட்டத்தில் கல்விச் சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும். இந்தச் சபை நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களையும், தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களையும் உள்ளடக்கியதாக இருத்தல்வேண்டும். வலய மட்டத்தில் இயங்கும் பாடசாலைகளை நிர்வகித்தல் அவை சம்பந்தமான தீர்மானம் எடுத்தல் இந்தச் சபையைச் சார்ந்ததாக இருக்கும்.

5.பொது நிர்வாகம், நியமனங்கள், இடமாற்றம், பதவியுயர்வு மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

6.ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தமது துறைகளில் முதுமாணிப் பட்டங்களைப் பெறவோ அல்லது துறைசார் கல்வியைவிருத்தி செய்யவோ அவர்களுக்கு 1-4 வருடங்கள் உயர் கல்வி பெறும் வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கக்கூடியவாறு 10 வருட காலத்திற்கான உத்தியோகத்தர்களின் விருத்தி சார்ந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

7.பாடசாலை நேரத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதனைத் தடுத்து நிறுத்துதல்வேண்டும்.

8.வலய மட்டத்தில் தற்பொழுது இயங்கும் முறைசாராக் கல்வி முறை மாற்றப்பட்டு அதற்குப் பதிலாக தொடர் கல்விப் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும். இந்தப் பாடசாலைகளில் 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் கற்றுப் பயன்பெறும் வகையில் பாடவிதானம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

9.தற்போதைய நிதி முகாமைத்துவமுறை உயர் நிலையில் வினைத்திறனுடன் செயற்படும் வகையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

10.கல்வி சம்பந்தமான சகல தரவுகளையும் சேகரித்து வழங்கக் கூடியதாக கல்வி முகாமைத்துவ தகவல் முறையொன்று அமைக் கப்பட வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்கள் மத்திய கல்வி அமைச்சின் அனுசரணையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-4)

### ஒக்ரோபரில்

நன்றிகளை தெரிவிக்கின்றனர். அப்போது எமது திட்டங்கள் வரப்பிரசாதமாக அமைகின்றன என்பது புலப்படுகின்றது. இந்திய அரசு வடக்கு மாகாண மக்களின் வாழ்வை உயர்த்துவதற்கு இலங்கை அரசுடன் இணைந்து பல அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

அதனடிப்படையில் இந்திய அரசு வடக்கு மாகாண மக்களின்தேவைகளை உணர்ந்து பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை வழங்குகிறது. இங்குள்ள அனைவரும் எமக்கு பல்வேறு வழிகளில் உதவி வருகின்றனர். அதற்காக இந்திய அரசு சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார். (த-106)

### கச்சதீவில்

தைக் கடந்து சென்றபோது பாதுகாப் புக்கு நின்றிருந்த பொலிஸார் பேரணியைத் தடுத்து அவர்களைக் கைது செய்தனர்.

மேலும் பாரத் மக்கள் கட்சியினர் படகு மூலம் சென்று விடாமல் தடுக்க துறைமுகத்தில் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். (த-14)

### சிறுவனை

குடியிருப்புப் பொலிஸில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. குறித்த சிறுவன் நேற்று முன்தினம் காலை புதுக்குடியிருப்புக்குச் சென்றுவிட்டு அங்கிருந்து மதியம் நெல்லியடிக்குச் செல்வதற்காக பஸ்ஸில் ஏறியுள்ளான். ஆனால் நெல்லியடிக்கு அவன் செல்லவில்லை. அவனுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. அது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-4)

### இந்திய

கடந்த மாதம் 22 ஆம் திகதி மன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து நான்கு இந்திய இழுவைப் படகுகளில் வந்த 20 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த மீனவர்களுக்கு எதிராக மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர். இந்த வழக்கு விசாரணையின் போது இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை இந்த 20 இந்திய மீனவர்களும் மன்னார் மடு சுற்றுலா நீதிமன்றத்தில் மன்னார் நீதிபதி செல்வி அனந்தி கனகரெட்ணத்திடம் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய இவர்கள் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். இதனையடுத்து இந்திய சுதந்திர தினமான நேற்று இவர்கள் விடுவிக்கப் பட்டனர்.

இவர்களுடைய மீன்பிடி உபகரணங்களை விடுவிப்பதற்கான எவ்வித அறிவித்தலும் கிடைக்கப்பெறவில்லை எனவும், மீனவர்களை மட்டும் விடுதலை செய்யப்படுவதாகவும், இவர்களை யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைத்து நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நீதிவான் பணித்தார்.

மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகள், மீன்பிடி உபகரணங்கள் தொடர்பான விசாரணை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் யாழ். இந்திய துணை தூதரக அதிகாரிகளினால் உடன் அழைத்து செல்லப்பட்டுப் போசாலை வாடி வீட்டில் தங்க வைப் பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இன்று சனிக்கிழமை அல்லது நாளை இவர்கள் தலைமன்னார் கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு சர்வதேசக் கடல் எல்லையில் வைத்து இந்திய எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (த-56)

### இயங்க


சிறிது தூரம் அவர் அதனை உருட்டிக்கொண்டு நடந்துள்ளார். அவ்வேளை மல்லாகம் சந்திக்கு அண்மையில் மில் ஒழுங்கையில் குப்பைக்கு மூட்டிய தீ எரிந்துகொண்டு இருந்தது. அதனை அவதானித்த குறிப்பிட்ட மருத்துவர் குப்பைக்கு அருகில் தனது மோட்டார் சைக்கிளைக் கொண்டு சென்று யாரும் எதிர்பாராத வகையில் அதற்குத் தீ மூட்டினார்.

இதனை அவதானித்த பொது மக்கள் மோட்டார் சைக்கிளைப் பாதுகாக்க முயன்ற போதிலும் முடியாத நிலையில் அது முற்றாகத் தீயில் கருகியது.

இது தொடர்பாகப் பொதுமக்கள் குறிப்பிட்ட மருத்துவரிடம் வினவியபோதுஇந்த மோட்டார் சைக்கிளை ஓடவேண்டாம் என வீட்டிலும் ஏசுகின்றனர். மோட்டார் சைக்கிளும் இயங்க மறுக்கிறது. ஆகையால் அதற்குத் தீ வைத்தேன்-என்றார். (த-86)

# வடக்கு மக்களின் வாழ்வாதாரத்துக்கு இந்தியாவின் பல்வேறு அபிவிருத்திகள்

## யாழ்.தூதரக பதில் துணைத் தூதர் தெரிவிப்பு



இந்தியாவின் 68 ஆவது சுதந்திரதின விழா யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இலங்கைக்கான இந்திய பதில் துணைத் தூதர் எஸ்.தட்சணாமூர்த்தி இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். (வ-21)

யாழ்ப்பாணம்.ஒகஸ்ட்.16

வட மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதற்காக இந்திய அரசு இலங்கை அரசுடன் இணைந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் பதில் துணைத்தூதர் எஸ். தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

இந்தியாவின் 68 ஆவது சுதந்திரதின நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திறந்துவைக்கப்பட்டதிலிருந்து இந்த வருடம் நான்காவது தடவையாக இந்திய சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது.

இந்த நான்கு வருடங்களில் பெரியளவிலான பல அபிவிருத்திகளும் நிகழ்வுகளும் நடத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இந்திய வீட்டுத்திட்டம், விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதும் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்கக் கூடியதுமான அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை, விரைவில் வேலைகள் நிறைவுறும் நிலையிலுள்ள வவுனியா வைத்தியசாலைக்கான 200 கட்டில்கள் கொண்ட கட்டடத் தொகுதி. புதிய திட்டங்களான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாய மற்றும் பொறியியற் பீடங்களை கிளிநொச்சியில் நிறுவுவதற்கான உதவித் திட்டம், துரையப்பா விளையாட்டரங்கின் புனரமைப்பு, யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையம் ஒன்றைக் கட்டுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதேவேளை- இந்தியாவின் புதிய அரசும் வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

யாழ்.தேவி ரயில், ஒக்ரோபர் மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கான தனது சேவையை ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மடு மற்றும் தலைமன்னாருக்கிடையிலான ரயில் சேவை டிசெம்பர் மாதத்தில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2012 ஒக்ரோபரில் வடமாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டம் பெரியளவில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

நுண்கலைகளை வளர்க்கவும் கலாசார உறவுகளைப் பலப்படுத்தவும் இந்தியத் துணைத் தூதரகம் கலை நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்குதல் மூலமும், இசை, நடனத் துறைகளில் வளர்ந்து வரும் இளம் கலைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமும் தனது பங்களிப்பை வழங்கிவருகிறது என்றார்.

நிகழ்வில் பிரதித்துணைத் தூதர் இந்திய தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து தூதரக அலுவலர்களாலும், இந்திய சமூகத்தவர்களாலும் இந்திய தேசிய கீதம் பாடப்பட்டது.

இதன்போது வட மாகாண ரயில் மீள் கட்டுமானப் பணிகளுக்காக யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தங்கியுள்ள இந்திய ரயில் கட்டுமான நிறுவன அதிகாரிகள் மற்றும் இந்தியன் வங்கி அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.(வ-14-21)

# பறிபோன காணிகள், உரிமைகளை மீளப்பெற்றிடப் போராடுவோம்

## கிழக்கு தமிழ்பேசும் ம்க்களை அழைக்கிறது கூட்டமைப்பு

திருகோணமலை. ஒக. 16

எமது போராட்டங்களை முன்னெடுப்பதற்கு சமூக கட்டுமானத்தின் சகல தரப்பினரையும் உள்ளடக்கும் வகையில் தமிழ் தேசிய சபை ஒன்றை உருவாக்குவதற்கான அவசியம் எழுந்துள்ளது. தனி ஒரு கட்சியோ, அமைப்போ தனித்து நின்று போராடி சமூக விடுதலையை வென்றதாக வரலாறு இல்லை. ஆகவே தமிழ் பேசும் சமூகம் முழுவதும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசிய சபை என்ற பொது அமைப் பின் கீழ் ஐக்கியப்பட்டு பறி போயுள்ள எமது உரிமையை வென்றெடுக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், வெருகல், மல்லிகைத்தீவு பகுதிகளுக்கான பயணமொன்றை மேற்கொண்டனர்.



கிழக்குக்கு பயணம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பிரமுகர்கள் அங்கு பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடுகின்றனர்

அங்கு மக்களை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; தமிழ் மக்கள் பல இடங்களில் முறையீடு செய்தும் இதுவரையில் அரசு தமிழ் மக்களுக்கு உரித்துடைய காணிகளைக் கையளிக்கவில்லை. மாவிலாறு தண்ணீரைக் காரணம் காட்டி மனிதாபிமான மீட்பு நடவடிக்கை என்று கூறி தமிழ்மக்கள் மீது தாக்குதல் தொடுத்த மஹிந்த அரசு, இன்று மாவிலாற்றுத் தண்ணீரை வழங்க மறுக்கின்றது. தமிழ் மக்களுக்கு சொந்தமான பல ஏக்கர் காணியில் கடந்த ஆறு வருடங்களாக பாது காப்பு தரப்பினர் அனுசரணையுடன் சிங்கள மக்களால் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரசின் இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு நாம் சர்வதேசத்தை நம்புவதுடன் எமது எதிர்ப்பையும் ஜனநாயக ரீதியில் காட்ட வேண்டும். அதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வலுவுள்ளதாக இருக்க வேண்டும்.

இந்தச் சந்திப்பின்போது மாரி மழைக்காலத்தில் வெருகல் ஆறு பெருக்கெடுத்துப் பாய்வதால் கிராமங்களுக்குள் வெள்ளம் ஊடுருவி விவசாயம் அழிவடைவதாகவும், வீடுகள் வெள்ளத்துள் மூழ்கி தாம் பெரும் சிரமப்படுவதாகவும் இதனால் தமது இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுவதுடன் போக்குவரத்துகள் தடைப்படுவதாகவும் இதற்கெல்லாம் தீர்வைப் பெற்றுத்தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கூட்டமைப்பின் பிரமுகர் நாகராஜாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் மற்றும் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் உட்பட மாகாணசபை உறுப்பினர் நாகேஸ்வரன், வெருகல் பிரதேசசபை உறுப்பினர் ஞானதாஸ், மூதூர் பிரதேச சபை உறுப்பினர்கள் நாகேஸ்வரன், மோகன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-10-402)

# இலத்திரனியல் அ.அட்டை முறைமை மக்களின் அடிப்படை உரிமை மீறல்

## சாடுகிறது முன்னிலை சோஷலிஸக் கட்சி

கொழும்பு, ஒக. 16

அரசால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் அடையாள அட்டை நடைமுறையானது மக்களின் அடிப்படை உரிமை மீறல் என்று முன்னிலை சோஷலிஸக் கட்சி தெரிவித்துள்ளது.

முன்னிலை சோஷலிஸக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு ராஜகிரியவில் நேற்றுமுன்தினம் வியாழனன்று நடைபெற்றது. அங்கு உரையாற்றிய கட்சியின் பரப்புரைச் செயலாளர் புபுது ஜாகொட மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

அரசு புதிதாக அறிமுகப்படுத்தும் இலத்திரனியல் அடையாள அட்டை முறைக்காக நாட்டுப் பிரஜைகளின் கைவிரல் அடையாளங்கள் பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு நாட்டை திறந்த வெளிச் சிறைச்சாலையாக மாற்ற முடிவெடுத்துள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இந்தநிலை உருவாக நாட்டு மக்கள் இடமளிக்கக் கூடாது. எனவே இந்தக் கைவிரல் அடையாளங்கள் பெறும் நடவடிக்கைக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

இலத்திரனியல் அடையாள அட்டை முறைக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் 15 வயதுக்கு மேற்பட்டோரின் சுயவிவரங்களுடன், அவர்களின் உடல் அடையாளங்களுடன் கூடிய தேசிய பிரஜைகள் தரவு சேகரிக்கும் நடவடிக்கையை அமைச்சு எடுக்கவுள்ளது. இது நாட்டை இராணுவமயப்படுத்தும் முயற்சியின் மற்றுமொரு நடவடிக்கைதான். இந்த முறையைக் கொண்டு வருபவர்கள் முழுச் சமூகமும் குற்றவாளிகள் என்ற கருத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி குற்றவாளிகள் என்று கருதப்படுபவர்களிடம் மட்டும் நீதிமன்ற உத்தரவின் பெயரில் கைவிரல் அடையாளம் பெற முடியும். ஆனால் தற்போது நாட்டில் நடைமுறையில் இருக்கும் சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படுகின்றன-என்றார்.(வ-10)

### குடும்பஸ்தர் மீது தாக்குதல்

தென்மராட்சி, ஒக.16

பெண் பிள்ளைகளுக்கு அநாமதேய தொலைபேசி அழைப்புகள் விடுத்த நபரை, தந்தையொருவர் தொலைபேசியில் கண்டித்ததையடுத்து அவரது வீட்டுக்கு வந்து அவரைத் தாக்கிக் காயப்படுத்தியது ஒரு குழு. இந்தச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு தென்மராட்சி சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த கைதடி நுணாவிலைச் சேர்ந்த 48 வயதுடைய நபர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(வ-9)

### ரயில் கடவை பணிகளுக்காக ஞாயிறன்று வீதி மூடப்படும்

பளை - காங்கேசன்துறை ரயில்வே கடவை வேலைகளுக்காக நாவற்குழி - கேரதீவு வீதியில் முதலாம் கிலோமீற்றரில் உள்ள ரயில்வே கடவை நாளை ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை மூடப்பட்டிருக்கும் என மத்திய பொறியியல் உசாவுத்துறை பணியகம் அறிவித்துள்ளது.

கனரக வாகனங்களும், பஸ்களும் சாவகச்சேரி சந்தியிலிருந்து தனங்களப்பு வீதி ஊடாகப் பயணித்து தனங்களப்பு சந்தியிலிருந்து மன்னாருக்குச் செல்ல முடியும் என்றும்-அதுபோல மன்னாரிலிருந்து தனங் களப்பு சந்தியை அடைந்து தனங்களப்பு வீதி ஊடாக சாவகச்சேரி செல்ல முடியும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது. (ஒ)

# யாழில் இருதய சத்திர சிகிச்சை நிலையம் அமைக்க கொழும்புக்கு சைக்கிள் ஊர்வலம்

யாழ்ப்பாணத்தில் இருதய சத்திரசிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்கும் நோக்குடன் யாழ். பல்கலைக்கழக மருத்து பீட மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலின் முன்றிலில் இருந்து கொழும்புக்கு சைக்கிள் ஊர்வலம் ஒன்றை ஆரம்பித்தனர். நல்லூர் கந்தன் ஆலயத்தில் கற்பூரம் ஏற்றி தேங்காய் அடித்து வழிபட்ட பின்னர் நேற்றுக் காலை மங்கள வாத்திய இசையுடன் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டது. மாணவர்கள் ஊர்வலமாக கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அழைத்து வரப்பட்டனர்.

கைலாசபிள்ளையார் கோயிலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது. இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர் களை வழியனுப்பி வைத்தனர்.

துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் கொடியசைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சைக்கிளில் ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தார். சுமார் 60 பேர் வரை இந்த ஊர்வலத்தில் பங்கேற்றனர். (த-7)



## சவாரிக்கு அழைத்த டக்ளஸ்
### நிராகரித்தார் விக்னேஸ்வரன்

கைலாச பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான சைக்கிள் பவனியில், வடமாகாண முதலமைச்சரை சைக்கிள் சவாரி செய்ய வருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைத்த போதும் முதலமைச்சர் அதனைப் புன்னகையுடன் நிராகரித்து விட்டார். வடக்கு மாகாணத்தில் இருதய சத்திர சிகிச்சைக்கான துறையொன்றை ஸ்தாபிப்பதற்கு நிதி திரட்டும் பொருட்டு யாழ் கைலாசபிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து சைக்கிள் பவனியொன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகியது. இதன்போதே மேற்படி சம்பவம் இடம் பெற்றது. முதலமைச்சரை சைக்கிள் சவாரி செய்ய அழைப்பு விடுத்த அமைச்சர் டக்ளஸ், உங்களுக்கு சைக்கிள் சவாரி செய்ய விருப்பம் இல்லாவிட்டால், வாருங்கள் நான் உங்களை எனது சைக்கிளில் ஏற்றிச் செல்கின்றேன். நீங்கள் முன்னுக்கும் ஏறலாம் பின்னுக்கும் ஏறலாம் எனவும் கூறினார். அதற்கு முதலமைச்சர் புன்னகையைப் பதிலாக வழங்கினார். (த-5)


**கட்டார் நாட்டில் அதிஉயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு**



கட்டார் நாட்டில் உள்ள AL MASSERA முன்னணி நிறுவனத்தில் மரத்தளபாட உற்பத்தி மற்றும் அதனை அழகுபடுத்தும் துறையில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள்

| | | |
|---|---|---|
| Carpenters | 15 | 1400 + OT |
| Spray Painters (Furniture) | 15 | 1400 + OT |
| Foreman | 10 | 1900 + OT |
| Project Co-ordinator | 05 | 2800 + OT |
| Auto Cad Draft Man | 05 | 2800 + OT |
| Project Manager | 02 | 4400 + OT |
| Draiver (Have Vehicle) Gulf Licence | 10 | 2000 + OT |
| Ac Technician (Gulf Experience) | 10 | 2200 + OT |
| Trolley Boy (New Qatar Air Port) | 25 | 900 + OT Tip |

தங்குமிடம், மருந்துவம் இலவசம்
நாளாந்த வேலை நேரம் 8 மணித்தியாலம்
மேலதிக வேலை நேரம் உண்டு கைவசம் விசா உள்ளதால்
இரண்டே வாரத்துக்குள் பயணம்

எதிர்வரும் : 16.08.2014 சனிக்கிழமை
காலை : 9.00 - 1.00 மணி வரை
Lanka Voice
இல. 16/2, புகையிரத நிலைய வீதி, வவுனியா. T.P : 024 561 5610, 076 669 7789

எதிர்வரும் : 17.08.2014 ஞாயிற்றுக்கிழமை
காலை : 9.00 - 2.00 மணி வரை
Green Grass Hotel
வைத்தியசாலை வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P : 077 952 7575

உடன்தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பதிவுசெய்து கொள்ள
Lanka Voice - Mannar, Vavuniya 076 669 7789
Lanka Voice - Jaffna 077 952 7575

AIR TRUST
Overseas Manpower Consultant
No.945 1/1, Meradana Road, Colombo-08.

**தென்னிந்திய திருத்தல யாத்திரை**

நாள்கள்-12 யாத்திரிகர்கள் - 10
ஆரம்பம்: 10.09.2014 நிறைவு: 22.09.2014.

உச்சிப்பிள்ளையார், பஞ்சபூதத் திருத்தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், ஒன்பது நவக்கிரக ஆலயங்கள், தஞ்சாவூர், இரத்தினகிரி முருகன் உட்பட 45 இற்கு குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

மேல் விவரங்களுக்கு: கலாநிதி. T. ஸ்ரீரெங்கநாதன்
T.P: 0777 680 102, 0113 030 806
முற்பகல் 10.30 - மாலை 3.30 வரை

குறிப்பு: விமான ரிக்கட், மூன்று வேளை உணவு, யாத்திரையின்போது தரமான தங்குமிட வசதி, வாகன (AC) வசதி, குடி தண்ணீர் என்பன எம்மால் வழங்கப்படும்.

(C16064)(10.6)

**பணியாளர் தேவை**

யாழ்.குடாநாட்டில் 10 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் நிறுவனத்தில் பணியாற்ற

1. இலகுரக வாகன சாரதி
2. கனரக வாகன சாரதி
3. விற்பனைப் பிரதிநிதிகள்
4. காரியாலய உதவியாளர் (பெண்)

(50868) (12.3.6)

மேலுள்ள பதவிகளுக்கு ஆர்வமுள்ளவர்கள் கீழ்வரும் முகவரிக்கு தங்களது விண்ணப்பங்களை 25.08.2014இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

வேறு மாவட்டத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

விளம்பர இல. - 5008,
மே.பா.உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

கச்சேரி நல்லூர் வீதியில் கச்சேரிக்கு அருகில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 842 1168 (50790) (45.6.3)

**பணியாளர் தேவை (இருபாலாரும்)**

[illegible]
★ விற்பனையாளர்
★ [illegible]
★ [illegible]
★ [illegible]
★ [illegible] (Software [illegible]) தேவை.
நாளை(17.08.2014) ஞாயிற்றுக்கிழமை
8 மணி - 12 மணி வரை நேரில் தொடர்புகொள்ளவும்.
[illegible]
இல.09, [illegible], ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 077 361 1282

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மாவிட்டபுரம், அரச மதவடி, நெசவு நிலைய வீதியில் 2¾ பரப்பு சதுரமான காணி விற்பனைக்குண்டு. வீடு கட்ட உகந்தது. (KKS வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் நெசவு நிலைய வீதியை முகப்பாகக் கொண்டுள்ளது) தரகர் வேண்டாம்.
077 773 8462 (சி/15379) (7.6.3)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வாழ்த்துகிறோம்**

நாளை 17-08-2014 நடைபெறவுள்ள தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் எவ்வித குழப்பமுமின்றி, தைரியத்துடன் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

வெற்றிச் சிகரம் மாதிரி வினாத்தாள்

ஆசிரியர் : S.கணேசலிங்கம் மற்றும்
யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் - கொழும்பு
தொ.பே : 077 6258778

**Mega Sale**

ARPICO DAMRO

ஆடி தள்ளுபடி
இன்றும் நாளையும் மட்டும்
என்றும் எங்கும் கிடைக்காத
அமோக விலை குறைப்பு

மங்களா காட்சியறை
536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8367 - 021 222 8366 0777 286 069

**துளசி மஹால் தொடர்மாடி வாடகைக்கு**
நல்லூர்

நாள், கிழமை, மாத வாடகைக்கு துளசி மஹால் தொடர்மாடி வீடுகள் உண்டு.
சாப்பாடும் ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்படும்.
நல்லூர் உற்சவ தினங்களையொட்டி பக்த கோடிகளுக்கு கழிவு சலுகை வழங்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு: 071 328 6890 or 021 221 9539

(C/16056)(7.6.3)

**இதோ வீட்டில் இருந்தே இணையத்தில் வருமானம் ஈட்ட அரியவாய்ப்பு**
**(Capital Markets Trading)**

குறைந்தது ஒரு நாளைக்கு 20$ முதல் 30$ வரை வருமானம். எந்த முன் அனுபவமும் தேவையில்லை.
இலவச கருத்தரங்கிற்கு முன்பதிவு செய்ய முந்துங்கள்.
(ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)
தொடர்புகளுக்கு :
076 790 7607, 077 799 7544

(48963) (7.6.3)

**எமது புதிய கிளை நிறுவனத்திற்கான உடனடி வேலைவாய்ப்பு**

அனுபவமுள்ள

- அச்சு இயந்திர இயக்குனர் ( Kord Machine Minder)
- அச்சு இயந்திர உதவியாளர் ( Kord Machine Helper )

நேர்முகத்தேர்வு : 16.08.2014 சனிக்கிழமை
மு.ப 09.30 மணி - பி.ப 02.00 மணிவரை

ANDRA PRINTERS
No.379, Kasthuriyar Road, Jaffna.
021 7200000, 0776622981

**Inter Lock Paving Stone**

நிலப்பதிப்புக்கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு
உறுதியான பல வடிவங்களில் கறுப்பு, சிவப்பு, வெள்ளை நிற நிலப்பதிப்புக்கற்களை (Inter lock) எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்



தொடர்புகளுக்கு
077 3818799

Special Discounts for Engineers

பிரணவன் என்ரபிறைசஸ்
635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.